بسم الله الرحمن الرحيم

(நபியே! அவர்களிடம்) வேதத்தையுடையோரே! நமக்கும், உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள்; (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்கமாட்டோம்; அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுத்துக் கொள்ளமாட்டோம் எனக் கூறும், (முஃமின்களே! இதன் பிறகும்) அவர்கள் புறக்கணித்து விட்டால்; "நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!" என்று நீங்கள் கூறிவிடுங்கள்.(அல்குர்ஆன் : 3:64)


## அயோத்தியா அனைவருக்கும் சொந்தம் / கவர் ஸ்டோரி - பக்கம் - 04

**பாலஸ்தீன மீட்பு போர்**
**சிதையும் இஸ்ரேல்!**
**சிறப்புக் கட்டுரை**
**பக்கம் - 12**

அக்டோபர் 07 தாக்குதல் - இறந்த 1400 நபர்களின் உடல்கள் எங்கே? மலேசிய பிரதமர் மஹாதீர் முஹம்மது கேள்வி! ....20

ஔரங்கசீப்.....! பூட்டுக்குள் பூட்டிய உண்மைகள்....30

முஸ்லிம்களுக்கு ஒரு மருத்துவ கல்லூரி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முயற்சி....47

தினகரன் நாளிதழுக்கு ஒரு கடிதம்....54

NIA/UAPAக்கு எதிரான மக்கள் இயக்கம்
உபா சட்டத்தை எதிர்த்து போராடும் "ஷாஹினாக்கு" அமெரிக்காவின் குளோபல் பிரஸ் விருது....58

## தொடர்கள்

பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - விரிவாக்கப்பட்ட புதிய தொடர்....22

மருத்துவ மாமேதை இப்னு ஸீனா குளச்சல் - அப்துல் கரீம் கட்டுரை....26

பாலஸ்தீன் மீட்பு போரில் பெண் முஜாஹிதுகள்....28

குழந்தை வளர்ப்பு - 2K கிட்ஸ் சிறுவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் சொல்லும் அறிவுரைகள்....40

மருத்துவம் - வயதானவர்களுக்கு ஏற்படும் நோய்த்தொற்று....42

சிலுவைப்போர் 2.0 - மேலைநாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்....44

இந்தியாவில் முஸ்லிம்கள் - "ஹான்காக்கள்" எனும் நிழல் அரசுகள்....62



டிசம்பர் – 2023 / ஜமாத்துல் அவ்வல் – ஜமாத்துல் ஆகிர் 1445

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication


துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

தனி இதழ்: ரூ.40 | ஆண்டுச் சந்தா – உள் நாடு: ரூ.480 / வெளி நாடு: ரூ.5000

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only




# பாபரி மஸ்ஜித்

# என்றும் நம் நினைவில்...!

# அயோத்தியா

# அனைவருக்கும் சொந்தம்..!

அஃதோர் கலாச்சார மையம் அனைவருக்கும் சொந்தமானது ஆனால் இப்போது அது ராம் மந்திர் உடன் மட்டும் சம்பந்தப் பட்டது என்பது போல் மாற்றப்படுகின்றது.

முதன் முதலில் 16ஆம் நூற்றாண்டின் மஸ்ஜித் ஒன்று வன்முறையாளர்களால் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் இப்போதைய கடவுள்கள் அமர்த்தபட்டார்கள். இஃது வரலாறு முழுவதும் எதிரொலிக்கும் அப்பட்டமான அநீதி.

எப்படி இந்து பாசிஸ்ட்டுகளும், அவர்களுக்கு பக்கத்தாளம் போடும் நீதித்துறையும் திரித்தப் வரலாறுகள் மக்களால் பின்னுக்குத் தள்ளப்படுகின்றதோ, அதேபோல் இந்த வரலாற்றுத் திரிபுகளும் பின்னுக்குத் தள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

பாபரி மஸ்ஜித் வரலாற்றில், மக்கள் மன்றத்தில் விசாரணைக்கு வரும்போதெல்லாம் நமது உச்ச நீதிமன்றம்,அந்த தீர்ப்புக்குத் தலைமைத் தாங்கிய தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், அவர் மீது ஒரு பெண் தொடுத்த வழக்கு குறித்த விசாரணை இவையெல்லாம் மீண்டும் விசாரணைக்கு வரும்.. இன்றளவும் சட்டத்தின் முன், நீதியின் முன் அதுதான் ராமர் பிறந்த இடம் என நிரூபித்திடவில்லை.

நீதிமன்றங்கள் தோறும் “எங்களால் வரலாற்று ஆவணங்கள் வழியாகவோ, நீதிமன்றங்களுக்குத் தேவையான ஆவணங்கள் வழியாகவோ நிரூபிக்க இயலாது. அதுதான் இராமர் பிறந்த இடம் என்பது எங்கள் நம்பிக்கை அவ்வளவுதான்,” என்றே சொல்லி இருக்கின்றீர்கள்.

அநீதியை அஸ்திவாரமாகக் கொண்ட ஒரு வரலாற்றுத் தடத்தைத் தான் இன்றைய பாசிஸ்டுகளும் அவர்கள் எழுப்பும் கோஷங்களும், கட்டி எழுப்பும் கோபுரங்களும் சுமக்கும். கடவுளுக்கு ஒரு கட்டடத்தைக் கட்டி எழுப்பும் போது அது நீதியின் அடிப்படையில் அமைந்திட வேண்டும். அது அநீதியின் அடிப்படையில் ஆனதாக இருக்கக் கூடாது என்ற அடிப்படை இங்கீதம் கூட பேணப் படவில்லை என்பது ஊரறிந்த பாரறிந்த உண்மை! வரலாறு முழுவதும் அது பழியைத்தான் சுமக்கும்!

அயோத்தியாவோடு பாபர் மஸ்ஜித், முஸ்லிம்களின் கலாச்சாரம், பண்பாடு, பெருந்தன்மை, மத சகிப்புத்தன்மை இவை மட்டும் சம்பந்தப்படவில்லை. புத்த பிட்சுகள் தங்கி பௌத்த மத பிரச்சாரகர்களை உருவாக்கிய மடங்கள் பல அங்கே உண்டு. பௌத்த மதத்தின் வழிபாட்டுத் தலங்கள், அதன் பண்பாடுகள், அவற்றின் அடையாளங்கள் அங்கே உண்டு.

இந்தியாவில் சிறுபான்மையினர் என்றால் ஜைனர்கள் தான். பீற்றிக் கொள்கின்றார்கள் இந்திய பாசிஸ்டுகள். இந்த ஜைனர்களின் பண்பாட்டுச் சின்னங்கள் அயோத்யாவில் உண்டு. இப்படி

**“எல்லா உண்மைகளும், நீதி நியாயங்களும் இந்தியாவில் அழிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மை ஒருபோதும் அழியாது. சத்தியம் வரும் அசத்தியம் அழியும்! அசத்தியம் அழிந்தே தீரும்... இன்ஷா அல்லாஹ்!”**

எத்தனையோ பண்பாடுகள், கலாச்சாரம் அங்கே சங்கமம். இப்போது அது ஒற்றை கலாச்சாரத்தின் அடையாளமாக ஆக்கப்படும் போது, ஏனைய பண்பாடுகளும், அவற்றின் அடையாளங் களும், அவற்றை நிலை நிறுத்தும் கட்டடங் களும் அழிக்கப் படுகின்றன திட்டமிட்ட சதிகளின் கீழ். அதுவும் அரசின் செலவின் கீழ்!

### படி புவா யத்தீம் கானா - அநாதைகள் இல்லம்

அங்கே அயோத்தியாவில் ஆயிரமாயிரம் ஏழைகளுக்கு உணவளிக்கும் உஜீபன கூடம் மாளிகை ஒன்று வானளாவ உயர்ந்து நிற்கின்றது. அதன் பெயர் தான்,

“படிபுவா - யத்தீம் கானா” அநாதைகளுக்கு அபயம் தரும் இல்லம்.


படிபுவாகா - யத்தீம் கானா

இது வரலாற்றின் தொன்மை காலம் தொட்டே மதங்களைக் கடந்து, ஜாதிகளைக் கடந்து காய்ந்த வயிறுகளுக்கெல்லாம் கஞ்சி வார்த்த இல்லம். கும்பி நிறைந்தவர்கள் கூடி வாழ கோலாகல வசதியுமிடங்கள் அங்கே உண்டு. இது இஸ்லாத்தை வாழ்க்கை வழியாக கொண்ட முஸ்லிம்களின் தானம்.

### சிறிய மக்கா

அதேபோல் குரத் மக்கா அல்லது மினி மக்கா. சிறிய மக்கா என்றொரு இடமிருக்கின்றது. இதுவும் இஸ்லாமிய விழுமியங்களை உரக்க முழங்கிடும் ஓர் இடம். இப்படி பல மத நம்பிக்கைகளை தன் அகத்தே கொண்ட ஒரு மாடம் அயோத்தியா. இவற்றையெல்லாம் பராமரிக்க பணம் தந்திடாமல் பட்டுப் போகச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அயோத்தியாவின் பன்முகத்தன்மையைப் பறைசாற்றும் இந்தக் கட்டடங்கள் பாழடைந்து வருகின்றன. அது இராமரோடு மட்டும் சம்மந்தப்பட வேண்டும் என்றொரு வெறி!

### அஃபீம் கோத்தி

அயோத்தியாவின் நடுவில் நட்டு வைக்கப் பட்டது போல் ஒரு கட்டடம் நிமிர்ந்து நிற்கின்றது. அதன் பெயர் அஃபீம் கோத்தி *(Afeem Kothi)* தமிழில் மொழி பெயர்த்தால் "அபின் மாளிகை"'.

உண்மையில் அது, ஆங்கிலேயர்களை கடைசிவரை போர்க்களத்தில் வாகைகண்டு பின்னர் வஞ்சகர்களால் வஞ்சிக்கப்பட்ட முகலாய நவாப் ஷுஜாவுத் தவ்லா *(Shuja ud Dawla)* அவர்களின் காரியாலயம். இவர் ஆவத் பகுதியின் (நவாப்) ஆட்சியாளர். *(1723-25)*

நவாப் ஷுஜாவுத் தவ்லா என்றால் ஆங்கிலேயர்கள் குலை நடுங்குவார்கள் என்ற அளவுக்கு வீர வரலாறு படைத்தவர். பின்னர் தங்கள் ஆதிக்கம் அங்கே நிலைத்த போது ஆங்கிலேயர்கள், தங்கள் ஆதங்கத்தை அள்ளிக் கொட்டும் விதமாக கிட்டிய பெயர் தான் அபீம் கோத்தி. அந்த மாளிகையில் வைத்து "அபின்" ஐ விற்பனை செய்தார்கள்.

எல்லா மதத்தையும் சார்ந்த இளைஞர் களையும் போதையில் ஆழ்த்தி, ஆங்கிலேயர் களை எதிர்ப்பதிலிருந்து அவர்களைத் திசைத் திருப்பிவிட்டார்கள் இது ஆண்டாண்டு காலமாக, ஆங்கில ஆட்சியாளர்கள், கடைபிடித்து வரும் ஒரு தரம் தாழ்த்தும் உத்தி.

இந்திய விடுதலைப் போரில் ஆங்கிலேயர் களுக்கு அடிவருடிகளாகவும், ஆட்காட்டிய வர்களாகவும் வாழ்ந்த இந்திய ஃபாசிஸ்டுகள் இன்றைய ஆட்சியாளர்கள் அந்த மாளிகையை இன்று, போதைப் பொருள் கட்டுப்பாட்டுத் துறையின் அலுவலகமாக மாற்றி வைத்திருக்கின்றார்கள். *("Narcotics Control Bureau")*.

### அயோத்தியாவை பெயர் துலங்க வைத்தவர் ஷுஜாவுத் தவ்லா(ரஹ்)

அயோத்தியாவை முதன்முதலாக தலை நகராக ஆக்கியவர் ஷுஜாவுத் தவ்லா, அங்கே தான் அவருடைய அரசு மாளிகை இருக்கின்றது.

மாவீரன் ஷுஜாவுத் தவ்லா அவர்களின் மாளிகையைச் சுற்றி 4.5 (4 1/2) ஏக்கரில் ஒரு முகலாயத் தோட்டம். அந்தத் தோட்டத்தின் அழகை - வனப்பை அப்படியே சிதைத்து விட்டார்கள். அத்தோடு அதை அழகுப்



ஷுஜாவுத் தவ்லா அவர்களின் அடக்கஸ்தலம்



ஷுஜாவுத் தவ்லா

படுத்திக் கொண்டிருந்த மரங்களையும், தளைகளையும் கொன்றே விட்டார்கள். இப்போது சில காட்டுச் செடிகள் மட்டுமே அங்கே வளர்ந்து படர்ந்து கிடக்கின்றன.

மாளிகையும் தூர்ந்து வீழ்ந்து கொண்டிருக்கின்றது. கதவுகள் எப்போது வேண்டுமானாலும் வீழும் என்ற நிலையில் இருக்கின்றன. கட்டடய சாயமும் பூத்து கலை இழந்து காணப்படுகின்றது.

அன்று மிளிர்ந்து கொண்டிருந்த இந்தக் கட்டிடத்திற்கு "தில் குஷா பைஜாபாத்" என்று பெயர். அதாவது "பைஜாபாத்தின் ஒளி" என்று பெயர். பைஜாபாத் அன்றைய அயோத்தியா வின், இரண்டு முக்கிய நகரங்களில் ஒன்று.

*1764*இல் நடந்த பக்ஸ்சர் விடுதலைப் போருக்குப் பின் சிதைக்கப்பட்டது. *(Battle of Buxar 1764).*

பல போர்களில் ஆங்கிலேயர்களை வென்று காட்டிய நவாப் ஷுஜாவுத் தவ்லா அவர்கள் இந்த பக்ஸர் போரில் ஆங்கிலேய எதிரிகளால் வீழ்த்தப்பட்டார். அவர் வாழ்ந்த அந்த மாளிகை, அன்று பெரிதாக பேசப்பட்ட லாஹூரி செங்கற்களால் *(Lakhori Bricks)* கட்டப்பட்டது. இன்றும் அந்த செங்கற்கள்



பைஸாபாத் தெருக்களின் வரைபடம்

பலம் குன்றாமல் இருக்கின்றன, தூர்ந்த மாளிகையை தூக்கிப் பிடிப்பனவாக! நாங்கள் இடிக்கவில்லை அவை தாமாகவே வீழ்ந்தன என்பதற்காகவே இந்த வரலாற்றுத் தடங்களைப் புதுப்பிக்காமல் விட்டு வைத்திருக்கின்றார்கள்.

இந்த வரலாற்றுத் தடங்களும் அவற்றோடு பின்னிப்பிணைந்த இந்திய விடுதலைப் போர் வரலாறும் மாய்ந்து மறந்துபோக வேண்டும் என்பது, இவர்களின் நீண்ட நாள் ஆசை. காரணம் விடுதலைப் போரில் இவர்களுக்கு ஒரு துரோகத்தின் வரலாறு மட்டுமே மிச்சம்.

விடுதலைப் போர் வீரர் நவாப் ஷுஜாவுத் தவ்லா அவர்களின் உடல் அடக்கம் செய்யப் பட்டது "குலாப்பாரி" என்ற இடத்தில். "ரோஜாப் பூத்தோட்டம்" என்பது அந்த இடத்திற்கு மக்கள் சூட்டி மகிழும் பெயர். அந்த இடமும் அதில் எழுப்பப்பட்டுள்ள வனப்பான கட்டடமும் இஸ்லாமியக் கட்டடக் கலையின் பிம்பங்கள் ஆகும். கலைகளைப் பிரதிபலிக்கும் அளவில் ஓர் மைதானம் அந்த மைதானத்தின் வாயிலில் இரண்டு பெரிய தூண்கள். அவற்றில் வனையப்பட்டிருக்கும் கண்கவர் வேலைப்பாடுகள் மக்கள் கூட்டத்தை கவர்ந்திழுக்கும். அன்று இந்த மைதானத்தின் வனப்பில்தான் எல்லா மத நம்பிக்கைகளையும் கொண்டவர்கள் தங்கள் கலாச்சார நிகழ்வுகளை நடத்துவார்கள், கூடுவார்கள், கொண்டாடுவார்கள், குதூகலித்துக் கிடப்பார்கள்.

பூம்பொழில் நிறைந்த இந்த பெரிய மைதானத்திற்குப் பல வாயில்கள். ஒவ்வொரு வாயிலிலும் அழகிய கோபுரம், அதன் வழி நுழைவாயில். இவற்றிற்கு டீன் டாரா என்று பெயர். இவையெல்லாம் அன்று நவாப்-இன் கீர்த்தியைப் பறைசாற்றின. இன்று இடுபாடுகளாய்க் கலை இழந்து நிற்கின்றன.

### மோத்தி மஹால்

ஷுஜாவுத் தவ்லாவின் மனைவி "பாகு பேகம்", அவர் வாழ்ந்த மாளிகை மோத்தி மஹால். நன்றாக அலங்கரிக்கப்பட்ட மாலை போன்ற மலர்த் தோட்டங்களால் சூழப்பட்டது.

"ஆவத்" ஆட்சிப் பகுதியில் தலைநகரம் அயோத்தியாவிலிருந்து "லக்னவ்"-க்கு மாற்றப் பட்டபோது, மகாராணி "பாகு பேகம்" லக்னவ் செல்லவில்லை. அயோத்தியாவிலேயே தங்கி விட்டார். அயோத்தியாவின் "கல்கத்தா" கோட்டையில் *"Fort Calcutta"* வாழ்ந்தார். இந்தக் கல்கத்தா கோட்டையை, "சோட்டா கல்கத்தா கோட்டை" என்றும் அழைப்பார்கள். நவாப் ஷுஜாவுத் தவ்லாவும், அவருடைய மரணம் வரை இங்கே தான் வாழ்ந்தார். அவர் தனது 43ஆம் அகவையில் மரணித்தார். இன்னாலில்லாஹி வ இன்ன இலைஹி ராஜிவூன்.

"ஆவத்" என்ற பெயரே அயோத்தியா விலிருந்து வந்தது தான். அது இன்றைய உத்திரபிரதேசத்தின் வடகிழக்குப் பகுதியினை உள்ளடக்கியது. *(North Eastern Uttarpradesh)*

### விடுதலைப்போரில் வீர மரணமடைந்தவர்கள்

உத்திரபிரதேசத்தின் ஆவத் பகுதியில் இந்திய விடுதலைப் போரில் உயிர் நீத்த பல மகான்களின் கப்ரிஸ்தான் என்ற அடக்கஸ் தலங்கள் பரவி கிடக்கின்றன. அதேபோல் இஸ்லாத்திற்காகத் தங்களைத் தந்தவர்களின் பெயரால் எழுப்பப்பட்ட நினைவிடங்கள், வானளாவ உயர்ந்து நிற்கும் கட்டடங்களாகக் காட்சித் தரும். இதில் இஸ்லாமியக் கட்டடக் கலையின் கைவினைப்பாடுகள் மிளிரும்.

அரசப் பரம்பரையின், ஆண்ட பரம்பரையின் எச்சங்கள் கட்டடங்களாக படோடோபங்களாக உயர்ந்து நிற்கும்.


ஹனுமான் கார்க்கி கோயில்

இன்றைக்கும் உத்திரப்பிரதேசத்தின் தெருக் கூத்து பாடல்கள், முஸ்லிம் ஆட்சியாளர்களின் அதாவது நவாப்களின் பெருங்கொடை களையும், அவர்கள் கோயில்களை மீட்ட வரலாற்றையும், வழங்கிய மானியங்களின் வரலாற்றையும் பேசிக் கொண்டே இருக்கின்றன.

### ஹனுமான் கார்க்கி

அயோத்தியாவில் ஹனுமான் கார்க்கி என்ற கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. அந்த இடத்தையும், அந்த கோயிலையும், அதன் கருவூலத்தையும் கொள்ளையடிக்க வந்தவர் களிடம் இருந்து அந்தக் கோயிலையும், அதன் கருவூலத்தையும் காப்பாற்றிய வீர ஷுஜாவுத் தவ்லாவின் கீர்த்தியை வீதிதோரும் பாடிக் கொண்டும், பேசிக் கொண்டும் இருக்கின்றார்கள் நாட்டுப்புறப் பாடல் கலைஞர்கள்.

ஹனுமான் கார்க்கி என்ற கோயில் பதினெட்டாம் நூற்றாண்டில் நிர்மானிக்கப் பட்டது. அதனைக் கட்டிட இடமும், பணமும் தந்தவர்கள் ஷுஜாவுத் தவ்லாவும் அவருடைய தந்தை சஃப்தர் ஜங்க் அவர்களும் தான்.

இந்த வரலாறுகளை எல்லாம், மேலே நாம் வரையிட்டுக் காட்டிய வரலாறுகள் உட்பட இல்லாமல் ஆக்கிடும் பெரும் முயற்சி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் உத்திரபிரதேசத்தின் நாட்டுப்புற பாடல்கள் இவற்றினைப் பற்றி வாய்வழிச் செய்தியாகவே 400 ஆண்டுகளாக சொல்லி வருகின்றது.

நாட்டுப்புறக் கலைஞர்கள் இந்த வகையில் ஓர் ஒப்பற்ற மத நல்லிணக்கச் சேவையை

உத்திரப்பிரதேசம் முழுக்க சொல்லி வருகின்றனர். அயோத்யாவின் வரலாற்றை எதிர் வரும் தலைமுறையிடம் சேர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

## பல கலாச்சாரங்களின் சங்கமம் அயோத்தியா

கிருஷ்ண பிரதாப் சிங் என்ற ஆய்வாளர் கூறுகின்றார், அயோத்தியாவை ஆவத் ஆட்சிப் பகுதியில் தலைநகராக ஆக்கியவர் ஷுஜாவுத் தவ்லா. அந்த நாளில் அது, பல்வேறு கலாச்சாரங்கள் சங்கமிக்கும் இடமாக இருந்தது. (குறிப்பாக) இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவரோடு ஒருவர் நித்திய வாழ்க்கையில் பின்னிப்பிணைந்து வாழ்ந்தார்கள். எடுத்துக்காட்டாக பல கோயில்களின் அருகில் பூக்கடை வைத்து பூக்களை விற்பவர்கள் முஸ்லிம்கள்.

இந்துக்கள் நடத்தும் ஊர்வலங்களில் குதிரைகள் அதிகமாக பயன்படுத்தப்பட்டன, அவற்றின் உரிமையாளர்கள் முஸ்லிம்கள்.

அயோத்தியாவில் பல சூஃபியாக்களின் தர்காக்கள் இருக்கின்றன. இவற்றில் மக்களிடம் அதிகமாக பிரபல்யமாக இருந்தது(Hargara) ஹர்காரா என்னும் இடத்தில் உள்ள செய்யீத் இபுராஹிம் ஷா தர்கா. இந்த தர்காவில் எல்லா மதத்தவர்களும், இந்துக்களும், முஸ்லிம்களும் நிரம்பவே வந்து குழுமுவார்கள்.

பாபரி மஸ்ஜிதை இடித்தபோது இந்த தர்காக்களில் பலவற்றையும் இடித்து விட்டார்கள். மீதி உள்ள வரலாற்றுத் தடங்களை பொருத்தவரை அரசின் சார்பில் ஒதுக்கப்பட்ட நிதி, நிர்வாகிகளை வந்து எட்டவில்லை. அதனால் அவையும் காலத்தால் அழியட்டும் என விட்டு விட்டார்கள். கைக்கு வந்த பணத்தை ஏப்பமிட்டார்கள்.


படீ புவா அடக்கஸ்தலம்

## ஒரு முஸ்லிம் சகோதரியின் ஒப்பற்ற தர்மம்

ஏழைகளுக்கு உணவும், வாழ்வும் அளித்த படீ புவா -அநாதைகள் இல்லம், பைஜாபாத் நகரம், அயோத்தியா நகரம் ஆகியவற்றின் நடுவில் வீற்றிருக்கின்றது. இந்த அநாதைகள் இல்லத்தை நிர்மானித்து, அதன் அன்றாட செலவுகளுக்காக ஏராளமான மானியத்தை வாரி வழங்கியவர், காஜா நசுரீத்தீன் (1274-1337)என்ற சூஃபியாவின் சகோதரி. அன்றைய நாட்களில் இந்த சகோதரியை "கொடை வள்ளல்" என்றே மக்கள் அழைத்தார்கள். ஏழை எளிய மக்களுக்கு ஏராளமாக வாரி வழங்கியவர். சூஃபி காஜா நசுரீத்தீன் அவர்களை, "சிராஜ் டெல்லி" - "டெல்லியின் ஒளி" என்று மக்கள் நெஞ்சில் வைத்துப் பாராட்டினார்கள்.


இவருடைய சகோதரி வாரி வழங்கிய நிதியிலிருந்து 300 ஏழைகள் இலவசமாக கல்வியைப் பெற்றார்கள். இப்போது இந்த அநாதைகள் விடுதி நிதி நெருக்கடியில் சிக்கயிருக்கின்றது. நிதி நெருக்கடியைச் சொல்லி ஆதங்கப்படுகின்றார் அந்த அநாதைகள் விடுதியின் தற்போதைய நிர்வாகி முஹம்மது ஜஹிர்.

கொரோனா காலத்தில் பட்டினியே எங்களுக்கு உணவாக இருந்தது என ஆதங்கப்படுகின்றார்.

## அயோத்தியாவின் இதர கோயில்கள்

சராயூ நதிக்கரையில் ஏராளமான கோயில்கள் தங்களை வரிசைப்படுத்தி கொண்டுள்ளன. இவையெல்லாம் அங்கு அதாவது அயோத்தியாவை தலைநகராகக் கொண்ட ஆவத் பகுதியில் ஜாதிகளைக் குறிப்பவை.

ஜாதிக்கொரு கோயில் அங்கே படை எடுத்தன. காரணம் உயர் ஜாதியினர், (ஆதிக்க சாதியினர்) கோயில் பிரவேசம், கீழ் ஜாதியினருக்கு இல்லை என தடுத்தபோது பிரவாகம் எடுத்தவை இந்தக் கோயில்கள். இப்படி எழுந்த கோயில்கள், நிசாத் கோயில், வண்ணார் கோயில், சாம்பவர் கோயில், தாக்கூர் கோயில், பாட்னா கோயில் என



ஹர்காரா - செய்யீத் இபுராஹிம் ஷா தர்கா

நீளுகின்றன. ஒவ்வொரு கோயிலுக்கும் ஓர் தனித்துவம் உண்டு எனப் பேசப்படுகின்றது.

அவை நாட்டுப்புறப் பாடல்களாகவும் பாடப்படுகின்றன. மக்களைச் சுற்றி வந்து கொண்டே இருக்கின்றன.

இந்த கோயில்களில் உள்ள பூசாரிகளும், நிர்வாகிகளும் ஒன்று போலவே இராம் மந்திர்-ஐக் கண்டு அஞ்சுகின்றார்கள். காரணம் எல்லா பக்தர்களும், அங்கே சென்றுவிட்டால் இந்தக் கோயில்களின் வருமானம் குறைந்து போகும் என்பதே! இந்தக் கோயில்கள் தாம் உண்மையானவை என மக்கள் நம்புகின்றார்கள்.

## பெண்களை கொடுமைப்படுத்தும் பூமி அயோத்யா

அத்தோடு இன்னொரு குழப்பமும் இருக்கின்றது. அது இராமாயணத்தோடு சம்பந்தப்பட்டது. இந்துத்துவவாதிகள் இராமரை எடுத்துக் கொண்டதைப் போல், அயோத்தியாவில் புழக்கத்தில் இருக்கும் நாட்டுப்புற பாடல்கள், அந்தப் பாடல்களைப் பாடும் பாமர மக்கள் இராமரை எடுத்துக் கொள்ளவில்லை.

எடுத்துக்காட்டாக, நேபாள் நாட்டு ஜானக்பூர் என்ற இடத்தைச் சார்ந்தவர்கள் காலாகாலமாக ஓர் ஐதீகத்தைச் செயல்படுத்தி வருகின்றார்கள். அது அவர்கள் அன்றிலிருந்தே அயோத்தியாவுக்குப் பெண் கொடுப்பதில்லை. காரணம், சீதாபிராட்டியார் இந்த ஜானக்பூரில் தான் பிறந்தாராம். அவர் இராமரைத் திருமணம் செய்து கொண்டு தன் கணவர் இராமரால் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டாராம். அதனால் பெண்களை கொடுமைப்படுத்தும் பூமி அயோத்யா என்றொரு ஐதீகம், நம்பிக்கையாக வளர்ந்திருக்கின்றது.

அதேபோல் இன்னொரு காதை, இராமரின் பிறப்பின் போது நடந்த களியாட்டங்களின் போது, ஓர் ஆண்மான் கொலை செய்யப் பட்டதாம். அந்த மானின் தோலைக் கொண்டு ஓர் “கொட்டு/தபேலா” தயார் செய்தார்களாம். அந்தத் தபேலாவை தட்டும்போது அந்த ஆண்மானின் மனைவி (பெண்மான்) என் கணவரைக் கொடுமைப்படுத்துகின்றார்கள், எனச் சொல்லி அழுமாம்.

இன்றைய நாட்களிலும் தபேலாவை யார் தட்டினாலும் அந்தப் பெண் மான், தன் குட்டிகளிடம் என்னை அடிக்கின்றார்கள் என அங்கலாய்க்குமாம். அது என் கணவரை திரும்பத் திரும்ப கொல்லுகின்றார்கள் என அழுமாம்.

இந்தக் காதை எல்லாம், நாட்டுப்புற பாடல் வடிவம் பெற்று அயோத்யா முழுவதும் வலம் வருகின்றன. மகப்பேறுகளைக் கொண்டாடும் போதெல்லாம், இந்தப் பாடல்களும் பாடப்

படுகின்றதாம். இந்தக் காதையெல்லாம் இந்துத்துவ வாதிகள் கட்டும் காதைகளுக்கு எதிரானவை.

### பௌத்தக் கலாச்சாரம்

"பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள், எங்கள் கலாச்சாரம் தான் அயோத்யா" என்கிறார்கள். அயோத்தியாவில் ஒரு காலத்தில் சஹித்தா - Saketa என்றொரு இடம் இருந்தது. இது அன்றைய ஆவணங்களிலும் இருக்கின்றது. அன்றைய நாட்களில் இது மிகவும் முக்கியமானதொரு நகரம். இந்த இடம் புத்தருடைய தந்தை சித்தோத்தினாவின் ஆட்சிக்காலத்தோடு தொடர்புடையது. பௌத்த நம்பிக்கையின் அடிப்படையில் கௌதம புத்தர் தன்னுடைய வாழ்வின் போது மழைக்காலங்களை அயோத்யாவில்தான் செலவிட்டார். அப்போது புத்த மதத்தை அவர் போதித்துக் கொண்டிருந்தார். ஆகவே அயோத்யா கலாச்சார பூமிகளில் ஒன்று என்கின்றார்கள்.

### புத்த மதத்தைச் சார்ந்தவர்களின் வழக்கு

2018 ஆம் ஆண்டில், வினீத் குமார் மொரிய்யா என்பவர். பாபரி மஸ்ஜித் அதைச் சுற்றியுள்ள இடங்கள், எல்லாமே பௌத்தர் களுக்கே சொந்தம் என்றொரு வழக்கைப் பதிவு செய்தார்.

வினீத் குமார் மொரிய்யாவின் கூற்றுப்படி பௌத்த கோயில்கள் எல்லாம் இந்துக் கோவில்களாக மாற்றப்பட்டு விட்டன. பௌத்த சிலைகளை மாற்றி விட்டு, அங்கே இந்துச் சிலைகளை வைத்து விட்டார்கள். ஹனுமான் கார்க்கி என்ற கோவிலிலும் இதுவே நடந்தது. இந்தக் கோவிலில் பல பௌத்த அடையாளங்கள் இருக்கின்றன என்கின்றார். அவர் பாபரி மஸ்ஜித்-ஐயே பௌத்த கோவிலை இடித்து விட்டு கட்டியது தான் என்கின்றார் தன் மனுவில்.

சீனாவின் எழுத்தாளர்கள் (Fa.Hien) ஃபா ஹியின், (Hiuen Tsang) ஹயுன் டிசாங் ஆகியோர் தங்கள் பயண குறிப்புகளில் அயோத்யா ஒரு பௌத்த மையம் என்று குறிப்பிடுகின்றார்கள்.

இன்று ஜைனர்கள், பௌத்தர்கள் அயோத்யாவின் மக்கள் தொகையில் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கின்றார்கள். அவர்களின் புராதன அடையாளங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன.


பன்முகத் தன்மை கொண்ட கலாச்சாரங் களையும், அவற்றின் தொன்மை கால அடையாளங்களையும் காத்திருக்க வேண்டிய தொல்லியல் ஆராய்ச்சிகள் காவிமயமாகி, கையாலாகாதவர்களின் கைகளில் சிக்கி சீரழிந்து போனது. தொன்மைகளை அழித்ததில் இந்திய தொல்லியல் ஆராய்ச்சி கழகத்திற்கு அதீத பங்குண்டு!

எல்லா உண்மைகளும், நீதி நியாயங்களும் இந்தியாவில் அழிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மை ஒருபோதும் அழியாது.

சத்தியம் வரும் அசத்தியம் அழியும்..! அசத்தியம் அழிந்தே தீரும்...! இன்ஷா அல்லாஹ்!

*Source : Ayothya Documents FL : DECIS, 2023)*

***- MGM***

வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்
விலை 90/-
போன் : 7401213394
7358278146 / 8148129887



# பாலஸ்தீன மீட்புப் போர் சிதையும் இஸ்ரேல்...!

சிறப்பு கட்டுரை

இஸ்ரேலிய ராணுவத்தினரே இஸ்ரேலிய குடிமக்களை கொலை செய்திருக்கிறார்கள். இஸ்ரேலிய ராணுவத்தினரே இஸ்ரேல் கொண்டுவந்து அமர்த்திய குடியிருப்புகளின் மேல் குண்டுகளை வீசியுள்ளனர். ஆனால் அதில் குறிப்பிடத்தக்க விஷயம், ஹமாஸ் சகோதரர்கள் அந்த மக்களை காப்பாற்ற முயற்சி செய்திருக்கிறார்கள். இத்தனையும் அக்டோபர் ஏழாம் தேதி நடந்தது.

ஹமாஸ் காஸா பகுதிக்கு வெளியே உள்ள இஸ்ரேலிய பகுதிகளை விடுதலை செய்ய வந்தபோது, அந்த யூத மக்களிடம் நல்ல விதமாகவே பேசி இருக்கிறார்கள்.

"நாங்கள் மிகவும் பத்திரமாக உங்களை காஸா பகுதிக்குள் அழைத்துச் செல்வோம். உங்களை விருந்தாளிகளாக நாங்கள் பாதுகாத்துக் கொள்வோம்" என்று கூறியிருக்கிறார்கள். பல மணி நேரங்கள் இந்த பகுதியில் இருந்த மக்கள், பிணைக் கைதிகளாக இருந்திருக்கிறார்கள். அவர்களிடம் நல்ல விதமாகவே பேசி இருக்கிறார்கள், ஹமாஸ் சகோதரர்கள். அவர்களுக்கு எந்த பிரச்சனையும் இருக்கவில்லை.

திடீரென்று விழித்துக்கொண்டு வந்த இஸ்ரேலிய இராணுவம் சரமாரியாக சுட்டிருக்கிறது. தங்களுடைய குடிமக்களையே சுட்டிருக்கிறது. சிலர், பாலஸ்தீன போராளிகளும் இறந்தார்கள் என்றும் கூறுகிறார்கள். அதுவரைக்கும் எங்களுக்கு இருந்த நிம்மதி இஸ்ரேலிய இராணுவம் வந்தவுடன் இல்லை என்று ஆகிவிட்டது என்று கூறியிருக்கிறார்கள் பிணை கைதிகளாக ஹமாஸ் வைத்திருந்தவர்கள்.

அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு சுட்டார்கள், குடியிருப்புகளின் மேல் குண்டுகளை வீசினார்கள். அவர்களே கொண்டுவந்து அமர்த்திய குடியிருப்புகளின் மேல் குண்டுகளை வீசினார்கள். அந்த மக்கள் எல்லாம் உள்ளே இருந்தார்கள், அழிந்தார்கள். அவர்கள் தான் இடிபாடுகளுக்கு இடையிலே இருக்கிறார்கள். இத்தனையையும் கூறி, இந்த பாலஸ்தீன போராளிகள் எங்களை இஸ்ரேலிய ராணுவத்திடமிருந்தே காப்பாற்றுவதற்கு போராடினார்கள் என்பதையும் கூறி அந்த சகோதரி மேலும் கூறுகிறார், இந்த இஸ்ரேலிய ராணுவம் தான் அன்றைக்கு நடந்த மரணங்களுக்கு முழுக்க முழுக்க பொறுப்பு என்று. இந்த சகோதரியின் பெயர் ஜாஸ்மின் போராட், அன்றைக்கு அவரை ஹமாஸ் சகோதரர்கள் விட்டுவிட்டார்கள், பிணைக் கைதியாக கொண்டு செல்லவில்லை.

அன்றைக்கே இஸ்ரேலிய வானொலிக்கும், பல்வேறு சமூக வலைதளங்களிலும் அதோடு பல எலக்ட்ரானிக் மீடியாக்களுக்கும் பேட்டிகளை இவர் கொடுத்து இருக்கிறார். அந்த பேட்டிகள் எதுவும் வெளிவரவில்லை. பதினாறாம் நாள் இந்த செய்திகள் எல்லாம் அரசல் புரசலாக வெளிவர ஆரம்பித்தன. இப்போதைய அளவில் அவை உலகமெங்கும் பேசப்படுகிறது. இஸ்ரேலிய ராணுவம் தான் அன்று நடந்த இஸ்ரேலியர்களின் மரணங்களுக்கு காரணம். குழந்தைகள் உட்பட. அவர்களது சொந்த குடியிருப்புகளில் இருப்பவர்களின் மேலே குண்டுகளை போட்டிருக்கிறார்கள். இந்தப் பாவிகளிடமிருந்து எப்படியாவது இந்த மக்களை காப்பாற்றியாக வேண்டும்,இல்லையேல் நாமல்லவா கொலை செய்து விட்டோம் என்று கூறி விடுவார்கள் என்று ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலியர்களிடமிருந்து அந்த மக்களை காப்பாற்றுவதற்கு போரிட்டிருக்கிறார்கள்.

ஆக அந்த சகோதரி என்ன கூறுகிறார் எனில், அக்டோபர் 7இல் என்ன நடந்தது என்பதை ஒரு முழு விசாரணைக்கு உட்படுத்தினால் இஸ்ரேலிய ராணுவத்தை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டியது வரும், நெதன்யாஹூவும் அதற்கு உட்பட்டு உள்ளே வருவார். இப்பொழுது நெதன்யாஹூ எந்த ஆவணங்களைக் கண்டுபிடித்து அழிக்கிறார் என்றால், இது சம்பந்தமான ஆவணங்களைத் தான் அழிக்கிறார்.

இந்த சகோதரியின் பேட்டியே அரசல் புரசலாக வெளியே வந்து, பாதி துண்டாடப்பட்டு, பிறகு இஸ்ரேலிய பத்திரிக்கை ஒன்று ஹீப்ரு மொழியில் அதனை வெளியிட்டு, இப்பொழுது தான் அது முழுமையாக வெளியே வந்திருக்கிறது. இதுதான் எதார்த்தத்தில் நடந்தது.

இப்பொழுது இது விவாதத்தில் இருக்கும் போதே இஸ்ரேல் கண்ணை மூடிக் கொண்டு காஸாவின் மீது குண்டுகளை வீசுவதை நிறுத்த வில்லை.

குழந்தைகளையும் அப்பாவிகளையும் அதாவது இதனுடன் முற்றிலும் சம்பந்தம் இல்லாதவர்களை கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆயினும் அமெரிக்காவும், பிரான்சும், யுனைடெட் கிங்டமும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கிறது.

இது இப்பொழுது பலமாக எதிரொலிக்க ஆரம்பிக்கிறது. குறிப்பாக நமது கத்தார் உடைய அமீர், உங்களுக்கு ஒன்றும் வரையறையற்ற லைசன்ஸ் தரவில்லை காஸா பகுதி மக்களை கொலை செய்வதற்கு, ஐக்கிய நாடுகள் சபை என்ன செய்து கொண்டிருக்கிறது? என்று கேட்டிருக்கிறார்.

### மூச்சுத் திணறும் முற்றுகை!

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், ஹமாஸ் வெறுமனே தாக்கவில்லை 56 ஆண்டுகளாக, மூச்சுத் திணறக்கூடிய அளவிலான இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராகத்தான் சண்டை போடுகிறார்கள். அவர்கள் 56 ஆண்டுகளாக பயங்கர நெருக்கடியில் இருந்தார்கள் அதற்கு எதிராகத்தான் சண்டையிடுகிறார்கள். உடனே இஸ்ரேலில் உள்ளவர்கள் எல்லாம் ஐ.நா.வின் பொதுச் செயளாலரை பதவி விலக வேண்டும் இவருக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்றெல்லாம் கூறுகிறார்கள்.

### யுத்தம்

இனி நாம் யுத்த களத்தின் பக்கம் பார்த்தால், இஸ்ரேல் இன்னும் அடி வாங்கிக் கொண்டுதான் இருக்கிறது என்பது தான் உண்மை.

அதாவது காஸா பகுதியில் இருந்து புது விதமான ட்ரோன்கள் எல்லாம் வருகின்றன இப்பொழுது. இஸ்ரேலின் தலைநகரான டெல்

அவிவில் அவைகள் விழுந்திருக்கின்றன அந்த பகுதியை சார்ந்த மக்கள் எங்களுக்கு எந்த நிம்மதியும் இல்லை என்று கூறுகிறார்கள்.

அங்கே ஒரு பகுதியில் போர் நடக்கிறது, ஹமாஸ் தொய்வில்லாமல் சண்ட்டையிட்டுக் கொண்டிருக்கிறது. அடுத்து இந்த சைரன் என்ற எச்சரிக்கை ஒலி கேட்டுக்கொண்டேதான் இருக்கிறது. எந்த அளவிற்கு என்றால் ராக்கெட்கள் நிற்கவேயில்லை, ஒருவித பீதியிலும் பதட்டத்திலும் இஸ்ரேலிய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி இருக்கும்போது புதிதாக இரண்டு ட்ரோன்களை ஹமாஸ் அனுப்பி இருக்கின்றது.

அந்த ட்ரோன்களில் ஒன்றுக்கு பெயர் “நியூ சௌரி ட்ரோன்” என்பதாகும் இவற்றில் சில தற்கொலை ட்ரோன்கள் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். இவை எல்லாம் அங்குள்ள இராணுவப் பகுதிகளை அதாவது இராணுவத் தளங்களை அடித்து நொறுக்கி இருக்கின்றன, திணறிப் போய் இருக்கிறது இஸ்ரேல் என்பது இப்பொழுது நமக்கு கிடைக்கின்ற செய்தி.



இங்கே இப்படி இருக்கும்போது ஹிஸ்புல்லாஹ் சகோதரர்கள் இன்னும் மூன்று முக்கியமான டவுன்களை கைப்பற்றி அங்கிருந்த இஸ்ரவேலர்களை வெளியே அனுப்பி இருக்கிறார்கள் இந்த இஸ்ரவேலர்கள் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் பேர் ஹமாஸுடைய காஸா தாக்குதலிலிருந்தும், ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதலிலிருந்தும் தப்பித்து இஸ்ரேல் காலி செய்த 58 கிராமங்களில் இருந்தும் வெளியே வந்தவர்கள். இவர்களை எல்லாம் டெண்ட் போட்டு வேறு பகுதிகளில் அமர வைப்போம் என்று கூறுகிறார்கள். அந்த மக்கள் அதனை முடியாது என்கிறார்கள்.

இன்னும் பல குடியிருப்புகளை நீங்கள் காலி செய்யுங்கள் என்று இஸ்ரேலிய இராணுவம் சொல்கின்றது. அவர்கள் முடியாது என்கிறார்கள். இதில் வந்தேறிகள் மற்றும் இஸ்ரேல் இராணுவம் ஆகியவற்றிற்கு இடையில் சண்டை நடந்துள்ளது. அந்த சண்டையில் ஒரு பெண்மணி இஸ்ரேலிய இராணுவ வீரன் ஒருவனை கத்தியால் குத்தி இருக்கிறார்.

**உளவாளிகள்**

இதற்கிடையில் இஸ்ரேல் இரண்டு இராணுவ வீரர்களை, உளவாளிகளை ஹமாஸ் பகுதிக்கு உள்ளே அனுப்பியிருக்கிறது. அவர்கள் இருவரையும் பிடித்து அடித்துள்ளார்கள். எதற்கு வந்தீர்கள்? என்று கேட்கும்போது எங்களது பிணைக் கைதிகளை எங்கு வைத்துள்ளீர்கள் என்று தெரிய வேண்டும் அடுத்தது அல் காசம் பிரிகேட்ஸ் உடைய அல்காசம் பிரிவு படையினுடைய தளங்கள் எங்கே இருக்கின்றன என்பதை தெரிந்து கொள்வதற்கும், வந்தோம் எனச் சொல்லியிருக்கின்றார்கள். அத்தோடு எங்களிடமிருந்து பிடித்து வந்த ஆயுதங்களையும், போராளிகள் தயாரித்து வைத்திருக்கின்ற ஆயுதங்களையும் எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்வதற்காகத்தான் நாங்கள் உள்ளே வந்தோம் என்று கூறி இருக்கிறார்கள். அதில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் இறந்து விட்டார். ஒருவகையில் இன்றைக்கு இந்தியன் எக்ஸ்பிரஸ் கூறுகிறது, அமெரிக்கா கூறுகிறது, இப்போதைக்கு காஸாவிற்குள் இஸ்ரேல் போகாது, போகும் நிலையில் இல்லை என்று. ஆனால் இது போன்ற விஷயங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இன்னொன்று காசாவிற்குள் குண்டுகளை போடுவதோடு சில, துண்டறிக்கைகளையும் போடுகிறார்கள். அந்த துண்டறிக்கைகள் கூறுவது, எங்களுடைய பிணைக் கைதிகள் என்று அழைத்துச் செல்லப்பட்டவர்களுடைய இடங்களை கூறும் ஹமாஸ் குடிமக்களுக்கு, காஸா குடிமக்களுக்கு நாங்கள் ஏராளமான பணத்தைத் தருவோம், உங்களுக்கு சொர்க்கத்தை இங்கே கொண்டு வந்து காட்டுவோம் என்று கூறி இருக்கிறது. இந்த பணத்தை வாங்கிக் கொண்டு ஆள் காட்டுவதற்கு காஸாவில் ஆட்கள் இல்லை என்பது இஸ்ரேலிய இராணுவத்திற்கு தெரியவில்லை போலும்!

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், இஸ்ரேலினுடைய உளவும், அவர்களுடைய கண்காணிப்பு கேமராக்களும் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி இப்பொழுது ஊர்ஜிதம் செய்யப்பட்டு விட்டது. அதனால்தான் அந்த மக்களையே தகவல் தாருங்கள் என்று கெஞ்ச வேண்டிய நிலைமை இஸ்ரேலுக்கு.

அனைத்து பத்திரிகைகளும் கூறுகின்றன தரைவழி தாக்குதலை ஹமாஸ் ஆரம்பித்து விட்டது, இன்று கடல்வழி தாக்குதலையும் ஹமாஸ் தொடங்கி இருக்கிறது ஆனால் அதனை இஸ்ரேல் முறியடித்துவிட்டேன் என்று சொல்கிறது.

இப்படி கொஞ்சம் நிம்மதியாக இருக்கலாம் என்று பார்த்தவர்களுக்கு, ஹவ்திஸ் திரும்ப ஏவுகணைகளை அனுப்பி இருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் நிம்மதியாக இருக்கலாம் என்று பார்த்தால், சிரியாவில் இருந்து ஏவுகணைகள் சென்று இருக்கின்றன ஆனால் அது வெட்ட வெளியில் விழுந்தது என்று சொல்லி இருக்கிறார்கள். பல இஸ்லாமிய அமைப்புகள் தொடர்ந்து அடித்துக் கொண்டிருக்கின்றன இஸ்ரேலை. ஹிஸ்புல்லாஹ்வின் பக்கம் உள்ளே ஏறிக் கொண்டே இருக்கிறார்கள்.

இன்னொன்று மெர்க்காவா என்ற ஒரு பெரிய வகை டேங்கை நம்பித்தான் இஸ்ரேல் காஸா எல்லையில் இருந்து உள்ளே செல்வோம் என்று சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த டேங்கை பின்னால் அழைத்துச் செல்ல வேண்டிய நிலைமை வந்துவிட்டது ஏனென்றால் அந்த டேங்கில் சிலவற்றை ஹமாஸ் சகோதரர்கள் பிடித்துச் சென்று விட்டார்கள். இப்போது அந்த டேங்க் எப்படி வேலை செய்கிறது என்பது அவர்களுக்கு தெரிந்து விட்டது. அதனை எப்படி செயலிழக்க வைப்பது என்பதையும் கண்டுபிடித்து விட்டார்கள். அதற்கும் ஏதேனும் மாற்று கண்டுபிடித்த பிறகு தான் அதனை களத்தில்



இறக்க முடியும் இஸ்ரேலால், இப்படி இருக்கும்போது எப்படி காஸாவிற்குள் போவார்கள்? அதனால் அமெரிக்கா கூறும் அறிக்கைகள் எல்லாம் நம்மால் ஏற்றுக்கொள்ள இயலாது.

இவர்களிடத்தில் ஒரு திட்டம் இருந்தது. முற்றுகையிட்டு அந்த மக்களை பட்டினி போட்டு, தண்ணீர், மின்சாரம் என எந்த அத்தியாவசிய தேவையும் கிடைக்காமல் ஆன பிறகு அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது. இங்கே இருக்க முடியாமல் எங்காவது சென்று விடலாம் என்று சென்று விடுவார்கள் என்ற இவர்களுடைய திட்டத்தையும் ஹமாஸ் தோற்கடித்திருக்கிறது.

ஹமாஸ் இன்னும் இரண்டு வெற்றிகளையும் பெற்றிருக்கிறது. இப்பொழுது இரண்டு பிணைக் கைதிகளை விடுவித்தார்கள். இவர்களை விடுவித்த உடனே அவர்கள் இருவரும் வெளியே வந்து, ஒருவர் 79 வயதுடைய பெண்மணி, இன்னொருவர் 85 வயதுடைய பெண்மணி. அந்த 85 வயதுடைய பெண்மணி பேட்டி கொடுக்கும் போது சொல்கிறார், ஹமாஸ் பலமுறை



எச்சரித்தும் இஸ்ரேலிய ராணுவம் காஸா பகுதியில் குடியிருந்த எங்களை காப்பாற்றவில்லை என்று கூறுகிறார். இது மிகவும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம். ஹமாஸ் எச்சரித்துள்ளார்கள் ஆனால் இவர்கள் பெரிய நுண்மான் நுழைபுலன்களுடைய கேமராக்களை வைத்துள்ளோம் ஒரு ஈ, எறும்பு கூட எங்களுக்கு தெரியாமல் காஸாவினுடைய பகுதிகளில் இருந்து இஸ்ரேலிற்குள் செல்ல முடியாது என்ற ஆணவத்தில் இருந்திருக்கிறார்கள். ஆகவே அந்த பெண்மணியும் இப்பொழுது இஸ்ரேலிய

அரசாங்கம் தான் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

மேலும் அந்த பெண்மணி கூறுகிறார், எங்களை விருந்தாளிகள் போல் கவனித்தார்கள்.ஹமாஸுக்கு ஒரு கோர முகத்தை வெளி உலகத்தில் உருவாக்க வேண்டும், மக்களிடத்தில் உருவாக்க வேண்டும் என்பதே இவர்களின் திட்டம் என்பதை முன்னர் விடுவிக்கப்பட்ட ஜாஸ்மின் பரோட் சொல்லக்கூடிய தகவல்களிலிருந்தும், இப்பொழுது விடுவிக்கப்பட்ட இரண்டு சகோதரிகளில் ஒரு சகோதரி சொல்லக்கூடிய தகவல்களில் இருந்தும் தெரியவரும் செய்தி.

தீவிரவாதிகள் என்ற பெயரிலிருந்து, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் சொல்வதைப் போல் ஒரு பெரிய மூச்சுத் திணறும் முற்றுகையில் இருந்து அவர்கள் வெளியே வந்து சண்டையிடுகிறார்கள் என்ற உண்மையை அம்பலப்படுத்தப்பட்டு விட்டது இப்போது!

ஹமாஸ் போராளிகள் இப்பொழுது உலக கருத்துக்களை தங்களின் பக்கம் கொண்டு வந்து விட்டார்கள். இஸ்ரேலில் ஒருவர் கூட நிம்மதியாக இல்லை. அங்கு 7 லட்சம் பேரை எங்கு குடியமர்த்த வேண்டும் என்று தெரியாமல், டென்ட் (குடில்கள்) அமைத்து தருகிறோம் என்று சொன்னால் அந்த மக்கள் ஒத்துக்கொள்ள தயாராக இல்லை.

இதற்குப் பிறகு இப்பொழுது இந்த சகோதரிகள் சொல்வதைப் பார்த்தால் இஸ்ரேலிய ராணுவமே அந்த மக்களை கொலை செய்து கொண்டிருக்கிறது.

எனவே இவர்கள்

1. மனிதநேயத்திற்கு எதிரான குற்றம்

(Crime Against Humanity)

2. இஸ்ரேலிய மக்களுக்கு எதிரான குற்றம் செய்தவர்கள்

(Crime Against Israel Citizens)

3. காஸா மக்களுக்கு எதிரான குற்றம் செய்தவர்கள் (Crime Against Gaza Citizens)

இவை அனைத்திற்கும் அவர்கள் குற்றவாளியாக நிற்க வேண்டிய ஒரு நிலை வரும்.

**ராக்கெட்டுகள் - மூன்றாவது உலக யுத்தம்**

75 வகை ராக்கெட்டுகளை ஹமாஸ் வைத்துள்ளார்களாம். இப்பொழுது சீனா போர்க்கப்பலை அனுப்பிவிட்டது. இதில்




மூன்றாவது உலக யுத்தம், நான்காவது உலக யுத்தம் என்றெல்லாம் பேசுகிறார்கள் ஆனால் மூன்றாவது உலக யுத்தம் தொடங்கி மூன்று கோடியே 80 லட்சம் பேர் கொல்லப்பட்டு விட்டார்கள் இந்த ஐரோப்பிய நாடுகளால் என்பதை நாம் ஏற்கனவே பதிவு செய்திருக்கிறோம். இப்பொழுது சீனாவினுடைய கப்பல்கள், ஹமாஸ், காஸா பகுதி மக்களுக்கு ஆதரவில்லை என்று யாரும் நினைக்க வேண்டாம் நாங்கள் இருக்கிறோம் என்பதை காட்டுகின்றன.

சீனா செய்திருக்கிற மிகப்பெரிய உதவி என்ன வென்றால் ஒருவித தற்கொலை ட்ரோன்களை ஹமாஸ் போராளிகள் முன்னேற்றுவதற்கு, அதற்கான தொழில்நுட்பங்களை கொடுத்துள்ளது. ட்ரோன்களை கொடுக்கவில்லை, ஆனால் ட்ரோன்களை எப்படி தயார் செய்ய வேண்டும் என்ற தொழில்நுட்பத்தை கொடுத்துள்ளது. ஆகவே இப்பொழுது இஸ்ரேலினுடைய தளங்களுக்கும் பாதுகாப்பில்லை, குடியிருப்புகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலை வந்திருக்கிறது.


எங்கள் மக்களை எங்கு வைத்திருக்கிறார்கள் என்று யாசகம் கேட்கும் அளவிற்கு இஸ்ரேலியர் வந்திருக்கிறார்கள். எந்த அளவிற்கு இஸ்ரேலுடைய நெட்வொர்க்கை ஹமாஸ்

போராளிகள் ஹேக் செய்து விட்டார்கள் என்றால், *google* தன்னுடைய *google* மேப் ஆப்பை சஸ்பெண்ட் செய்து வைத்துள்ளதாம். இப்படி ஒரு பெரிய யுத்தத்தை அங்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கிராயத் ஷமோஹா என்ற இஸ்ரேலில் உள்ள ஒரு நகரத்தை பற்றி கூறும்பொழுது அது ஒரு பேய்கள் நகரம் என்று கூறுகிறார்கள். அதாவது பேய்கள் சஞ்சரிக்க கூடிய இடத்தில் உள்ள மக்கள் எப்படி பயந்து கொண்டு வாழ்வார்களோ அதே போல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இஸ்ரேலினுடைய நிலை மிக மோசமாக ஆகியிருக்கிறது.

**அமெரிக்க தளங்கள்**

அக்டோபர் 7இல் நடந்த விஷயங்கள் இன்னும் முழுமையாக வெளிவரவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்பொழுது சிரியா, ஏமனின் ஹவுத்திஸ் அனைவருமே தாக்க ஆரம்பித்து விட்டார்கள். ஈராக்கில் இருக்கக்கூடிய போராளிகள் அமெரிக்காவினுடைய இன்னொரு *International Army Centre* ஐ தாக்கியுள்ளார்கள். அமெரிக்காவினுடைய வெளியுறவு அமைச்சர் இது ஈரானினுடைய வேலை தான், ஒரு வேளை ஈரான் களத்தில் இறங்கினால் நாங்கள் எங்களை பாதுகாத்துக் கொள்வோம் என்று சொல்லி இருக்கிறார். இந்த வார்த்தையை மிகவும் கவனமாக கவனிக்க வேண்டும். எங்களை பாதுகாத்துக் கொள்வோம் என்று தான் சொல்லியிருக்கிறார். நாங்கள் சென்று அழித்து விடுவோம் என்றெல்லாம் கூறவில்லை எங்களைப் பாதுகாத்துக் கொள்ள எங்களால் முடியும் என்று தான் கூறியிருக்கிறார். அமெரிக்கா இராணுவ வீரர்கள் ஈராக்கிலிருந்து எப்படி வெளியே போகலாம் என்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.




## ஒன்றுக்கு.....ஆயிரம்....!

பயங்கரவாத இஸ்ரேலின் தாக்குதலால் ஷஹீதான தன் சகோதரனின் நினைவாக அவனுடைய தலைமுடியொன்றை எடுத்து வைத்துக்கொண்ட பலஸ்தீன் சிறுவன் "உனக்காக நான் ஆயிரம் சியோனிஸ்டுகளை பழிவாங்கியே தீருவேன்" என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யும் காட்சி.

நன்றி: அல்ஜஸீரா.

**இஸ்ரேலின் கோழைத்தனம்**

பலமுனைகளிலும் தாக்குகின்ற தாக்குதலுக்கு, "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்று தமிழில் கூறும் பழமொழியைப் போல் காஸாவில் இருக்கக்கூடிய அகதிகள் முகாம் தான் எங்களுக்கு தெரிந்த இலக்கு என்று கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் உலக கருத்துக்கள் எதிராக போய்க் கொண்டிருக்கிறன.

அடுத்தது எகிப்தும் சிறிது உதவிக் கொண்டிருக்கிறது என்று எண்ணுகிறோம். 70 நிவாரண பொருட்களை கொண்டு பொருட்கள் எல்லாம் ரஃபா எல்லை வழியாக சென்று கொண்டிருக்கிறது.



ரஃபா எல்லை என்று சொல்லக்கூடியது, எகிப்தின் கையில் இருக்கின்றது. ஆனால் நோக்கர்கள் சொல்லக்கூடிய விஷயத்தை பார்க்கும்போது அது முழுமையாக ஹமாஸ் சகோதரர்களிடம் வந்துவிட்டது. அவர்கள் அதன் பாதுகாப்பை கையில் எடுத்துக் கொண்டார்கள்.

இஸ்ரேலிய பீரங்கிகள் வந்ததை

அடித்து விரட்டினார்கள் அதில் அவர்களுக்கு சேதாரம் உண்டு என்பதை இஸ்ரேலே ஒத்துக் கொண்டது. ஆகவே ரஃபா எல்லை இப்பொழுது பாதுகாப்பாக மாறிவிட்டது. நான்கு இலட்சம் லிட்டர் எரிபொருள் அவர்களுக்கு தயாராக இருக்கிறது கொண்டு செல்வதற்கு என்ற தகவலும் வந்திருக்கின்றது.

**துருக்கி உதவி**

இதனிடையே துருக்கி ஆறு விமானங்களில் நிவாரண பொருட்களை அனுப்பியிருக்கிறது. அதோடு காஸா பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரஃபா எல்லையின் பக்கம் இரண்டு மருத்துவமனைகளை ஆரம்பிப்பேன், காஸாவில் அடிபட்டவர்கள் எல்லாம் வந்து மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார்கள். மருத்துவமனை ஆரம்பித்து விட்டார்களா இல்லை இனிமேல்தான் ஆரம்பிப்பார்களா என்பது இன்னும் தெரியவில்லை. ஆனால் துருக்கி அதில் உறுதியாக இருப்பதாக கூறுகிறது.

**9/11 - 7/10**

இப்பொழுது பைடன் என்ன கூறுகிறார் என்றால் எங்களுடைய 9/11 தான் இஸ்ரேலினுடைய அக்டோபர் 7/23 என்கிறார்.

9/11 இல் என்ன நடந்தது? பொய் சொல்லி, உள்ளிருப்பு வேலைகளை செய்து யுத்தத்தை தொடங்கி மூன்று கோடியே 80 லட்சம் பேரை கொலை செய்ததே அமெரிக்கா தான். இரண்டு நாட்களுக்கு முன் பைடன், நாங்கள் நீதிக்காக போராடினோம் அந்த நீதி எங்களுக்கு கிடைத்தது என்றார். என்ன கிடைத்தது? ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பித்துவிட்டால் போதும் என்று மண்டியிட்டு ஓடி வந்தார்கள். இப்பொழுது மூன்று நாட்களுக்குப் பிறகு தன்னுடைய வாக்கியத்தை மாற்றிவிட்டார், நாங்கள் ஆப்கானிஸ்தானில் செய்த தவறை நீங்கள் செய்யாதீர்கள் என்று கூறியுள்ளார்.

**ஆப்கான் நீதி**

“சிறு படைகள் நியாயத்திற்கு பக்கத்தில் நிற்கும்போது, உணர்வோடு போராடும்போது எவரும் அதற்கு எதிரில் நிற்க இயலாது.”

50 நாடுகள் வந்தாலும் சரியே என்று தான் ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் போராடினார்கள், வெற்றி பெற்றார்கள். அவர்களுடைய உடல் ரீதியான உதவிகளும், மனரீதியான உதவிகளும், மூளை ரீதியான உதவிகளும் இப்பொழுது ஹமாஸ் சகோதரர்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறன. அப்படியானால் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பதை ஒருகனம் நீங்கள் எட்டிப் பாருங்கள்.

இவையெல்லாம் ஒன்றும் முடியவில்லை, மேற்கு கடற்கரையில் போய் பிரச்சனை செய்கிறீர்கள். நேற்று அல் அக்ஸா பள்ளிவாசலில் தொழுகைக்கு வழி விடாமல் மூடி இருக்கின்றனர் இஸ்ரேலிய காவல்துறையினர். என்ன செய்வார்கள் அவர்கள் திரும்பவும் உங்களை அடிப்பார்கள்.

இப்பொழுது மேற்கு கடற்கரை பகுதியில் உங்களுக்கு எதிராக போராடக்கூடிய போராளிகள் வந்துவிட்டார்கள் அவர்கள் அதிக அளவில் ஷஹீதாகிறார்கள் ஆனால் உன்னுடைய இராணுவத்தையும் போதுமான அளவிற்கு காலி செய்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

இப்பொழுது இஸ்ரேலுடைய 75 ஆண்டுகால கெடுபிடிகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வந்தாலும் வரலாம். அமெரிக்காவே ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒரு சமாதான உடன்படிக்கையை தயார் செய்திருக்கிறது. அதில் இரண்டு வார்த்தைகளை அது பயன்படுத்துகிறது இஸ்ரேலுக்கு தன்னை பாதுகாத்து கொள்ளக் கூடிய உரிமை உண்டு. பாலஸ்தீனர்களுக்கு தங்களை தாங்களே முடிவு செய்து கொள்கின்ற உரிமை உண்டு.

ஆனால் இல்லை அது முடியாது, அரபு நாடுகள் இப்பொழுது சற்று விழித்தே செயல்படுகின்றன. போதுமான அளவிற்கு, நாம் எதிர்பார்த்த அளவிற்கு அவர்கள் செய்யவில்லை என்றாலும்



கவலைப்பட வேண்டாம் அவர்கள் ஓரளவிற்கு அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் பேசியிருக்கிறார்கள்.

கத்தார் நீங்கள் ஒன்னும் லைசென்ஸ் தர முடியாது கொலை செய்வதற்கு என்று பேசியிருக்கிறது. சவுதி அரேபியாவினுடைய முஹம்மது பின் சல்மான் அவர்களும் அதனையே கூறி இருக்கிறார், நீங்கள் இப்படி கொலை செய்து கொண்டிருப்பதை கண்ணை மூடிக்கொண்டு பார்த்து கொண்டிருக்க முடியாது என்று.

ஐக்கிய நாடுகள் சபை எங்கே போனது? என்று கேட்டிருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையினுடைய பொதுச் செயலாளரும் நல்லதொரு அறிக்கையை கொடுத்து இருக்கிறார். ஆனால் எந்தப் பயமுமில்லை. இஸ்ரேலினுடைய தோல்வியிலும், ஹமாஸினுடைய வெற்றியிலும் தான் இந்த யுத்தம் இப்பொழுது சென்று கொண்டிருக்கிறது.

எம்.ஜி.எம்




வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

விலை 120/-

போன் : 7401213394 / 7358278146
8148129887





# இஸ்ரேலை விட நான் மூத்தவள்

இஸ்ரேலை விட நான் வயதனாவள் என்று சமூக வலைதளங்களில் வைரலான பாலஸ்தீன பாட்டி இஸ்ரேலிய ராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். பாலஸ்தீன புகைப்படக் கலைஞர் சலே அல்ஜஃபராவி என்பவர் "ஹாதியா நாசரின்" இந்த மரணத்தை 7/12/2023 அன்று தனது எகஸ் பக்கத்தில் அறிவித்தார்.

“என் அன்பே, நீ ஷஹீதாகிவிட்டாய். அல்லாஹ் உங்கள் மீது தனது ரஹ்மத்தை பொழியட்டும். உங்களுக்கு சொர்க்கத்தை வழங்கட்டும்” என்று அல்ஜஃபராவி சமூக ஊடக தளமான X இல் எழுதியுள்ளார்.

"இஸ்ரேலிய இராணுவத்தினர் (நாசரை) அவரது வீட்டின் வாசலில் துப்பாக்கியால் சுட்டனர்" என்பதை அவரது உறவினரிடமிருந்து தான் அறிந்ததாக அல்ஜஃபராவி கூறியதாக அல்-ஜசீரா குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் காயமடைந்து, குணமடைந்து மருத்துவ மனையில் இருந்தபோது அவரைச் சந்தித்த அல்ஜஃபராவி வெளியிட்ட வீடியோவில் தோன்றிய பின்னர் நாசர் பிரபலமான நபராக ஆனார்.

அந்த வீடியோவில், பாலஸ்தீன பத்திரிகையாளர் ஒருவர் அந்தப் பெண்ணின் அடையாள அட்டையை பார்த்ததும், “நீங்கள் இஸ்ரேலை விட மூத்தவர்” என்று கூறினார்.

அதற்கு நாசர் "நிச்சயமாக, நிச்சயமாக,"நான் (பாலஸ்தீன) நிலத்தை பற்றி பிடித்துக் கொண்டிருக்கிறேன்." என்று பதிலளித்தார்.



# அக்டோபர் 7 — தாக்குதல்

# இறந்த 1400 பேர்களின் உடல்கள் எங்கே?

## முன்னாள் மலேசிய பிரதமர்

## மஹாதீர் முஹம்மது எழுப்பும் கேள்விகள்!

மலேசியாவினுடைய முன்னாள் பிரதமர் மஹாதீர் முஹம்மத் அவர்கள் அக்டோபர் 7ல் காஸாவிற்கு வெளியே ஹமாஸ் நடத்திய தாக்குதலை பற்றிய பல கேள்விகளை எழுப்பியுள்ளார். இந்த கேள்விகள் இதுவரை யாரும் எழுப்பாத கேள்விகளாக இருப்பதால் நாம் அதனை வாசகர்களின் பார்வைக்கு வைக்கிறோம்.

அக்டோபர் 7இல் ஹமாஸ் தாக்கியதாகவும் அதில் 1400 பேர் இறந்ததாகவும் இஸ்ரேல் செய்திகளை வெளியிட்டது. இன்றைக்கும் "News Room Policy" என்று நமது இந்தியாவில் வரக்கூடிய பத்திரிகைகள் கூட, ஹமாஸ் உடைய அக்டோபர் ஏழு தாக்குதலை பற்றி எழுதும்போது "In which 1400 people were killed" என்றுதான் எழுதுகிறார்கள். அதில் இப்பொழுது 200 பேர் உயிரோடு திரும்பி விட்டதால், 1200 என்று இப்பொழுது போடுகிறார்கள். ஆனால் நம்முடைய பத்திரிகைகள் எல்லாம் இப்பொழுதும் 1400 என்றே எழுதுகிறார்கள். அந்த 200 பேருக்கு அவர்கள் கொடுக்கும் விளக்கம் அவர்கள் ஹமாஸ் போராளிகள் என்று. மொத்தமாக இருநூறு ஹமாஸ் போராளிகள் சென்றார்களா என்பது சந்தேகத்திற்குரியது!

இப்பொழுது மஹாதீர் முஹம்மத் அவர்களுடைய கேள்வி என்னவென்றால், "நீங்கள் எப்பொழுதாவது அந்த 1400 பேரினுடைய உடல்களை காண்பித்திருக்கிறீர்களா?"

பாலஸ்தீனில் நீங்கள் குண்டு போட்டு இறந்த மக்களுடைய பிணங்கள்(ஜனாஸாக்கள்) அடக்கப்படுவதையும், கூட்டுப் படுகுழிகளில் அவர்கள் வரிசையாக நூறு பேர், 120 பேர் என்று வைத்து அடக்குவதையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த 1400 பேரையும் நீங்கள் எங்கேயுமே புகைப்படமாக காட்டவில்லை. இந்த விஷயம் உண்மை என்றால் நீங்கள் காண்பித்து இருப்பீர்கள், என்பது தான் மஹாதீர் அவர்களுடைய வாதம்.

நீங்கள் ஏன் அந்த 1400 நபர்களினுடைய உடல்களை காட்டவில்லை என்றால், அது உண்மை இல்லை. உங்களிடத்தில் அந்த வீடியோ பதிவுகள் இருந்திருந்தால், அந்த 1400 பேர்களுடைய் உடல்களையும் காட்டி 15,000(க்கும் அதிகமான) பாலஸ்தீன மக்களை கொலை செய்ததை நியாயப்படுத்த அதனை பயன்படுத்தி இருப்பீர்கள்.

உங்களுடைய மக்களிடமே அவப்பெயர் வரும் என்ற காரணத்தினால் மறைக்கவும் வாய்ப்பில்லை! ஏனென்றால், இந்த 1400 பேரால்தான் இரண்டு லட்சம் கட்டிடங்களை இடித்திருக்கிறீர்கள், இவ்வளவு பெரிய இழப்புகளை ஏற்படுத்தி இருக்கிறீர்கள்,15,000 பேரை கொலை செய்திருக்கிறீர்கள் அதில் 6150 பேர் குழந்தைகள். உங்களுடைய கணக்குப்படி ஒரு லட்சம் ஏவுகணைகளை காஸா பகுதிக்குள் அனுப்பி இருக்கிறீர்கள். இதிலெல்லாம் விழுந்த பிணங்களை நம்மால் பார்க்க முடிகிறது ஆனால் அக்டோபர் 7ல் விழுந்த பிணங்களை நாம் ஏன் பார்க்க முடியவில்லை?

இன்னும் அல்ஷிபா மருத்துவமனையில் 25 இஸ்ரேலிய ராணுவத்தினர் கொலை செய்யப் பட்டார்கள் என்று கூறினீர்கள். அவர்களுடைய உடல்களையும் இவர்கள் காட்டவில்லை. ஆனால் இப்படி ஒன்றை கூறி அங்கு பிணவறையில் இருந்த பிணங்களை எல்லாம் திருடியுள்ளார்கள்.

இப்படி நீங்கள் செய்து கொண்டிருக்கும் போது, ஹமாஸ் ஏன் திரும்பத் தாக்கவில்லை என்பதற்கான காரணத்தையும் அவர்கள் கூறி விட்டார்கள், இன்குபேட்டரில் இருக்கக்கூடிய குழந்தைகள், அங்கே இருக்கின்ற இருதய நோயாளிகள், அவசர சிகிச்சை பிரிவில் இருப்பவர்கள், நோயாளிகள் என அனைவரும் வரிசையாக படுத்திருப்பதை கண்ட பிறகு ஹமாஸ் போராளிகள் உங்களை தாக்கவில்லை. இந்த நிலைமைகள் எல்லாம் உலகத்தில் உள்ள எல்லா ஊடகங்களாலும் எடுத்துக்காட்டப்படும்போது 1400 பேரினுடைய உடல்களை மட்டும் ஏன் நீங்கள் காட்டவில்லை? அல்லது அவற்றை எல்லாம் பாதுகாப்பாக வைத்திருக்கிறீர்களா?

இதற்கிடையில் நாம் ஒரு செய்தியை முதன் முதலாக அழுத்தமாக பதிவு செய்தோம். அது என்னவென்றால், இந்த தாக்குதல்களை ஹமாஸ் தொடங்கிய பிறகு 10 மணி நேரம் கழித்து வந்த காவல்துறை தான் அனைத்தையும் நடத்தியது. இஸ்ரேலிய ராணுவம் தான் அங்குள்ள பகுதிகளில் எல்லாம் குண்டுகளை பொழிந்தது. இதற்கான ஆயிரம் சாட்சிகளையும் கொடுத்து விட்டோம். ஆனால் நீங்கள் இந்த உடல்களை காட்டவில்லை. அனைத்து பத்திரிகைகளும் பொய்யை திரும்பத் திரும்ப கூறினால் நம்புவார்கள் என, அக்டோபர் ஏழு என்றாலே 1400 உடல்கள் பற்றி கூறுகிறார்கள். ஆகவே இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதை நிரூபிக்க வேண்டிய தேவை இருக்கிறது!

நமது கணக்குப்படி ஹமாஸ் அவர்களை ஆக்கிரமித்தார்கள், பிடித்தார்கள் ஆனால் அவர்கள் யாரையும் கொல்லவில்லை. சிலரை அழைத்துச் சென்றார்கள் அவ்வளவுதான். ஆக 1400 பேர் என்பது பொய்! அவர்கள் அதனை காட்டாத வரையிலும் அது பொய் தான்! அதனை உலகம் நம்பாது.

ஆக நீங்கள் நிரூபிக்காத வரைக்கும் 1400 பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்பது பொய் தான் என்பது மஹாதீர் முஹம்மத் அவர்களின் கூற்று. இது சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது.

அக்டோபர் 7 அன்று நடந்ததை அங்குள்ள காவல்துறை ஓரளவிற்கு விசாரித்து உண்மையை கண்டுபிடித்தது. அதனை தம்முடைய ராணுவமே செய்தது என்பதை பிறகு ஒத்துக் கொண்டார்கள். இதனைப் பற்றிய முழு விசாரணை நடக்கும் போது நெதன்யாஹூவும், ராணுவ தளபதிகளும் சிறைக்கு செல்வார்களா அல்லது தூக்கிலிடப் படுவார்களா என்பது முடிவு செய்யப்படும். அது வரையிலும் மஹாதிர் அவர்களுடைய கேள்வி இருந்து கொண்டே இருக்கும். ஏனென்றால் இப்படி ஒரு கேள்வியை சாதாரண ஒருவர் கேட்க வில்லை. உலக அளவில் அறியப்பட்ட ஒரு பெரிய சிந்தனையாளர்! தலைவர் கேட்கிறார் பதில் கிடைக்கிறதா என்பதை காத்திருந்து பார்ப்போம். இன்ஷா அல்லாஹ்!

**MGM**



# பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு

தொடர் – 01

## நிகழ்வு 01 - கொலைக்களம்

அவனை 'வெனிஸ்' என்ற நாட்டைச் சார்ந்த வியாபாரி என்றே எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். யாருக்கும் அவன் ஒரு யூதன் என்பது தெரியாது. அவனுக்கும், அவன் நின்று கொண்டிருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் யூதர்கள் பலர் குரூரமாகக் கொலை செய்யப்படுகின்றார்கள் என்பதும் தெரியவே தெரியாது.

இன்னுஞ் சொன்னால் அவன் அந்த இடத்திற்கு வந்தே இருக்கக் கூடாது. ஆனால் வந்துவிட்டான். மரணத்தின் வாசல் வரை வந்துவிட்டான்.

ஆமாம் அவன் ஒரு யூதன், என்ற உண்மையைத் தெரிந்தவன் எவனாவது அவனைக் கண்டுவிட்டால் அவனையும் அந்தக் குரூரமான கூட்டுக் கொலையில் இணைத்துவிடுவார்கள். அவன் அரை நொடியில் சாம்பலாகி இருப்பான்.

எண்ணிப்பார்க்கவே அவனுடைய நெஞ்சம் நடுங்கியது. அவன் அவனையே சமாதானப்படுத்திக் கொண்டான். அன்று வரை அவன் தன்னை ஒரு யூதன் என்று யாருக்கும் சொன்னதில்லை. ஆகவே அவனது உண்மையான வரலாற்றைத் தெரிந்தவர்கள் யாரும் அங்கு இல்லை.



"வேறு ஏதேனும் யூதர்கள் இங்கே அங்கே ஒளிந்திருந்தால் இழுத்து வாருங்கள்" இப்படிக் கூட்டத்திலிருந்தவர்கள் வெறியோடு கர்ஜித்து கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு முறை அவர்கள் இப்படிக் கர்ஜிக்கும்போதும் அவன் மரணத்தின் வாயிலுக்குள் போய் வீழ்ந்து, மீண்டும் எழுந்து வந்ததைப் போல் ஓர் உணர்வைப் பெற்றான்.

"மனிதர்களுள் ஒரு பகுதியினரை இப்படிக் கொலை செய்வதில் இவர்களுக்கு வெட்கமே இல்லையே!" என்ற ஆதங்கம், ஆத்திரம், அவமானம், அச்சம் அத்தனையும் அவனுள் அலை மோதிற்று" அலைமோதிய உணர்வுகளை அடக்கிக் கொண்டான். அவன் ஒரு பத்திரிகையாளன்.

அத்தோடு பத்திரிகைகளை விற்பதுதான் அவனுடைய வாழ்வாதாரம். அந்த வியாபாரத்தை இனி தொடர்ந்திட அவனுக்கு விருப்பமில்லை. ஆனால் எழுதுவதைத் தொடர்ந்திட வேண்டும் என விரும்பினான்.

எத்தனையோ எண்ணங்கள் அவனுக்குள் ஆர்ப்பரித்தன. அவன் ஒரு வழியாக அந்த இடத்திலிருந்து தப்பித்து வெளியே வந்துவிட்டான். தான் தங்கி இருந்த அறையினுள் புகுந்தான். கதவைத் தாழிட்டுக்கொண்டான். அவனையும் மீறி அணையுடைத்து வந்த அழுகையை அடக்கிட அவன் விரும்பவில்லை மனம் விட்டு அழுதான்.

எத்தனைக் காலந்தான் இப்படிக் கூட்டுக் கொலைகளுக்கு ஆளாவது? இதற்கோர் விடிவு வேண்டும். அதற்கு நாம் வாழ்நாள் முழுவதும் உழைக்க வேண்டும் என முடிவு செய்து கொண்டான். நம்மக்களின் அவலம் தீர்ந்திட அவர்களுக்கென ஓர் உறைவிடத்தைக் கண்டு பிடித்தாக வேண்டும். அதற்காக நாம் இப்போதே செயலில் குதித்தாக வேண்டும்.

முதன் முதலில் நம் பக்கம் இருக்கும் யூதர்களை ஒன்று சேர்த்திடவேண்டும். அவர்களை ஓர் அமைப்பாக அணிசேர்த்திட வேண்டும். அதற்காக நாம் இப்போதே செயலில் குதித்தாக வேண்டும்.

அவன் கற்பனையில் கோபுரமெழுப்பி மகிழ்பவனல்ல. அவன் யதார்த்தங்களை எதிர் கொள்பவன். நினைத்தான். நினைத்ததைச் செயலில் கொண்டு வந்திட களத்தில் குதித்தான். அவனது பெயர்தான் தியோடர் ஹெசில். அவன் மூளையில் உதித்தது தான் 'சியோனிசம்' என்ற யூத தீவிரவாதம். அவனது திட்டம் தான் 'யூதர்களுக்கென ஒரு நாடு'.

இது நடந்தது ***1895*** ஜனவரியில். அவனுடைய செயல்களால் விளைந்ததுதான் இஸ்ரேல் என்ற நாடு. இனி அவனது செயல்களை விரிவாகப் பார்ப்போம்.

## நிகழ்வு 02 - யூதர்களுக்கென ஒரு நாடு

அவன் தன்னை ஒரு யூதன் என்று வெளியே காட்டிட இயலாது. அதனால் அவன் தன் திட்டத்தை வெளிப் படையாகப் பேசிடவோ, விவாதித்திடவோ வழியில்லை. இரகசியமாகவே இயங்கியாக வேண்டும். தப்பித் தவறி செய்தி தெரிந்தால் தவறாமல் அவனது தலை கொய்யப்படும்.

தீர ஆலோசித்தான். கொலை செய்யப்பட்ட யூதர்களைத் தவிர எஞ்சியோரை அடையாளம் கண்டான். அவர்களோடு மெல்ல, மெல்ல பேசத்தொடங்கினான். ஊர்ந்து ஊர்ந்துதான் செயல்பட்டான். ஆனால் உறுதியாகச் செயல்பட்டான்.

ஆறு யூதர்களைக் கண்டு விரித்துரைத்தான் யூதர்களின் அவலங்களை. அவர்களுக்கும் அவன் கூறுவது சரியாகப் பட்டது. ஆகவே அவனோடு ஒத்துழைக்க தயாரானார்கள்.

அவர்களை அள்ளியணைத்து ஓர் அமைப்பை நிறுவினான். அந்த அமைப்பின் பெயர்தான் உலக

யூதர்களின் குழுமம் *"The World Jewish Congress".*

இது ஹெசில் தங்கி இருந்த அறையிலிருந்தே தான் தொடங்கியது. அங்கிருந்து அது மெல்ல, மெல்ல உலகின் இதரப் பாகங்களில் வேர்விட தொடங்கியது. ஆம்! உலகெங்கிலுமுள்ள யூதர்களைத் தொடர்பு கொண்டான் ஹெசில்.

"நமக்கென ஒரு நாடு" என்ற முழக்கம் சில யூதர்களைக் கவர்ந்தது. ஆனால் பலர் அதில் நம்பிக்கை வைத்திடவில்லை. அவனோடு ஒத்துப் போனவர்களை ஒருங்கிணைத்து ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்தான்.

அதற்கு யூதர்களின் முதல் உலக மாநாடு எனப்பெயர் வைத்தான் *(First World Jewish Congress)*. பெயர்தான் படோடோபமாக இருந்ததே அல்லாமல் கூட்டம் நடந்தது ஹெஸிலின் மொழியில் சொன்னால், யூதர்களின் முதல் மாநாடு நடந்தது - சுவிச்சர்லாந்திலுள்ள ஒரு சூதாட்டக்களத்தின் தாழ்வாரத்தில் தாம்.

இதற்காக, யூதர்கள் சுவிட்சர்லாந்து வரை பயணம் செய்திட வேண்டியிருந்தது. அந்த மாநாட்டில் *(First World Jewish Congress)* கூடியது ஆறு பேர்தான். ஆனால் தியோடர் ஹெஸில் தாக்கல் செய்த திட்டம் நூறு பக்கங்களைக் கொண்டது.

அத்திட்டத்தின் முதல் வரியே இப்படித்தான் தொடங்கியது,

*“The Jews, who will shall have a state of their own -* யூதர்களில் யாரெல்லாம் உறுதி பூணுகிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக ஒரு சொந்த நாடு கிடைக்கும்.”

மிகக் கவனமாக வரையப்பட்ட இந்தத் திட்டத்தின் தலைப்பு *Der Fundonstaat (The Jewish State)* அதாவது "யூதர்களின் நாடு". பின்னாளில் "இது பெரிய திட்டம்" *The Grand Plan* என்ற பெயரைப் பெற்றது. இந்தத் திட்டத்தில் அவன் சில சிந்தனைகளையும் செயல் திட்டங்களையும் முன் வைத்தான். அவனுடைய சிந்தனையில் மிகவும் முக்கியமானது.

“யூதர்கள் தங்களுக்கென ஒரு நாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதன் முதல்படியாக நாம் இறைவனின் தூதர்களைக் கொலை செய்தவர்கள் என்ற குற்றச்சாட்டுகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். கிருஸ்தவர்கள் நம்மீது கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்டவர்கள் தாம். ஆனால் நாம் அவற்றையெல்லாம் மறந்து அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளவேண்டும். அப்போது மட்டுமே நாம் இதில் வெற்றி பெற்றிட இயலும்”.



அடுத்து இந்தத் திட்டத்தின் "செயல்" பற்றி பேசினான். அதில் யூதர்கள் தாங்கள் குடியமர்ந்திட விரும்பும் இடத்தை முதன் முதலில் விலைக்குத்தான் வாங்கிடவேண்டும். அதற்கான பணத்தை நாம் உலகம் முழுவதும் வாழ்ந்திடும் யூதர்களிடமிருந்து வசூல் செய்திட வேண்டும். இப்படி வசூல் செய்யப்படும் நிதி யூதர்களின் தேசிய நிதி (*Jewish National Fund*) என்ற பெயரில் சேர்க்கப்படவேண்டும். இந்த நிதியைக் கொண்டு நாம், விரும்புமிடத்தில் நிலத்தை வாங்கிட வேண்டும். அங்கே யூதர்களுக்கென ஒரு நாட்டை நிறுவிட வேண்டும்.

இந்தத் திட்டத்திலேயே அவன் யூதர்களுக்கென ஒரு தேசிய கொடியையும் வரைந்தான். அந்தக் கொடி வெள்ளை நிறம், நீல நிறம் ஆகியவற்றின் சங்கமமாக இருந்தது. அதிலும் ஓர் யுக்தி இருந்தது. அது,

இந்த இரண்டு நிறங்களையும் கொண்ட ஓர் மேலாடையைத்தான் சாதாரண யூதர்கள் தங்கள் பிரார்த்தனையின் போது அணிந்து கொள்வார்கள். அதையே இப்போது ஹெசில் தனது கொடியாக ஆக்கிக் கொண்டான். இதனால் சாதாரண யூதர்களும் தங்கள் பிரார்த்தனைகளின் போது ஒட்டுமொத்தமாக ஹெசிலின் திட்டங் களின் ஆதரவாளர்களாகத் தோற்றந்தருவார்கள்.

அன்றே, அப்பொழுதே, யூதர்களுக்கென ஒருதேசிய கீதத்தையும் வடிவமைத்தான். அந்தக் கீதத்திற்கு "நம்பிக்கை" (*Hatikrah*) எனப் பெயர் வைத்தான்.

அந்தக் கீதம், யூதர்கள் தங்களுக்கென ஒரு நாடு வேண்டும் என்ற நம்பிக்கையை மனதில் வளர்த்துக் கொண்டால் நிச்சயமாக ஒரு நாடு இந்த நீள் நிலத்தில் நிலைநாட்டப்படும் என ஒலித்தது.

உண்மையில், அன்றைய நாள்களில் இப்படியொரு நம்பிக்கையை வளர்ப்பதே கடினமானதாகவும் யூதர்களின் மனங்கள் ஒத்துக்கொள்ளாத ஒரு கொள்கையாகவுமே இருந்தது.

ஆமாம் யூதர்களிடம் இந்த உலகில் தங்களுக்கென ஒரு இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அறவே இல்லை. ஏன்? அவர்கள் அந்தத்திசையில் சிந்திக்கவே இல்லை.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்......

**மு.குலாம் முஹம்மது**


# இஸ்லாம் ஒன்றே வழி

**புத்தம் புதிய மறு பதிப்பு**




- ஒவ்வொரு நாடும். ஒவ்வொரு தனி மனிதனும் கிடைப்பதையெல்லாம் தமதாக்கிக்கொள்ள வேண்டும் என்றே ஆசைப்படுகின்றான். இதுதான் இன்று வல்லரசுகளிடையே காணும் ஊமைச் சண்டைகளுக்குக் காரணம். விவசாயத் துறையில் கண்டெடுத்திருக்கின்ற புதுமையான கண்டுபிடிப்புகள், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இயற்கை வளங்கள், பெட்ரோல், கச்சாப் பொருள்கள் இவையெல்லாம் மனித இனத்திற்கு நன்மை பயப்பதாக இல்லை. மாறாக மனிதனுக்குத் தீமை பயப்பதாகவே இவை மாறியுள்ளன.

- சிறிய நாடுகளெல்லாம் வல்லரசு களின் நயவஞ்சகத்திற்கும், சதிகளுக்கும் உட்பட்டுத் தங்களது மனித உரிமை களையும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கின்றன. நாம் மேலே சொன்ன கண்டு பிடிப்புகள் பெரிய நாடுகளில் இடம் பெறுமேயானால் அந்தக் கண்டுபிடிப்புகள் மனித இனத்திற்கும் உலக அமைதிக்கும் ஒரு பெரும் ஆபத்தாகவே முடியும். இந்தக் கண்டுபிடிப்புகளெல்லாம் இந்தப் பெரிய நாடுகவர்களின் ஆயுத பலத்தையும் ஆதிக்க பலத்தையும் அதிகப்படுத்தவே பயன்படுத்தப்படும். இதனால்தான் நமது கல்வியறிவு, விஞ்ஞானம், இயற்கை வளங்கள், திறமைகள் இவையெல்லாம் மனிதனை அழிப்பதற்கும் இமைப்பொழுதில் இந்த உலகத்தையே அழிக்கின்ற விதத்திலும் பயன்படுத்தப்படுகின்றன எனக் கூறுகின்றோம். - நூலிலிருந்து

வேர்கள் வெளியீட்டகம்

மூலம்: அனிசுத்தீன் அஹமது
தமிழில் : மு.குலாம் முஹம்மது, M.A., in JMC.,

விலை – ரூ.120/-

போன் : 7401213394 / 7358278146 / 8148129887

# மருத்துவ மாமேதை இபுனு ஸீனா



**ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்**
**குளச்சல்**

இவர் அறிவுலக மேதை. சிறந்த மருத்துவ மேதையாகவும், ஞானியாகவும்வாழ்ந்தார். இவரின் இயற்பெயர் ஹூஸைன். அபூஅலி மகன் என அழைக்கப்பட்டார்.

இபுனுசீனா என்பது ஹீப்ருவில் அவென்சீனா என்றாகி லத்தீனில் அவிசென்னா என மருவியுள்ளது. இவர் மேனாட்டவரால் அவிசெனர் என அழைக்கப்படுகிறார். இவர் முழுப்பெயர் அபூ அலி அல்ஹூஸைன் இபுனு அப்துல்லாஹ் இபுனுஸீனா என்பதாகும். கி.பி. 980-ல் பிறந்தவர். அஃப்ஷனா சேர்ந்தவர். இவர் குர்ஆனை மனனம் செய்த ஹாபீஸ். அரபி, இலக்கியம் மார்க்க சட்ட திட்டம், கணிதம், வானஇயல், தத்துவம், மருத்துவம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றார்.

இபுனுசீனா பதினேழாவது வயதில் நோயாளிகளுக்கு இலவச மருத்துவம் செய்து குணப்படுத்தினார். இவர் ஆசிரியரின் துணையின்றி யூக்ளிட்டிஸ், அரிஸ்டாட்டில், பிளேட்டோ ஆகிய கிரேக்க அறிஞர்களின் நூற்களை ஐயமற கற்றார்.

அரிஸ்டாட்டிலின் தத்துவங்களை பொருள் விளங்காத நிலையில் ஃபாராபி எழுதிய தத்துவ நூல் மூலமே தனக்கு தத்துவ விளக்கம் கிடைத்ததாக கூறுகிறார். புகாரா மன்னர் இரண்டாவது நூஹ்பிமன்சூர் நோய் ஏற்பட அதனை குணப்படுத்த இயலாது போக இபுனு சீனாவை அழைத்து சிகிச்சை செய்ய அழைக்கப்பட்டனர்.

அபூசீனா பல அறிவியல் கண்டுபிடிப்புகளை கண்டு பிடித்தார். திரவப்பொருள்களை காய்ச்சி ஆவியாக்கி தூய்மை

படுத்துவது பற்றி இவரே முதன்முதலாக எழுதினார். கந்தக திராவகம், ஆல்கஹால் ஆகியவற்றை எவ்வாறு தயாரிப்பது அவற்றின் தன்மைபற்றியும் இவரே முதன்முறையாக குறிப்பிடுகிறார்.

தங்கத்தையும், வெள்ளியையும் தகடாக்கி (தாளை போன்று) மருந்தோடு கலந்து கொடுத்தால் நோய்க்கு மருந்தென்றும் பவளங்கள் வைரங்கள் மருந்தாக பயன் படுத்தலாமென்றும் முதன்முதலாக கூறியவர் இவரே.

இபுனுசீனாவே இஞ்செக்ஸன் மூலம் உடலில் மருந்து ஏற்றும் முறையை முதன் முதலில் செய்தவர். மேலும் வெட்டை நோய்க்கு வெள்ளி பீச்சாங்குழல் மூலம் மூத்திர பையில் இஞ்செக்ஸன் செய்ததாகவும் கூறுகிறார்.

குழந்தை பிரசவத்தின் மூலம் வெளியே வராவிட்டால் கொருடு மூலம் அதனை வெளியே கொணர்வதையும், ஸிசேரியன் ஆப்ரேசன் மூலம்(வயிற்றைக்கீறி) குழந்தையை வெளியே கொண்டு வரும் முறையையும், உடல் உறுப்புகளை ஒட்டவைப்பது, கடுமை யான காய்ச்சலுக்கு பனிக்கட்டி சிகிச்சை முறையையும் இவரே கண்டுபிடித்தார்.

இபுனுசீனா 276 நூல்கள் வரை இயற்றியுள்ளார். இவற்றுள் அல்கானுன்ஃபி என்னும் மருத்துவ நூல் சிறந்ததாகும். இந்நூலில் 760 மருந்துகள் பற்றிய குறிப்புகள் உள்ளது. இந்நூல் கி.பி. 12-ம் நூற்றாண்டில் கிரிமோனாவை ஜெராட் என்பவரால் கேனன் என்னும் பெயரில் லத்தீனில் பொழிபெயர்க்கப் பபட்டது.

இபுனுசீனாவின் அடுத்த நூல் "கிதாபுஷ் ஷிஃபா", அரிஸ்டாட்டிலின் நூற்களை இபுனு சீனாவின் விளக்கவுரையோடு மொழி பெயர்த்து அதற்கு "டியோ அவிசென்னா" என்று பெயரிட்டார். இந்நூலின் பிரதியை பெறுவதற்காக முகம்மது இபுனு துக்ளக் இரண்டு லட்சம் பொற்காசுகளை செலவளித்தார்.

இபுனு சீனாவின் மாணவர் ஒருவர் இவரின் கல்விஞானத்தை வைத்து நீங்கள் நபிகள் நாயகத்தை பின்பற்ற வேண்டியதில்லையென



சொன்ன போது தம் மாணவனை பெரிதும் கண்டித்தார்.

இபுனுசீனா இஸ்பஹானுக்கு தம் மாணவரோடு சென்றபோது காலை சுபுஹூ தொழுகைக்கு (உலூ) செய்ய தண்ணீர் கொண்டு வருமாறு கூறினார். அவரோ குளத்தின் கரையில் முனங்கி படுத்து கொண்டிருந்தார். பின்னர் பள்ளியிலிருந்து பாங்கின் ஒலி கேட்டது. முஅத்தின், "அஷ்ஹது அன்ன முகம்மதிற்ற சூலுல்லாஹ்" என ஒலி எழுப்பிய போது, தம் மாணவரிடம் முஅத்தீன் என்னசொல்கிறார் என வினா எழுப்ப, "திட்டமாக முகம்மது இறைவனின் தூதர்" என சான்று பகறுகிறேன் எனச் சொல்கிறார்.

இபுனுசீனா தம் மாணவரிடம், "பார்த்தீரா நான் உம்மிடம் தண்ணீர் கொண்டு வரச் சொல்லியும் கடுங்குளிரால் கொண்டு வரவில்லை. ஆனால் அந்த முஅத்தின் பல ஆண்டாக நபி(ஸல்) இட்ட கட்டளையை இக்குளிரிலும் பள்ளிவாயில் வந்து சொல்லும் பாங்கு, இறைதூதரின் தூதுவத்திற்கும், மனிதர்களின் தத்துவக் கலைக்கும் இதுதான் வேறுபாடென" தம் மாணவருக்கு உணர்த்தினார்கள்.

இபுனுசீனவின் உருவப்படம் பாரீஸ் பல்கலைக் கழகத்தில் வைத்து கௌரவிக்கப் படுகிறது. இவருடைய ஆயிரமாண்டு விழா உலகமெங்கும் கொண்டாடப்பட்டது. ஏட்டளவில் இருந்த இவரின் பல நூல்கள் ஐ.நா. சபையாரின் சமூக இயல் கலாச்சார பிரிவில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.



# பாலஸ்தீன் / இஸ்ரேல் போரில்

# பெண் முஜாஹிதுகள்

பாலஸ்தீனில் இஸ்ரேலுக்கும், போராளிகளுக்கும் இடையில் நடக்கின்ற இந்தப் போரில் சில புதிய தகவல்கள் கிடைத்திருக்கின்றன. போர் நிறுத்த நாட்களில் போராளிகள், அழைத்து செல்லப்பட்டவர்களை விடுவிக்கின்ற நிறைய வீடியோ பதிவுகள், புகைப்படங்களை எல்லாம் நாம் பார்த்தோம். அந்த ஹாஸ்டேஜ்களில் இளம் வயது பெண்களாக இருந்தாலும் சரி, முதியவர்களாக இருந்தாலும் சரி, ஹமாஸ் படை வீரர்களை கட்டியணைத்து தங்கள் பாசத்தை வெளிப்படுத்தி விட்டுத்தான், செல்கிறார்கள். என்பதையும் நாம் பார்த்தோம்.

நமக்கு ஆரம்பத்திலிருந்தே ஒரு சந்தேகம். அது எப்படி ஹமாஸ் சகோதரர்கள், ஹாஸ்டேஜ்களில் உள்ள பெண்களை கட்டியணைத்து பாசத்தை வெளிப்படுத்த அனுமதித்தார்கள்? அதற்கு இஸ்லாத்தில் எந்த இடத்திலும் முன்னுதாரணம் இல்லையே என்று! ஆனால் நமது இந்த சந்தேகங்களுக்கு இப்போது விடை கிடைத்திருக்கின்றது.

29 நவம்பர் அன்று ஹமாஸ் விடுவித்த ஹாஸ்டேஜ்களை அழைத்து வந்த, படை வீரரின் கண்கள், மற்றும் கைகளை காட்டி அவர்கள் பெண் போராளிகள் என்று பாலஸ்தீன் கிரானிகல்ஸ் என்ற பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. அப்போதுதான் தெரிய வந்தது இவ்வளவு நாட்கள் பெண் ஹாஸ்டேஜ்களை அழைத்து வந்து விடுவித்தவர்கள் எல்லாம் ஹமாஸ் படையிலிருந்த பெண் போராளிகள் என்று.

அதன் பிறகு விடுவிக்கப்பட்ட ஹாஸ்டேஜ்களிடம் இதுகுறித்து கேட்கப்பட்ட போது,

"ஆம்! எங்களை இத்துனை நாட்கள் பார்த்துக் கொண்டது, எங்களுக்கான வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தது, எங்களிடம் நல்ல முறையில் நடந்து கொண்டு எங்களுக்கு உணவளித்தது எல்லாம் ஹமாஸ் பிரிவைச் சார்ந்த பெண்கள் தாம்! ஆண் வீரர்கள், ஆண் ஹாஸ்டேஜ்களை தான் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் எங்கள் பக்கமே வரவில்லை." என்று சொல்லியுள்ளார்கள்.

ஆக! அங்கிருந்து வரக்கூடிய செய்திகள் நமக்கு என்ன சொல்கிறதென்றால்,

"ஹமாஸ் படைப்பிரிவில் பெண்கள் பிரிவும் ஒன்று இருந்திருக்கின்றது. அவர்கள் ஹாஸ்டேஜ்களை பார்த்துக் கொள்ளும் வேலைகளை மட்டும் செய்யவில்லை. மாறாக களத்தில் நின்றும் சண்டையிட்டிருக்கின்றார்கள். சில இடங்களில் அவர்களே தலைமை தாங்கியும் சண்டையிட்டுள்ளார்கள்."

இந்த செய்திகளெல்லாம் வெளிவந்தவுடன், அரபு நாட்டு பெண்கள், *"Brave Arab Women"* என்று பெருமையாக சொல்லிக் கொண்ட பதிவு களையெல்லாம் நம்மால் காண முடிந்தது.

இன்னும் அரபு சமூகவலைதளப் பக்கங்களில் ஹமாஸ் பெண்கள் படைப்பிரிவை குறித்து பதிவிடும் போது, "The descent of Arab women - அரபு பெண்களின் வம்சாவழி" என்று பெருமைப் பாராட்டிக் கொள்கிறார்கள்.

அரபு ஆட்சியாளர்கள் எல்லாம் கோழைகளாக இருக்கின்ற நிலையில், ஹமாஸின் பெண்கள் படைப்பிரிவே போதும் இஸ்ரேலுக்கு பாடம் புகட்ட என்று காட்டியுள்ளார்கள். இப்படி ஹமாஸ் பெண்கள் பிரிவை புகழ்ந்து தள்ளும் அரபு பெண்கள் இன்னொன்றையும் செய்ய வேண்டும். அது, "தங்களது ஆட்சியாளர்களிடம், இனிமேலாவது வளையல்களை கழட்டி வைத்துவிட்டு தைரியமாக ஆண்களைப் போல முடிவெடுங்கள்" என்று சொல்ல வேண்டும்.


இஸ்லாத்தினுடைய வரலாறு முழுவதும் இதுபோன்ற பெண்களின் வீரங்கள், தியாகங்கள் நிறைந்து கிடக்கின்றன. மார்க்கத்திற்காக முதன் முதலில் ஷஹீதான சுமையா(ரழி) அவர்களை யெல்லாம் நாம் அறிவோம். (பட்டியல் போட்டால் பக்கங்கள் போதாது).

இஸ்லாத்தினுடைய வரலாற்றில் பெண் களெல்லாம், சிறந்த நிர்வாகிகளாக, கல்வியாளர் களாக, குடும்பத் தலைவியாக, தேவைப்பட்டால் போர்களத்தில் போராளிகளாக இருந்த வரலாறெல்லாம் வேறெந்த சமுதாயத்திலும் காண முடியாது.

ஆக! பெண்ணுரிமை எனும் பேரில் தொடர்ந்து முஸ்லிம் பெண்கள் மீது விமர்சனங்களை வைத்துக் கொண்டிருந்தவர்களெல்லாம், ஹமாஸ் போராளிகளின் பெண்கள் பிரிவை கண்டு ஆடிப்போய் நிற்கிறார்கள். சென்ற தொடரில் நாம் குறிப்பிட்டது போல இணையதளங்களில் இஸ்ரேலுக்கு ஆரதவாக கூவிக் கொண்டிருந்த மேற்கத்திய பெண்ணியவாதிகள் எல்லாம் இப்போது என்ன செய்வதென்று அறியாமல் திணறிபோய் "கப்சிப்" என்று அமைதியாக இருக்கின்றார்கள்.

அல்ஹம்துலில்லாஹ் இஸ்ரேல் எனும் ஆக்கிரமிப்பு நாட்டை அகற்ற எங்கள் படையின் பெண்கள் பிரிவே போதும் என்று காட்டியிருக்கிறது ஹமாஸ்.

**எம்.ஜி.எம்.**

வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்
விலை 150/-
தாலிபானின் பிடியில்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887

(ஆப்கானிஸ்தானை அமெரிக்கா ஆக்கிரமித்த நாட்களின் போது 2001 - 2021 வரை அன்கே கிருஸ்தவ மிஷ்னரிகள், கிருஸ்தவ பிரச்சார்ங்கள் என்னென்ன செய்தார்கள் என்பதை நாம் தாலிபானின் பிடியில் என்ற யுவான்னி ரிட்லியின் நூலில் தந்துள்ளோம். வாசகர்கள் அதனை வாங்கிப் படிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். வெளியூடு: வேர்கள் பதிப்பகம்)

# பூட்டுக்குள் பூட்டிய உண்மைகள்



" கெட்ட உள்நோக்கத்தோடு கூறப்படும் ஒரு உண்மை ஆயிரம் பொய்களை விட மோசமானதாகும். "

வரலாற்றை மாற்றி அமைத்தது மட்டுமல்லாமல், வளரும் தலைமுறைகளின் மனதில் வெறுப்புணர்வை ஊட்டியது யார்? பொய்யான வரலாறு மற்றும் அரைகுறையான வரலாறுகளை வளரும் மற்றும் வளர்ந்து கொண்டிருக்கும் தலைமுறைகளுக்கு கற்பிப்பது யார்? வரலாற்றை கற்பிக்கவில்லை என்றால் அது ஒரு வகையில் வைக்கலாம். ஆனால் ஒரு உண்மையான வரலாற்றை பொய் என கருதி அந்த பொய்யை உண்மையாகுவது வெளிப்படையான பல பொய்களை விட மோசமானது. எவ்வளவு தான் உண்மையான வரலாறை இந்தியாவின் மையத்தில் தாரை தாரையாக கொட்டினாலும் 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என்பது போல அங்கு நடக்கும்.

தலை இருக்கும் இடத்தில் தலை இருந்தால் தான் மற்ற உறுப்பு சரியாக செயல்படும் அதன் பிறகு ஆரோக்கியமாக இருக்கும். எந்த ஒரு கேடும் அது விரைவில் நம்மை சேராது. ஆனால் இங்கு தலை இருக்கும் இடத்தில் வேற ஏதோ உறுப்பு இருக்கின்றது. பிறகு எவ்வாறு உடல் வலிமை பெறும் மேலும் எவ்வாறு முன்னேற்றம் அடையும்.

வாசகர் பக்கம்

### ஔரங்கசீப்–ன் தன்மை – வரலாற்றின் உண்மை

ஒரு மனிதர் அதிகமாக விமர்சிக்கப் படுகிறார் என்றால் ஒன்று மிகக் கொடுங் கோலன் அல்லது மிக்க நல்லவராகவும் சீர்திருத்த வாதியாகவும் இருக்க வேண்டும்.

ஒரு மன்னர் அல்லது நாட்டை காக்க கூடிய பொறுப்பு சுமப்பவரைப் பற்றி பல விமர்சனம் வரவில்லை என்றால் அவன் மக்களுக்கு உண்மையாக இருக்கமாட்டார். இந்த மாமன்னரின் வரலாற்றை பார்க்கும் போது எலி கடிப்பது போல் கடித்து வைத்துள்ளனர்.

- ➢இவர் தன் தந்தையை சிறையில் அடைத்தார்.
- ➢இவர் சகோதரர்களை சிறையில் அடைத்தார்.
- ➢ஹிந்துக்கள் மீது ஜிஸ்யா வரி போட்டார்.
- ➢கோயிலை இடித்தார், இவருடைய மதம் மட்டும் தான் இருக்க வேண்டும் என நினைத்தார்.

இப்படியெல்லாம் அவரை பாமர வரலாற்று ஆசிரியர்கள் எழுதி இருக்கிறார்கள். இச்செயலின் உண்மை நிலையை பொய்யாக்கி விட்டனர். இவர் தன் தந்தையையும் சகோதரர் களையும் சிறையில் அடைத்தார். உண்மை தான், ஏன் அடைத்தார்? மாமன்னர் ஔரங்க சீப் அதிகமான இறையச்சம் உடையவர். இஸ்லாம் ஆடம்பரம், வீண்விரயம், போதை வஸ்து போன்றவைகளை தடை செய்துள்ளது. ஆதலால் அவருடைய தந்தை ஆடம்பரத்தில் இருந்ததால் அவரை சிறையில் வைத்தார். ஆனால் ஔரங்கசீப் ஆட்சிக்காக தனது தந்தையை சிறையில் வைத்தார் என வசை பாடுகிறார்கள்.

இவர் ஆட்சிக்கு ஜிஸ்யா விதித்தார். இது மிகப்பெரும் குற்றச்சாட்டு, உண்மையில் வரி சுமத்தப்பட்டதுதான். ஆனால் அது இந்துக் களின் வழிபாட்டு தலங்களை நிர்வாகம் செய்வதற்கே ஆகும். இந்த வரி செலுத்து வதிலிருந்து முதியோர், பிச்சைக்காரர்கள், பாதிரியார்கள், அர்ச்சகர்கள், உடல் ஊனமுற்றோர், இராணுவத்தில் பணியாற்றுவோர் ஆகியோருக்கு விதிவிலக்கு தரப்பட்டது. இரண்டு மூன்று தவணையாக செலுத்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆறு மாத காலம் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவரிடம் வரி வசூலிக்கப்படமாட்டாது.

அந்த ஜிஸ்யா வரியை அரசுக்கு வருமானமாக அவர் ஒரு போதும் விதிக்கவில்லை. இந்த வரியும் கூட ஏற்கனவே ஆண்ட முகலாய மன்னர்களால் சுமத்தப் பட்டது தான்.

இவ்வளவு குற்றச்சாட்டு போடும் வரலாற்று ஆசிரியர்கள், மாமன்னர் பல “வரி”களை ரத்து செய்தார் இதை பேசவில்லை.

இந்துக்களின் தாங்கள் வாழ்வில் ஒரு முறையாவது காசி சென்று அங்கு ஓடிக் கொண்டிருக்கும் கங்கை நதியில் நீராடி வந்தால் பாவங்கள் நீங்கிவிடுமென்பது அவர்களின் நம்பிக்கை. இவ்விதம் காசி செல்வதற்கும் கங்கையில் குளிப்பதற்கும் வரி செலுத்த வேண்டி இருந்தது. இந்த வரியை நீக்கியது ஔரங்கசீப் ஆவார். அதே கங்கையில் இறந்தவர்களின் அஸ்தியை கரைப்பதும் அதற்காக கங்கை கரையில் சடங்குகள் செய்வதும் இந்துக்களின் பழக்கம். இதற்கும் வரி இருந்தது, இந்த வரியையும் நீக்கியதும் மன்னர் ஔரங்கசீப் ஆவார்.

புனித நதிகளில் மீன் பிடிப்பதற்கும், பசு மாடுகளில் பால் கறந்து விற்பதற்கும், சில வகை பாத்திரங்கள் செய்து விற்பதற்கும் வரிகள் இருந்தன. இதை நீக்கியதும் மன்னர் ஔரங்கசீப் தான்.

மாட்டின் சாணத்தை தட்டி சுவர்களில் ஒட்டி காய வைத்து அதை எரிபொருளாக்கிக் கொள்ளும் வழக்கம் இருந்தது. இந்த எரிபொருள் சமைப்பதற்கும் இறந்தவர்களின் உடலை எரிப்பதற்கும் பயன்பட்டது. இதற்கு ஏற்கனவே வரி இருந்தது. இந்த “வராட்டி வரி”யை விரட்டி அடித்தவர் மன்னர் ஔரங்கசீப் ஆவார். இது இந்த செயலால் பல கோடி இந்துக்கள் பயன்பெற்றனர்.

ஏதாவது ஒரு அசாதாரணமான சந்தர்ப்பத்தில் ஜாதியில் கீழ்த்தரமான ஒரு விதவை பெண்ணை ஒரு உயர்சாதி ஆண் தொட்டுவிட்டாலோ திருமணம் செய்து

கொண்டாலோ அதற்காக வரி செலுத்த வேண்டி இருந்தது. இந்த வரியை ஒழித்துக் கட்டி விதவை மணத்தை இந்து சமூகத்தில் ஊக்குவித்தவர் மன்னர் ஔரங்கசீப்.

இந்துக்களின் கோயில் திருவிழா அன்று அங்கு கடை போட்டால் வரி கட்ட வேண்டும். அதையும் தடை செய்தார்.

மன்னர் ஔரங்கசீப்புக்கும் மற்றவர்களுக்கும் பிரச்சனை எங்கே ஆரம்பித்தது என்றால், அவர் முன் ஆண்ட மன்னர்கள் பயன்படுத்திய போதை வஸ்துகளை தடை செய்தார். பாட்டு, கேளிக்கை, நாட்டியம், போன்றவைகளை தடை செய்தார்.

தனது ஆளுக்கைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அரசின் பிரதிநிதிகள் போதை பொருளை பயன்படுத்தக் கூடாது என தடை விதித்தார். இவர் பின்பற்றும் இஸ்லாம் மதம் தடை செய்துள்ளது. அதனால் இவர் தடை செய்தார்.

ஆடம்பரமாக கட்டிடம் கூட கட்டவில்லை. மேலும் இப்படி கட்டுவதை தடை செய்தார். எவருக்கும் பிடிக்கவில்லை. ஆற்றிலே தண்ணீர் போல அரசு பணத்தை ஓட விட்டால், நக்கிக் குடிக்கும் நயவஞ்சர்கள் அனைவருக்கும் போட்ட தடை.

### உடன்கட்டை ஏறுவது

ஒரு முறை போர்க்களத்தில் இறந்த ஒரு இந்து வீரர். அவரை துக்கம் விசாரிக்க வந்த மாமன்னர் ஔரங்கசீப் அந்த வீரரின் மனைவியை அந்த நெருப்பில் விழச் சொன்னார்கள். இச்செயலை இரும்பு கரம் கொண்டு தடுத்தார். அந்த இடத்தில் இவர் தனிப்பட்ட விஷயத்தில் தலையிட்டு விட்டார் என கூச்சல், என்ன நடந்தாலும் அந்த பெண்ணை உடன்கட்டை ஏற விடவில்லை.

பிறகு உத்தரவிட்டார், மொகலாய பேரரசில் எங்கும் இது போல் நிகழக் கூடாது என்றும் பின்னர் மன்னர் மத விஷயத்தில் பழி சுமத்தப்பட்டார். அப்படி செய்யவில்லை எனில், இந்தியாவில் எத்தனை பேர் தனது சகோதரியோ தனது அன்னையோ இருந்தால் அப்படி செய்ய விடுவோமா!

- ஔரங்கசீப் 80 கோயில்களை கட்டி கொடுத்தார்.
- ஜெய்னா என்னும் ஊரில் உள்ள கணபதி கோயிலுக்கு தான பத்திரம் வழங்கினார். (ஆதாரம்:-சமூக நீதி முரசு பிப்ரவரி 2012)
- குமரகுருபரருக்கு காசியில் மடம் கட்டித் தந்துள்ளார்.

### இவர் இந்து விரோதி என்று கூறுவதற்கு காரணம் என்ன?

1. இந்து கொள்கையின் முக்கியமாக கருதப்பட்ட 'உடன்கட்டை ஏறுதல்' என்ற மூட நம்பிக்கையை தடுத்து நிறுத்தினார்.

2. பாரசீகர்கள் பின்பற்றி வந்த தௌரோஜ் என்னும் புத்தாண்டு வருடம் மார்ச் 21இல் கொண்டாடப் படும். அப்போது மன்னரின் எடைக்கு எடை நிகராக தங்கம், வெள்ளி, வெற்றிலை இவற்றை (புரோகிதர்கள்) பெற்று வந்தனர். இந்த செயலினால் அரசாங்கத்தின் (மக்களின்) பணம் வீணாவதை தடுத்து நிறுத்தினார்.

3. இந்து மத நம்பிக்கையான கஞ்சா, ஆபீன் அருந்துவதை தடுத்து நிறுத்தினார்.

ஆதாரம்: வரலாற்றின் வெளிச்சத்தில் ஔவுரங்கசீப் - செ.திவான் பக்கம் 458

### கோயிலை இடித்தாரா

காசி விஸ்வநாதர் ஆலயத்தை ஔரங்கசீப் இடித்தார் என குற்றச்சாட்டு சுமத்துகிறார்கள். அது உண்மை தான். பொய்யை விட மோசமானது பாதி உண்மையை சொல்வது. அதே போல் இங்கு பாதி மட்டும் கூறுகிறார்கள். உண்மை என்னவென்றால்,

ஒருமுறை மன்னர் ஔரங்கசீப் தனது படை பரிவாரங்களுடன் தனக்கு கீழுள்ள சமஸ்தான சிற்றரசர்களுடன் வங்காளத்தை நோக்கி பயணித்தார். வழியில் கங்கை நதியில் நீராடி விஸ்வநாதர் பெருமானை தரிசிக்க விரும்பினார்கள் உடன் வந்த சிற்றரசர்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று பயணத்தை நிறுத்தினார். இந்து ராணிகள் மூடிய பல்லக்கில் வைத்து அழைத்துச் செல்லப் பட்டனர். நீராடலும் வழிபாடும் முடிந்து அனைவரும் திரும்பினர்.

அவர்களில் கட்ச் சமஸ்தான ராணி மட்டும் திரும்பி வரவில்லை. தேடியும் கிடைக்க வில்லை. கோபமுற்ற மன்னர் தனது முக்கிய அதிகாரிகளை அனுப்பி தேடச் செய்தார்.

விஸ்வநாதர் ஆலயத்திற்குள் இருந்த கணபதி சிலை லேசாக அசைந்தது. பின்னர் அதிகாரிகள் அச்சிலையை அகற்றி பார்த்தனர். உள்ளே பாதாள சுரங்கத்தின் படிகள் தெரிந்தன. உள்ளே சென்று பார்த்தால் கட்ச் ராணி மானபங்கப் படுத்தப்பட்டு அழுது கொண்டிருந்தார்.

கேள்விப்பட்ட அரசர்கள் எல்லாம் கொந்தளித்தனர். இதற்கு சரியான நீதி வேண்டும் என மன்னரிடம் கேட்டனர். கோவிலின் புனிதம் கெட்டுவிடும் என உணர்ந்தனர். உடனடியாக விஸ்வநாதர் விக்ரஹத்தை வேறு இடத்திற்கு மாற்ற சொன்னார். அதன் பின்னரே கோவில் இடிக்கப்பட்டது. அதன் புனிதஸ்தலம் அசுத்த மடைந்துவிட்டது என்பதனால் இந்த சம்பவத்தை டாக்டர் பட்டாபி சீதா ராமைய்யா பழைய தஸ்தாவேஜிகளின் இருந்து எடுக்கப்பட்ட தக்க சான்றுகளுடன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் கோயிலை இடிப்பவர் விக்ரஹத்தை இடம் மாற்றி இடிப்பாரா! கோயில் மட்டுமா! ஒரு பள்ளிவாசல் கூட இடிக்கப்பட்டிருக்கின்றது.

கோல்கோண்டாவை ஆண்டு வந்த மன்னர் வரி கட்டாமல் பல வருடம் ஏமாற்றி வந்தான். பிறகு அப்பணத்தை ஒரு பள்ளிவாசல் கட்டி அங்கு புதைத்தான். ஒற்றர்கள் மூலம் விஷயம் எட்டியது. பிறகு, அதை இடித்து தரைமட்ட மாக்கினார். பிறகு பணத்தை மக்களின் கஜானாவில் போட்டார். இந்த மாதிரி விஷயங்களில் 'மௌனம் காப்பார்கள்.' பல கோயில்கள் கூட கட்டியும் தந்து இருக்கின்றார்.

இவருடைய ஆட்சியில் இஸ்லாமிய மதச் சட்டம் தான் இருக்க வேண்டும் என நினைத்தார். ஏனென்றால், நாட்டில் ஒரு நடு நிலை இல்லை. மேல் சாதி, கீழ் சாதி, அடிமைகள், உடன்கட்டை ஏறுதல், சிசுக்கொலை இதுபோல நடுநிலை அற்றதாக இருந்தது. அதனால் இஸ்லாமிய ஆட்சியில் இதுபோல இருக்காது. அனைத்துமே நடுநிலையாகத்தான் இருக்கும் இது தவறா?

இன்று பி.ஜே.பி போன்ற கட்சிகள் தங்களின் சார்பில் எடுத்து வைப்பது இது போன்ற ஒரு கொள்கை தான். ஒரே கலாச்சாரம்! ஒரே பொது சட்டம் இப்படி எடுத்து வைக்கிறார்கள் இது எவ்வாறு நியாயமாகும். பிஜேபி எடுத்து வைப்பது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது. மாமன்னர் எடுத்து வைத்தது பகுத்தறிவுக்கு உட்பட்டது.

### *முடிவாக*

உண்மை ஒருபோதும் உறங்காது. பொங்கி எழும்போது குற்றம் செய்தவர்களால் ஏதும் செய்ய இயலாது. இன்னும் எவ்வளவோ விஷயங்கள் எவ்வளவோ வரலாறுகள் மறுக்கப் பட்டு தவறான வரலாறுகளை எடுத்துரைக் கின்றன. பாதிக்கும் மேற்பட்ட உண்மையான வரலாறு வெளிவந்தன. மேலும் வெளிவந்து கொண்டிருக்னுன்றன. எனவே வாசிக்கும் பொழுது ஆதாரங்கள் மற்றும் பல புத்தகங் களை வாசிக்க வேண்டும் அப்பொழுதுதான் உண்மை கிட்டும்.


ஆதாரங்கள் :Islam and culture (1578&1802)

பேராசியர் கே.கே.தாத்தா

R.N. Agarwal The Dialogue between Hindus & Muslims

அதிரை இப்ராஹிம் அன்சாரி M.Com


**- Afraas Ameen**

# இஸ்லாமிய வழியில் போரும்...!

# அதன் வழிமுறைகளும்....!

**தூய எண்ணம்**

தலை

"ஒருவர் தம்முடைய திறமையைக் காட்டுவதற்காக போர் புரிகின்றனர். வேறொருவர் தம்முடைய கூட்டத்தினரின் கண்ணியத்தைக் காப்பதற்காகக் போர் புரிகின்றனர். மற்றொருவர் மக்களுக்குக் காட்டுவதற்காக போர் புரிகின்றார். இவர்களில் எவர் இறைவழியில் போர் புரிந்தவராவார்?" என்று முஹம்மது நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் "அல்லாஹ்வின் வாக்கு (மார்க்கம்) மேலோங்கும் பொருட்டு எவர் போர் புரிகின்றாரோ அவர்தாம் இறை வழியில் போர் புரிந்தவராவார்" என்று கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபூமூஸா(ரலி ) நூல் : புகாரி)

"நாயகமே.. ஒருவர் இறைவழியில் போர் புரிய நாடுகிறார். ஆனால் அவர் அதன் காரணமாக உலகப் பொருள்களையும் அடைய விரும்புகின்றார். (இத்தகையோருக்கு பலன் அளிக்கப்படுமா?)" என்று ஒருவர் கேட்டார். அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் "அவருக்கு எத்தகைய நன்மையுமில்லை" என்று பதிலளித்தார்கள். பின்னர் அவர் அவர்களிடம் மூன்று முறை இதையே திரும்பக் கேட்டார். ஒவ்வொரு முறையும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "அவருக்கு எத்தகைய நன்மையுமில்லை" என்றே பதில் அளித்தார்கள்."(அறிவிப்பாளர்: அபூஹூரைரா ( ரலி ) நூல் : அபூதாவூத்)

போர் இரண்டு வகைப்படும். எவனொருவன் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே போரில் கலந்து கொண்டானோ, தலைவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடந்தானோ, தன் செல்வத்தின் சிறப்பானதை செலவு செய்தானோ, சீர்குலைவை ஏற்படுத்தாது விலகி இருந்தானோ அவனுடையய தூக்கமும், விழிப்பும் அவனுக்கு நன்மையாகவே முடியும்.

எவனோருவன் மக்களுக்கு காட்டுவதற்காக போர் புரிந்தானோ, புகழுக்கும், பெருமைக்கும் ஆசைப்பட்டானோ, தலைவனுக்கு மாறு செய்தானோ, பூமியில் சீர்குலைவை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபட்டானோ அவனுக்குச் சமமானதும் கிடைக்காது. (அதாவது வேதனையில் குப்புற விழுவான்.) (அறிவிப்பாளர்: முஆது இப்னு ஜபல்(ரலி ) நூல் : அபூதாவூத்)

"காட்டரபிகளில் ஒருவர் முஹம்மது நபி(ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாத்தை தழுவினார். பின்னர் அவர் (முஹம்மது நபி(ஸல்) அவர்களை நோக்கி) நான் தங்களுடன் தான் புறப்படுவேன் என்று கூறினார். அப்பொழுது முஹம்மது நபி (ஸல்) தங்கள் தோழர்களிடம், "இவர் பற்றியும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள் என்றனர். பின்னர் ஒரு போர் நிகழ்ந்த போது அதில் நபி(ஸல்) அவர்களுக்கு அதிகமான ஆடுகள் கிடைத்தன. எனவே அவர்கள் அவற்றை பங்கு வைத்தார்கள். அப்பொழுது அந்த காட்டரபிக்கும் அவருக்குரிய பங்கு அளிக்கப்பட்டது. அது கண்டு அவர் இது என்ன? என்று வினவினார். அதற்கு முஹம்மது நபி(ஸல்) அவர்கள், "இதனை நான் உமக்கு உமக்குரிய பாகமாக அளிக்கிறேன் என்றார்கள். அதற்கு அவர் நான் இதற்காக தங்களைப் பின்பற்றவில்லை. எனினும் நான் இங்கு அம்பால் எய்யப்பட்டு என்று கூறித் தம் கையால் தம் தொண்டையைக் காட்டி இறந்து சுவனபதி சென்று விடத்தான் தங்களைப் பின்பற்றி இருக்கிறேன்" என்று கூறினார்.

அதற்கு முஹம்மது நபி(ஸல்) அவர்கள் "நீர்,அல்லாஹ்வை உண்மையாளன் என்று நம்புவீராயின் அவனும் உம்மை உண்மையாளராக்கி விடுவான் என்று கூறினார்கள். இதன் பின் சற்று நேரம் தான் மக்கள் அங்கு தங்கியிருந்தனர். பின்னர் போர் செய்வதற்காக எதிரிகளை நோக்கி சென்றனர். இதன் பின் அவர் முஹம்மது நபி(ஸல்) அவர்களிடம் சுமந்து கொண்டு வரப்பெற்றார். நிச்சயமாக அவர் காட்டிய இடத்திலேயே அம்பு பட்டிருந்தது. அப்பொழுது நபி(ஸல்) அவர்கள் அவர்தானா இவர்? என்று வினவினார்கள். அதற்குத் தோழர்கள் "ஆம்" என்று மறுமொழி பகர்ந்தனர். எனவே முஹம்மது நபி(ஸல்) அவர்கள் "அவர் அல்லாஹ்வை உண்மையாக்கி வைத்தார். அவனும் அவரை உண்மை கூறியவராகச் செய்து விட்டான்" என்று கூறினார்கள்.

பின்னர் அவருக்கு முஹம்மது நபி(ஸல்) அவர்களின் ஜிப்பாவினால் கஃபனிடப்பட்டது. அவர் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் முன் வைக்கப்பட்டார். அப்பொழுது அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அவருக்கு ஜனாஸா தொழுகை தொழ வைத்தார்கள். அவர்கள் தொழுகையில் "இதோ உன்னுடைய அடியார் உன்னுடைய பாதையில் ஹிஜ்ரத் செய்து புறப்பட்டு பின்னர் தியாகியாகக் கொல்லப்பட்டார். இதற்கு நான் சாட்சியாக உள்ளேன்" என்று கூறியது என் செவிப்பட்டது. (அறிவிப்பாளர் : ஷத்தாத் இப்னு ஹாதீ(ரலி) நூல்: நஸயீ )

**பிரார்த்தனை**

"இறைவா, நீயே எனக்கு பக்க பலமாகவும், நீயே எனக்கு உதவியாளனாகவும் இருக்கின்றாய். உனது உதவி கொண்டு நான் நடமாடுகிறேன். அன்றியும் உனது உதவி கொண்டு நான் படையெடுக்கின்றேன். மேலும் நான் உனது உதவி கொண்டு போர் செய்கிறேன்" என்று முஹம்மது நபி(ஸல்) அவர்கள் போர் தொடுக்கும் போது பிரார்த்தித்து வந்தார்கள். (அறிவிப்பாளர்: அனஸ் (ரலி ) நூல் : திர்மிதி)

"ஈமான் கொண்டவர்களே. நீங்கள் (போரில் எதிரியின்) கூட்டத்தை சந்திப்பீர்களாயின் உறுதியாக இருங்கள். அல்லாஹ்வை அதிகமாக தியானம் செய்யுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள். (அல் அன்ஃபால் : 45)

**வரம்பு மீறாதீர்கள்**

"உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை." (அல் பகரா: 190)

"நம்பிக்கை கொண்டோரே, நீங்கள் அல்லாஹ்வுக்காக நீதியைக் கொண்டு சாட்சி கூறுகிறவர்களாக (உண்மையின் மீது) நிலைத்தவர்களாக ஆகிவிடுங்கள். ஒரு கூட்டத்தார் மீது (நீங்கள் கொண்டு)ள்ள பகைமை, நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிக நெருக்க மாகும். அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்." (அல் மாயிதா : 8)

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் எவரையேனும் பெரும்படைக்கோ, சிறுபடைக்கோ தளபதியாக நியமித்தார்களானால் குறிப்பாக அவருக்கு அல்லாஹ்வுக்கு அஞ்சுமாறும், அவருடன் இருக்கும் முஸ்லிம்களை நல்லதைக் கொண்டு கட்டளையிடுமாறும் அறிவுரை பகர்ந்து வந்தார்கள். மேலும் அவர்கள் (அல்லாஹ்வின் பெயரைக்

கொண்டு) இறைவழியில் போர் செய்யுங்கள். நம்பிக்கை கொள்ளாதவருடன் போர் செய்யுங்கள். போரில் கிடைத்த பொருள்களைக் களவாடாதீர்கள். வாக்குறுதியையும், உடன்படிக்கையையும் மீறாதீர்கள். மேலும் எவரையும் சித்திரவதை செய்ய வேண்டாம். சிறுவர்களையும், முதியவர்களையும் கொல்ல வேண்டாம். அன்றியும் நீங்கள் உங்கள் விரோதிகளான இணைவைப்பவர்களை சந்தித்தால் (முதலில்) அவர்களை மூன்று செயல்களின் பக்கம் அழையுங்கள். உங்களிடம் அவர்கள் அவற்றிற்கு தங்களின் இணக்கத்தை தெரிவித்து விட்டால் அவர்களிடமிருந்து அதனை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் போர் புரிவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**1.** அவர்களை இஸ்லாத்தின் பால் அழையுங்கள். அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டால் அவர்களின் இணக்கத்தை ஏற்று அவர்களுடன் போர் புரிவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**2.** பின்னர் அவர்களை அவர்களுடைய இல்லங்களை விட்டும் முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்திருக்கும் இடத்திற்கு ஹிஜ்ரத் செய்யுமாறு அழையுங்கள்.

அவர்கள் அவ்விதம் ஹிஜ்ரத் செய்வார்களாயின் முஹாஜிரீன்களுக்குரிய நன்மைகள் போன்று அவர்களுக்கும் உண்டு. முஹாஜிரீன்களுக்குரிய சிரமங்கள் போன்று அவர்களுக்கும் உண்டு.(அதாவது முஹாஜிரீன்களுக்குரிய நன்மை, தீமைகள் போன்று அவர்களுக்கும் உண்டு.) என்று அவர்களுக்கு அறிவித்துவிடுங்கள்.

அவ்விதம் அவர்கள் (ஹிஜ்ரத் செய்து) குடியேற மறுத்துவிடுவார்களாயின் அவர்களும் கட்டுப்படாத முஸ்லிம்கள் போன்றே கருதப்படுவர். முஸ்லிம்கள் மீது அல்லாஹ்வுடைய கட்டளைகள் விதிக்கப்படுவது போன்று அவர்கள் மீதும் விதிக்கப்படும் என்பதையும், மேலும் அவர்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து இறைவழியில் போர் புரியாதவரை அவர்களுக்கு போரில் கிடைத்த பொருள்களிலும் பங்கு இல்லை என்பதையும் அவர்களுக்கு எடுத்துரைத்து விடுங்கள்.

**3.** இவற்றிற்கு அவர்கள் இணங்காவிடின் அவர்களை வரி செலுத்துமாறு கூறுங்கள். அவர்கள் அதற்கும் இணங்கிவிடின் அவர்களிடமிருந்து வரியை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களிடம் போர் புரிவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இதனையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் பின்னர் நீங்கள் அல்லாஹ்விடம் அவர்கள் மீது வெற்றி கொள்ளக் கோரி அவர்களுடன் போர் செய்யுங்கள்.(அறிவிப்பாளர் : புரைதா ( ரலி ) நூல் : அபூதாவுத், திர்மிதி)

**முதலாம் கலீஃபா அபூபக்கர்( ரலி ) சிரியாவுக்கு படையை அனுப்பி வைத்த போது பத்து அறிவுரைகளை அவர்களுக்கு வழங்கினார்கள்.**

1. பெண்கள், குழந்தைகள், முதியோர்களைக் கொல்லக்கூடாது.

2. உறுப்புகளை சிதைக்கக் கூடாது.

3. துறவிகளை, வணக்கசாலிகளைத் துன்புறுத்தக் கூடாது. அவர்களுடைய வழிபாட்டு இடங்களை தாக்கக் கூடாது.

4. பழம் தரும் கனிமரங்களை வெட்டக்கூடாது. வயல் நிலங்களை எரிக்கக் கூடாது.

5. வசிப்பிடங்களை பாழடைந்ததாக ஆக்கி விடக்கூடாது.

*6.* கால்நடைகளை அழித்து விடாதீர்கள்.

*7.* வாக்கு மோசடியை விட்டு எப்பொழுதும் விலகியே இருக்க வேண்டும்.

*8.* கீழ்ப்படிய ஒத்துக்கொண்டவர்களுடைய உயிரும், பொருளும் முஸ்லிம்களுடைய உயிரையும். பொருளையும் போன்றே மதிக்கப்பட வேண்டும்.

*9.* போர்ப்பொருட்களில் மோசடி செய்து விடாதீர்கள்.

*10.* போரில் புறமுதுகு காட்டி விடாதீர்கள்.

**ஒப்பந்தத்தைப் பேணுங்கள்**

*"ஒப்பந்தங்களை முறையாகப் பேணி வாருங்கள். ஒப்பந்தம் குறித்து விசாரணை செய்யப்பட்டே தீருவீர்கள்.(பனீ இஸ்ராயீல்: 34)*

*முஆவியா(ரலி) அவர்களுக்கும், ரோமானியர்களுக்கும் இடையே (போர் ஒய்வுக்கான) ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. முஆவியா(ரலி) அவர்கள் இதே அமைதிக் காலகட்டத்தில் (தமது படையை அழைத்துக் கொண்டு ) ரோம் நாட்டின் எல்லையை நோக்கி புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் திட்டம் ஒப்பந்தத்திற்கான கால கட்டம் முடிந்ததுமே எதிரிகளின் மீது திடீர் தாக்குதல் தொடுத்திட வேண்டும். (அதற்கான பயணத்தில் முஆவியா (ரலி) அவர்கள் இருந்து கொண்டிருந்த நிலையில்) குதிரையின் மீது சவாரி செய்து கொண்டு ஒரு மனிதர் வந்தார். அவர் கூறினார். "அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்! ஒப்பந்தத்தைப் பேணுங்கள். ஒப்பந்தத்தை முறிப்பதை விட்டு விலகுங்கள்".*

*முஆவியா(ரலி) அவர்கள் அந்த மனிதர் யார் என்று பார்த்த போது அவர், அமர் இப்னு அபஸா(ரலி) அவர்கள் என்பது தெரிய வந்தது. அவர்களிடம் முஆவியா(ரலி) அவர்கள் அதைக் குறித்து விசாரித்த போது அவர்கள் கூறினார்கள். முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டிருக்கிறேன். "உங்களில் ஒருவருக்கும், ஒரு சமுதாயத்தவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அதில் அவர் எவ்வித மாற்றமும் செய்வது கூடாது. எதுவரையெனில் அதற்கான காலத்தவணை முடிவடையும் வரையில் அல்லது அந்த ஒப்பந்தத்தை பகிரங்கமாக எதிரிகளிடம் எறிந்து விடும் வரையில்" இந்த நபிமொழியைக் கேட்டு முஆவியா(ரலி) தன் படையினை அழைத்துக் கொண்டு திரும்பி விட்டார்கள்.(அறிவிப்பாளர்: ஹலீம் இப்னு ஆமிர் (ரலி) நூல் : அபூதாவுத்)*

*"(உம்முடன் உடன்படிக்கை செய்திருக்கும்) எந்தக் கூட்டத்தாரும் மோசம் செய்வார்கள் என நீர் பயந்தால் (அதற்குச்) சமமாகவே (அவ்வுடன்படிக்கையை) அவர்களிடம் எறிந்து விடும். நிச்சயமாக அல்லாஹ் மோசம் செய்பவர்களை நேசிப்பதில்லை."(அல் அன்ஃபால்: 58)*

*"ஆனால் நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்ட இந்த முஷ்ரிக்குகளில் எதையும் குறைத்து விடாமலும், உங்களுக்கு விரோதமாக எவருக்கும் உதவி செய்யாமலும் இருக்கின்றார்களோ அவர்களைத் தவிர அவர்களுக்கு அவர்களின் உடன்படிக்கையை அவர்களின் காலக்கெடு வரையில் பூரணமாக நிறைவேற்றுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக்கின்றான்."(அத்தவ்பா : 4)*

**ஜிஹாத்திற்காக தயார் நிலையில் இருப்பது**

*(நிராகரிப்பாளர்களான) அவர்களுக்காக (அவர்களை எதிர்ப்பதற்காக) உங்களால் இயன்ற அளவு பலத்தையும் (திறமையான) போர்க்குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும், உங்களுடைய எதிரியையும்*

*அச்சமடையச் செய்யலாம். அவர்கள் அல்லாத வேறு சிலரையும் (நீங்கள் அச்சமடையச் செய்யலாம்) அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள். அல்லாஹ் அவர்களை அறிவான். அல்லாஹ்வுடைய வழியில் நீங்கள் எதைச் செலவு செய்தாலும் (அதற்கான நற்கூலி) உங்களுக்குப் பூரணமாகவே வழங்கப்படும். (அதில்) நீங்கள் (ஒரு சிறிதும்) அநீதம் இழைக்கப்படமாட்டீர்கள். (அல் அன்ஃபால் : 60)*

*நிறைவான போர்க்கவசங்கள் செய்வீராக, அவற்றின் வளையங்களில் (அளவை) ஒழுங்குபடுத்திக் கொள்வீராக, நற்செயல்கள் நீங்கள் செய்வீர்களாக, நிச்சயமாக நான் நீங்கள் செய்பவற்றை உற்று நோக்குபவனாக இருக்கிறேன். (பைவு : 11)*

*நம்பிக்கையாளர்களே, பொறுமையுடன் இருங்கள். (இன்னல்களை) சகித்துக் கொள்ளுங்கள். (ஒருவரை ஒருவர்) பலப்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். (இம்மையிலும், மறுமையிலும்) நீங்கள் வெற்றியடைவீர்கள்) (அன்னிஸா : 200)*

*நம்பிக்கையுடையவர்களே, (எதிரிகளிடம் எந்நேரமும்) நீங்கள் முன்னெச்சரிக்கையாக இருங்கள். சிறு சிறு கூட்டங்களாகவோ அல்லது அனைவரும் ஒன்று சேர்ந்தோ (எச்சரிக்கையுடன்) செல்லுங்கள்.(அன்னிஸா : 71)*

*நிராகரிப்பவர்கள் அவர்களில் சிலர் சிலருக்குப் பாதுகாவலர்களாக இருக்கின்றனர். நீங்கள் இதைச் செய்யா விட்டால் (அதாவது ஒருவருக்கொருவர் பாதுகாவலராக இருக்காவிட்டால்) பூமியில் குழப்பம் ஏற்பட்டுவிடும். (அல் அன்ஃபால் : 73)*

*உக்பா பின் ஆமிர்(ரலி) அவர்கள் கூறியதாவது; அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீதிருந்தபடி "நீங்கள் அவர்களுக்கெதிராக உங்களால் இயன்ற அளவுக்குப் பலத்தை தயார்படுத்திக் கொள்ளுங்கள். (8:60) எனும் வசனத்தை ஓதி விட்டு, அறிந்து கொள்க, பலம் என்பது அம்பெய்வதாகும். அதிக பலம் என்பது அம்பெய்வதாகும். பலம் என்பது அம்பெய்வதாகும்" என்று கூறினார்கள். (புகாரி)*

*அப்துர் ரஹ்மான் இப்னு ஷீமாசா(ரஹ்) அவர்கள் கூறியதாவது: "ஃபுகைம் அல்லக்மீ என்பவர் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்களிடம் (முதியவரான) தாங்கள் (அம்பெய்வதற்காக) இவ்விரு இல்க்குகளுக்கிடையே உங்களை சிரமப்படுத்திக் கொள்கிறீர்களே) என்று கேட்டார். அதற்கு உக்பா பின் ஆமிர்(ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களிடமிருந்து ஒரு செய்தியை நான் செவியுற்றிராவிட்டால் இதற்காக நான் சிரமம் எடுத்துக் கொள்ள மாட்டேன்." என்று கூறினார்கள்.*

*அதன் அறிவிப்பாளராக ஹாரிஸ் பின் யகூப் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "நான் அப்துர் ரஹ்மான் இப்னு ஷீமாசா(ரஹ்) அவர்களிடம் அது என்ன (செய்தி)? என்று கேட்டேன். அதற்கு அப்துர் ரஹ்மான் "அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் யார் அம்பெய்வதைப் பயின்ற பின் அதைக் கைவிட்டு விடுகிறாரோ அவர் நம்மைச் சேர்ந்தவர் அல்லர் அல்லது (நமக்கு) மாறு செய்துவிட்டார் என்று கூறினார்கள்" என விடையளித்தார்கள்.(புகாரி)*

*ஸலமா பின் அக்வஃ(ரலி) அவர்கள் கூறியதாவது: பனூ அஸ்லம் குலத்தார் சிலர் அம்பெய்யும் போட்டியில் ஈடுபட்டிருந்த போது நபி(ஸல்) அவர்கள், இஸ்மாயிலின் சந்ததிகளே, அம்பெய்யுங்கள். ஏனெனில் உங்கள் தந்தை (இஸ்மாயில்(அலை) அவர்கள் அம்பெய்வதில் தேர்ச்சி பெற்றவராக இருந்தார்கள். நீங்கள் அம்பெய்யுங்கள். (போட்டியில்) நான் இன்ன குலத்தாருடன் இருக்கிறேன்" என்று கூறினார்கள்.*

*உடனே இரு பிரிவினரில் ஒரு சாரார் அம்பெய்வதை நிறுத்திக் கொண்டார்கள். அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள், உங்களுக்கென்ன ஆயிற்று? ஏன் அம்பெய்யா*

மிலிருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், "தாங்கள் அவர்களுடன் (எதிர்த்தரப்பினருடன்) இருக்க நாங்கள் எப்படி அம்பெய்வோம்? என்று சொன்னார்கள். உடனே நபி (ஸல்) அப்படியானால் நான் உங்கள் அனைவருடனும் இருக்கின்றேன். நீங்கள் அம்பெய்யுங்கள்" என்று கூறினார்கள்.(புகாரி)

அபூஹுரைரா(ரலி) அவர்கள் கூறியதாவது: (ஒருமுறை) அபிசீனியர்கள் (எத்தியோப்பியர்கள்) நபி(ஸல்) அவர்கள் முன்னே தங்கள் ஈட்டிகளால் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது உமர்(ரலி) அவர்கள் வந்து (இதைப் பார்த்து கோபம் அடைந்து) குனிந்து சிறு கற்களை எடுத்து அவற்றால் அவர்களை அடித்தார்கள். நபி(ஸல்) அவர்கள், "உமரே அவர்களை விட்டு விடுங்கள்" என்று கூறினார்கள். மற்றொரு அறிவிப்பில் இந்த விளையாட்டு பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்றது என்று வந்துள்ளது.(புகாரி)

அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (இறைவழியில் செலுத்தப்படும்) குதிரைகளின் நெற்றிகளில் மறுமை நாள் வரைக்கும் நன்மை உள்ளது." (புகாரி)

அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். "அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டும், அவனது வாக்குறுதியை நம்பியும் எவர் அல்லாஹ்வின் பாதையில் (ஜிஹாத் செய்வதற்காக) ஒரு குதிரையை கட்டி வைக்கின்றாரோ, அவர் அதற்குப் போடுகின்ற தீனியும், அதற்குப் புகட்டுகின்ற தண்ணீரும், அதன் சாணமும். அதன் சிறுநீரும் மறுமை நாளில் அவரது (செயல்கள் நிறுக்கப்படும் தராசில் அவரது நற்செயல்கள்) தட்டில் (வைத்து எடை) போடப்படும்." (புகாரி)



**ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின்**

**தியாக வரலாறு**

**விலை 120/-**




முஜாஹிதீன் என்றழைக்கப்படும் இவர்கள் யார்? எல்லாம் வல்ல இறைவனைத் தவிர வேறு யாருக்கும் எதற்கும் அஞ்சத் தேவையில்லை, அடிபணியத் தேவையில்லை என்ற இஸ்லாமியத் தத்துவத்தை முன்னிறுத்தி தங்கள் வாழ்வின் அனைத்து சுகங்களையும் தியாகம் செய்து, தமது தாய்நாட்டை ஆக்கிரமித்த அந்நிய நாட்டவடை எதிர்த்து வீறுகொண்டெழுந்தவர்கள் தாம் இந்த முஜாஹித்கள்.



ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து ஆட்சி நடத்தலாம்; கம்யூனிஸத்தை அந்நாட்டு மக்களிடம் திணித்து விடலாம் என்ற எண்ணத்தில் தனது ராணுவத்தை அனுப்பு அட்டூழியம் செய்த ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் எண்ணத்தையே தூள்தூளாக்கிய அந்த விடுதலைப் போராளிகளின் வீர வரலாறு தான் இந்த நூல்.

இதுபோன்ற நூல்களை சகோதர சமுதாயத்தவர்களுக்கு அறிமுகப் படுத்துவதன் மூலம், தேவைப்பட்டால் வாங்கித் தருவதன் மூலம் வாசகர்களும் உண்மையை ஊரறியத்தரும் முயற்சியில் உங்களையும் இணைத்து கொள்ளுங்கள்....!

வேர்கள்

இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

**மு.குலாம் முஹம்மது M.A.,**

**போன் : 7401213394 / 7358278146 / 8148129887**

# 2k ‘கிட்ஸ்’ சிறுவர்களுக்கு

## நபி(ஸல்) அவர்கள் சொல்லும் அறிவுரைகள்



அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: “ஒரு நாள் நான் நபியவர்களின் பின்னால் வாகனத்தில் அமர்ந்திருந்தேன்.

அப்போது நபியவர்கள் என்னைப் பார்த்து சிறுவனே! நான் உனக்கு சில வார்த்தைகளை கற்றுத் தரட்டுமா?! அல்லாஹ் அதன் மூலம் உனக்கு நற்பயனை வழங்குவான்!” என்று கேட்டார்கள். நான், “ஆம்! அல்லாஹ்வின் தூதரே! அவசியம் கற்றுத்தாருங்கள்! என்றேன். அப்போது மாநபி(ஸல்) அவர்கள்

- அல்லாஹ்வை நீ பேணிக்கொள்! (பயந்து கொள்). அவன் உன்னை பாதுகாப்பான்.
- அல்லாஹ்வை நீ பேணிக்கொள்! (பயந்து கொள்) உனக்கு முன்னால் அவனை நீ காண்பாய்.
- நீ ஆரோக்கியமாகவும், செழுமையாகவும் வாழும் காலத்தில் அல்லாஹ்வை நினைத்து வாழ்! உன்னுடைய கஷ்டமான காலத்தில் அல்லாஹ்வும் உன்னை நினைவில் வைத்திருப்பான்.

குழந்தை வளர்ப்பு

➢ நீ ஏதாவது கேட்டால் அல்லாஹ்விடமே கேள்!

➢ நீ உதவி தேடினால் அல்லாஹ்வைக் கொண்டே உதவி தேடு! ஏனெனில், எழுது கோள்கள் உயர்த்தப்பட்டுவிட்டன! எவைகள் எல்லாம் உண்டாக வேண்டும் என அவன் தீர்மானித்தானோ அவைகள் எல்லாம் உண்டாகி விட்டன.


➢ அறிந்து கொள்! முழு மனித சமூகமும் ஒன்று சேர்ந்து உனக்கொரு நன்மையான காரியத்தை செய்ய நாடினாலும் அதனை அல்லாஹ் உனக்கு விதித்திருந்தால் தவிர அவர்களால் எதுவும் செய்ய முடியாது!

➢ அவ்வாறு தான் முழு மனித சமூகமும் ஒன்றிணைந்து உனக்கொரு தீங்கை விளைவிக்க முற்பட்டாலும் அல்லாஹ் உனக்கு அந்த தீமையை விதித்திருந்தாலே தவிர அவர்களால் அதனை செய்ய முடியாது!

➢ அறிந்துகொள் சிறுவனே! நீ வெறுக்கின்ற பல காரியங்களில் பொறுமை(அல்லாஹ்வின் பாதையில் நிலைத்திருப்பது) மேற்கொண்டால் பல நல்ல விளைவுகளைக் காண்பாய்!

➢ திண்ணமாக! அல்லாஹ்வின் உதவி என்பது பொறுமை(அல்லாஹ்வின் பாதையில் நிலைத்திருப்பது) கொள்வதில் தான் இருக்கின்றது!, திண்ணமாக, மகிழ்ச்சி என்பது சிரமத்தை ஏற்றுக் கொள்வதில் தான் இருக்கின்றது! திண்ணமாக, இலகு என்பது கஷ்டத்தைத் தாங்கிக் கொள்வதில் தான் இருக்கின்றது!" என்று கூறினார்கள்.

(நூல்: திர்மிதீ)


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குளு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

விலை: ரூ.120/-

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887

முதியோர் நோய்த்தொற்றுகள் மனித இருப்புக்கு எப்போதும் தடையாக உள்ளன. *65* வயதுக்கு மேற்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் நோய்த்தொற்றுகளால் இருக்கின்றனர். ஆனால் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஆண்டிபயாட்டிக் எனும் எதிர்ப்பு மருந்துகள் கண்டுபிடித்ததற்குப் பிறகு இந்த அதிசய மருந்துகள் எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றியுள்ளன.

மனித நோய் எதிர்ப்பு அமைப்பு ஆண்டிபயாட்டிக் எனும் எதிர்ப்பிகளின் உதவியுடன் தொற்று நோயை எதிர்த்துப் போராடி முழுமையான சிகிச்சையை வழங்குகிறது. ஆனால் வயாதாகும் போது மற்ற உறுப்புகள் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் பலவீனத்தால் குறைவாகவே செயல்படுகிறது. இதன் பொருள், வயதானவர்கள் தொற்று நோய்களின் அதிக ஆபத்தில் உள்ளனர் மற்றும் அதன் சிக்கல்களும் நோய்த்தொற்றும் மிகவும் கடுமையாக இருக்கலாம். இதனால் வயதானவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது.

அதோடு வயதானவர்களுக்குப் பின்வரும் நோய்கள் வர வாய்ப்புகள் அதிகம்.

*01.* குளிர் காலத்தில் நிமோனியா அல்லது நுரையீரல் தொற்று ஏற்படும். இருமல், நெஞ்சுவலி, காய்ச்சல் மற்றும் மூச்சுத்திணறலை ஏற்படுத்துகிறது. சில சமயங்களில் மார்பில் திரவம் சேர்வதையும் ஏற்படுத்துகிறது. நிமோனியாவால் ஏற்படும் இறப்புகளில் **90%** *65* வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே ஏற்படுகிறது.

*02.* குளிர் காலத்தில் ஏற்படும் ஃப்ளூ அல்லது இன்ஃப்ளூயன்சா, *65* வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நிமோனியா உள்ளிட்ட சிக்கல்களை ஏற்படுத்தலாம். (உதாரணம்: பன்றிக் காய்ச்சல், ஃப்ளூ வந்தால் மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படக் காரணமாகிறது.

*03.* ஹெர்பெல் ஜோஸ்டர் பொதுவாக *50* வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படுகிறது. மேலும் வலி மிகுந்த நரம்பு அழற்சிக்கு வழிவகுக்கும்.

*04.* மாதவிடாய் நின்ற பெண்கள் மற்றும் புராஸ்டேட் விரிவாக்கம் கொண்ட வயதான ஆண்களுக்கு சிறுநீர்ப் பாதையில் நோய்த்தொற்று மிகவும் பொதுவானது. இது செப்டிசிமியாவை உண்டாக்கலாம். இதன் காரணமாகச் சிறுநீர்ப் பாதையில் அடிக்கடி தொற்று வர வாய்ப்புகள் அதிகம்.



முதியோர்களுக்கு *3* நாட்களுக்கு மேல் காய்ச்சலோ, தலைச்சுற்றலோ, சுவாசிப்பதில் சிரமமோ, ஒரு வாரத்திற்கு மேல் தொடர்ந்து இருமல் இருந்தாலோ, வாந்தி, வயிற்றுப் போக்கு அல்லது மயக்கம் ஏற்பட்டாலோ உடனடியாக மருத்துவரைச் சந்திக்க வேண்டும்.

வயதானவர்களுக்கு நோய்த்தொற்றை முன்கூட்டியே கண்டறிவது மிகவும் கடினம். ஏனென்றால் காய்ச்சல் மற்றும் அதிகரித்த வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை போன்ற பொதுவான அறிகுறிகள் மற்றும் அறிகுறிகள் இல்லாமல் இருக்கலாம். இந்த நிலையில் தூக்கமின்மை என்பது முன்வைக்கும் பிரச்னையாக இருக்கலாம்.

ஆண்டிப்பயாடிக் எனும் எதிர்ப்பின் அதிகரிப்பு நோய்த்தொற்றுகளுக்கான சிகிச்சையைக் கடினமாக்கக்கூடும்.

நீங்கள் வயதாகும் போது உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த பின்வரும் விதிமுறைகளைப் பின்பற்றவும்...


- குறைந்தது ஏழு மணி நேரம் ஓய்வு மற்றும் தூக்கம்.
- ஒரு நாளைக்கு குறைந்தது *30* நிமிடங்களாவது நடைபயிற்சி - சைக்கிள் ஓட்டுதல் - நீச்சல் பயிற்சி அல்லது வெளிப்புற விளையாட்டுகள் அல்லது வாரத்திற்கு *150* நிமிடங்கள் இதற்காக ஒதுக்க வேண்டும்.
- புகையிலை, புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பழக்கம் போன்ற தீய பழக்கங்களைத் தவிர்த்தல்.
- திக்ர் மன அழுத்தத்தைக் குறைக்கிறது.
- சரிசமமான உணவை உண்ணுதல் (சைவம் அல்லது அசைவம்).
- மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசியை எடுத்துக்கொள்ள வேண்டும். *(TDAP, FLU, PNEUMONIA, SHINGLES)*

நீங்கள் ஆரோக்கியமாக இருப்பது மிகவும் அவசியம். நாம் தினமும் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல் சர்க்கரை அளவையும், ரத்தக் கொதிப்பையும் நாம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் நாமாகவே மருந்து எடுத்துக் கொள்ளக் கூடாது. மருத்துவரின் ஆலோசனைக்குப் பிறகு எடுத்துக் கொள்வது மிகவும் அவசியம். முக்கியமாக நாம் அனைத்துத் தடுப்பூசிகளையும் மறக்காமல் போட்டுக் கொள்வது மிகவும் அவசியம்.

**டாக்டர் வி.ராமசுப்ரமணியம்**

(தொற்று நோய் நிபுணர் & ஆலோசகர்)

நன்றி: முதுமை எனும் பூங்காற்று



முஸ்லிம்கள் தான் கஷ்மீரிலிருந்து பண்டிட்டுகளை விரட்டியடித்தார்கள் என்ற ஒரு பொய் பிரச்சாரத்தை நீண்ட நாட்களாகவே பாசிஸ்டுகள் பரப்பி வருகின்றனர். அதுகுறித்த உண்மை வரலாற்றை அறிய நமது ஆசிரியர் அவர்களின் தொகுப்பில் வெளிவந்த நூலான "கஷ்மீரின் பாதி விதவைகள்" எனும் நூலை வாங்கிப் படியுங்கள். நூலைப் பெறுவதற்கான தொடர்பு எண் - 8148129887.

# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west's Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**






இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம், முதல் நாள் தொட்டே நடைபெற்று வருகின்றது. இதற்கு அந்தந்த காலத்தில் கிடைக்கும் அத்தனை ஊடகங்களும் பயன்படுத்தப்பட்டன.

ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக இவை நடைபெறவில்லை. நிரந்தரமான திட்டங்கள், பெரிய அளவில் அந்த நிதி தங்குதடையின்றி கிடைத்திட நிரந்தர ஏற்பாடுகள், அதற்காக 24×7 என உழைத்திட மனித ஆற்றல். அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு-ஓவர் டைம், சம்பளம் முதல் ஓய்வூதியம் வரை நிரந்தர ஏற்பாடு என அத்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன.

வரலாற்றில் இவையெல்லாம் எப்படி நடந்தன என்பதை வைகறை வெளிச்சம் மாத இதழில் தொடராக தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

வெறுமனே இஸ்லாத்தின் எதிரிகள், எப்படி எல்லாம் செயல்படுகின்றார்கள் என்பதை மட்டும் வெளியிடவில்லை அந்த வெறுப்பை, எப்படி முஸ்லிம்கள் வெற்றி கொண்டார்கள்.

எப்படியெல்லாம் முஸ்லிம்கள் இந்த வெறுப்பு பிரச்சாரத்தை தூள் தூளாக்கினார்கள், தவிடு பொடியாக்கினார்கள் என்பதையும் நாம் நிரம்பவே கோடிட்டுக் காட்டி வருகின்றோம்.

அந்தத் தொடரை படித்தால் இஸ்லாத்திற்கு எதிரான சதிகளை அறிந்திடலாம். அவற்றை முறியடிக்க, ஆக்கபூர்வமான செயல் திட்டங்களைத் தீட்டலாம்.

**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

# ஜான் பெப்ஃபர் கூறுகின்றார்.....!

இஸ்லாமோஃபோபியாவை வளர்ப்பவர்களை அதாவது முஸ்லிம்களின் மீதும், இஸ்லாத்தின் மீதும் வெறுப்பை வளர்ப்பவர்களை இப்போது "Warriors of Gods Kingdom" "கடவுளின் சாம்ராஜ்யத்தின் படைவீரர்கள்" என அழைக்கின்றார்கள்.

இஸ்லாமோஃபோபியாவை முன்னே எடுத்துச் செல்பவர்கள், தங்கள் பழைய கொள்கைகளை மீண்டும், தூசு தட்டிக் கையில் எடுத்திருக்கின்றார்கள். அதில் முஸ்லிம்கள் போலியானவர்கள் எனப் பிரச்சாரம் செய்கின்றார்கள். அவர்கள் பல மத நம்பிக்கைகளையும் சார்ந்தவர்களை மதிப்பது போல் நடிப்பார்கள், மத நல்லிணக்கம் பற்றி பேசுவார்கள் ஆனால் உண்மையிலேயே மத நல்லிணக்க முடையவர்களல்ல. (They are Inherently duplicitous) அவர்கள் (முஸ்லிம்கள்) இயல்பாகவே இரட்டை வேடதாரிகள். அவர்கள் ரகசியமாக எல்லா மதங்களையும் ஆட்கொள்ளத் திட்டங்களை வைத்திருப்பார்கள்.



**JOHN FEFFER**

உலகெங்கிலும் இஸ்லாமிசம் பேசுபவர்கள், இன்று அரசியல் கட்சிகளைத் தொடங்கியுள்ளார்கள். இந்த அரசியல் கட்சிகளின் வழி அவர்கள் உலகெங்கும் தேர்தல்களில் போட்டியிடுகின்றார்கள். ஆனால் இஸ்லாமோஃபோபியாவை வளர்ப்பவர்கள், இவர்கள் சிலுவைப் போரின் தன்மைகளைத் தங்கள் அகத்தே ஆழமாகப் பதியப் பெற்றவர்கள், அந்த இஸ்லாமிய அரசியல் கட்சிகளையும், அவர்கள் தேர்தலில் கலந்து கொள்வதையும் அந்த சிலுவைப் போர்கள் வழியாகத்தான் பார்க்கின்றார்கள்.




அப்ஜிரியாவைச் சார்ந்த ஓர் அரசியல்வாதி (said sadi) செய்த் சாதி கூறுகின்றார், (Moderate Islamist) மிதவாத இஸ்லாமியர் என்பவர்கள் வன்முறைகளின் வழி அதிகாரத்தைக் கைப்பற்றிட இயலாதவர்கள். இவர்கள் தங்கள் இயலாமையால் தாங்கள் மிதவாதிகளாக வாழுகின்றார்கள்.

(S75 Quoted by Daniel pipes, Militant Islam Reaches America, page : 46)

இஸ்லாத்திற்காக வாதாடுபவர்களை அவர், "வன்முறை,இரட்டை வேடம்,அதிகார வெறி" என ஒரு 17 சொற்களால் வசை பாடுகின்றார்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை 9/11 என்ற (செப்டம்பர் 11,2001) இரட்டைக் கோபுர தாக்குதலுக்குப் பிறகு, எல்லா முஸ்லிம்களும் குற்றவாளிகள் தாம். அவர்கள் இரட்டை வேடதாரிகள் மட்டுமல்ல துரோகிகளும் கூட! எட்வர்ட் கிளின் (Edward Cline) என்ற புதினங்களைப் படைப்பவர் கூறுகின்றார்,



"அமெரிக்க முஸ்லிம்கள் தாங்கள் குற்றவாளிகள் என்பதை ஒத்துக் கொண்டு,

இஸ்லாத்தைப் புறக்கணித்து விட்டு வாழட்டும், இல்லையேல் அவர்கள் ஆட்காட்டும் துரோகிகளாகவே பார்க்கப்படுவார்கள்".

*(S76 Edward Cline, "The Facts in our Mist" Published by Centre for the Advancement of Capitalism, August 15,2006 - https: //www. capitalism... org. philosophy/commentary/06/08-15...)*

அமெரிக்க முஸ்லிம்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே இருந்தாலும்,ஐயங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. நாடாளுமன்ற உறுப்பினர் கெய்த் எல்லிசன் *(Keidh Ellison)* போன்றவர்களாகவே இருந்தாலும் சரியே! அவரும் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவர் அல்ல.

*2006* அமெரிக்காவில் ஒரு தொலைக்காட்சி பேட்டி, இதில் கலந்து கொண்ட அமெரிக்காவின் மினசோட்ட நாடாளுமன்ற உறுப்பினர் (ஜனநாயகவாதிகள் கட்சி) *Glenn Beck* - கிளின் பெக் என்பவர் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரிடம் இப்படிக் கேட்டார்,



"நான் உங்களிடம், ஒரு விஷயத்தை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் சார்! நீங்கள் எங்கள் எதிரிகளுடன் இல்லை என்பதை முதலில் நிரூபியுங்கள்." *(S77)*

இதன் பொருள், முஸ்லிம்கள் நல்லவர்கள் *(Good Variety)* என்ற பிரிவின் கீழ் தான் இருக்கின்றோம் நாங்கள் கெட்டவர்களுடன் இல்லை *(Bad Variety)* என்பதை அவர்கள் தாமாக முன்வந்து நிரூபிக்க வேண்டும், என்பதே!

முஸ்லிம்கள் நல்லவர்கள் அல்ல என அமெரிக்காவை சார்ந்த பலர் ஏற்கனவே முடிவு செய்து விட்டார்கள். அந்த முடிவில் அவர்கள் நிலையாக இருக்கின்றார்கள்.

*2011* ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கள ஆய்வு ஒன்று இப்படிக் கூறுகின்றது.


"அமெரிக்க முஸ்லிம்கள், அமெரிக்காவுக்கு ஆதரவாக இல்லை. அவர்கள் தங்கள் மத நம்பிக்கையில் மிகவும் தீவிரமானவர்களாக இருக்கின்றார்கள்".

- இன்னும் ஜான் ஃபெப்பர் கூறுவதைக் கேட்போம், இன்ஷா அல்லாஹ்! அடுத்த இதழில்.

**- MGM**

**குறிப்பு :**

அமெரிக்கர்கள், எந்த அளவுக்கு இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்த்து வைத்திருக்கின்றார்கள் என்பதை நாம் மேலே பார்த்தோம். ஆனால் இதன் இடையேயும் அமெரிக்க முஸ்லிம்கள், அமெரிக்க அரசின் தவிர்க்கவியலாத அங்கங்களாக இருக்கின்றார்கள் என்பதை நாம் "வைகறை வெளிச்சம்" வாசகர்களுக்கு நிரம்பவே தந்திருக்கின்றோம். இது நாம் அமெரிக்க முஸ்லிம்களிடமிருந்து பெறவேண்டிய பயனுள்ள பாடம்.


**நூலைப்பெற**

**போன்:**
**7401213394**
**7358278146**
**8148129887**

**விலை**
**ரூ.25/-**

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல – ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

**- நூலிலிருந்து**

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக்–இன் முயற்சி








# முஸ்லிம்களுக்காக ஒரு மருத்துவ கல்லூரி...!

இறைவனின் அருள் மழை பொழிகிறது; சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் வேப்பூர் அருகில் அமைந்துள்ள ஐவதுகுடி திக்குமுக்காடுகிறது!

எங்கு பார்த்தாலும் வாகனங்கள், மக்கள் திரளால் நிரம்பி வழிகிறது அந்த மாபெரும் மைதானம். தமிழகம் முழுவதிலுமிருந்து தன்னெழுச்சியில் திரண்ட கூட்டம் ஆர்வப் பெருக்குடன் அந்தத் திடலை அலங்கரிக்கிறது. ஆம்! அங்கு தான் தமிழக முஸ்லிம்களின் லட்சியக்கனவு நனவாகும் விழா நடைபெறுகிறது. ஸாலிஹீன் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டு மருத்துவக்கல்லூரி கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டப்படுகிறது.

**நவம்பர் 04, 2023 சனிக்கிழமை காலை 11 மணி**

ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளைத் தலைவர், தமிழ்நாடு வக்பு வாரியத்தலைவர் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் முதன்மைத் துணைத்தலைவர், இறை சொத்து காப்பாளர், மனித நேய மாண்பாளர் எம். அப்துல் ரஹ்மான்(Ex.MP) அவர்கள் தலைமையில் விழா தொடங்குகிறது.

அருள்மறை குர்ஆனிலிருந்து 48ஆம் அத்தியாயத்தின் 1&6 வசனங்களை அதன் அறங்காவலர்களில் ஒருவரான டாக்டர் இபுராகிம் ஓதுகிறார்.

“இன்னா ஃபதஹ்னா என்ற அந்த வசனங்களில், “நபியே! நாம் ஒரு தெளிவான வெற்றியாக வெற்றி அளித்துள்ளோம்..... நம்பிக்கை கொண்டோரின் உறுதியை அதிகரிப்பதற்காக அவர்களின் இதயங்களில் அல்லாஹ்தான் அமைதியும் ஆறுதலும்

அளித்துள்ளான். அவர்களை சொர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வான். நயவஞ்சகர்களை அல்லாஹ் வேதனை செய்வான். அவர்கள் மீது அவன் கோபம் கொண்டான். அவர்களை சபித்தும் விட்டான்." என்ற தமிழாக்கத்தையும் தந்தார்.

### வருங்கால தலைமுறைக்கு மிகப்பெரிய அன்பளிப்பு

ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளையின் செயலாளரும் இந்தியன் மெடிக்கல் அசோஸியேஷன் தமிழ்நாடு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் கே.எம். அபுல் ஹஸன் எம்.எஸ்.எம்.சி.எச். வரவேற்புரையாற்றினார்.

"இன்று தமிழக முஸ்லிம்களின் ஒட்டு மொத்த கனவு நனவாகிறது. பல ஆண்டுகளுக்கு முன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்கள் திடீரென என்னை அழைத்தார்கள். நான் ஈரோட்டிலிருந்து சென்னைக்கு விரைந்து வந்தேன். முஸ்லிம்களால் ஒரு மருத்துவ கல்லூரி நடத்துவது சாத்தியமா என இங்கு சிலர் கேட்கின்றனர். அவர்களின் சந்தேகங்களை போக்குங்கள் என்றார்கள்.

அப்போதே நாங்கள் ஒரு உறுதி எடுத்தோம் மருத்துவ கல்லூரி தொடங்கியே தீருவது என்று! அதற்காக தமிழ்நாட்டில் பல இடங்களைப் பார்வையிட்டோம். கடைசியில் இந்த இடத்தை தேர்வு செய்தோம்.

இந்த இடத்தின் அமைவிடம் பூகோள, சமூக ரீதியாக சிறப்பானது. இங்கு 280 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளோம். தேசிய நெடுஞ்சாலையில் தொடங்கி ஒன்றரை கிலோமீட்டர் நீளத்திற்கு இது பரந்து விரிந்துள்ளது. இதில்தான் 100 ஏக்கரில் மருத்துவ கல்லூரி உள்ளிட்ட கல்வி நிலையங்கள் வர உள்ளன. 200 ஏக்கரில் சிறப்பான டவுண் ஷிப் அமைய உள்ளது. காரணம் இந்த பகுதிக்கு இருபுறமும் கோமுகி ஆறு, மணிமுத்தாறு நதிகள் உள்ளன. நிலத்தடி நீர் மிகச்சிறப்பாக உள்ளது.

மருத்துவக்கல்லூரியும் மருத்துவமனையும் இந்த இடத்திற்கு தேவை தானா என அறிவுப்பூர்வமாக அறிய ஃபீல்டு ஸ்டடி செய்ய இன்ஃபனாமிக்ஸ் கம்பெனியிடம் அந்த பொறுப்பை கொடுத்தோம். அவர்களில் 15 பேர் ஒரு மாதம் இங்கு தங்கியிருந்து சுற்றுப்பகுதிகளை ஆய்வு செய்து அறிக்கை தந்தார்கள்.

இந்த பகுதியின் 100 கிலோ மீட்டர் சுற்றளவில் 1000 பேருக்கு 3 மருத்துவ படுக்கைகள் வேண்டும் என்ற விகிதாச்சாரத்தை எட்டுவதற்கு இன்னும் 15000 படுக்கைகள் தேவை என்பதை அறிந்தோம். உயர்சிகிச்சைக்கான மருத்துவ சிறப்பு சிகிட்சை இங்கு இல்லாததால் இருதய, நரம்பியல், சர்க்கரை மற்றும் புற்றுநோய் சிகிச்சைக்கான சிறப்பு மருத்துவ மனையாக இங்கு உருவாக்க வேண்டும் என முடிவு செய்தோம்.

எனவே இங்கு 15 மாடியில் 300 படுக்கைகளுடன் மருத்துவமனை அமையும். தமிழக முஸ்லிம் சமுதாயத்திற்கும், சுற்று வட்டார மக்களுக்கும் இது மூன்று வகையில் பயனளிக்கும்.


ஒன்று சமுதாயத்தில் காணப்படும் எல்லா வகை நோய்களுக்கும் ஒரே இடத்தில் சிகிட்சை அளிக்கும் இடமாக இது அமையும்.

இரண்டாவதாக, இங்கு அமைய உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவ மனைகளில் 2500 பேருக்கு வேலை கிடைக்கும். மூன்றாவது, மருத்துவ கல்லூரி கனவை நம் சமுதாய இளைஞர்களுக்கு நனவாக்கும் வாய்ப்பாக இது அமையும். இந்த உழைப்பு அடுத்த தலைமுறைக்கு தரும் மிகப்பெரிய அன்பளிப்பாகும்."

இப்படி அவர் சொல்லச் சொல்ல இனம்புரியா ஆனந்த உணர்வுடன் உள்ளமெல்லாம் பூரித்தது.

நிகழ்ச்சியின் தொகுப்பாளர் ஸாலீஹீன் கல்வி அறக்கட்டளை நிர்வாகக்குழு உறுப்பினரும், திருமங்கலக்குடி அஸ்ஸலாம் பொறியியல் கல்லூரி தாளாளரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலச் செயலாளருமான ஆடுதுறை ஏ.எம். ஷாஜகான்,







"சமுதாயத்திற்கான பெருந்திட்டம் என இதை சமுதாயத்தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்களிடம் விவரித்த போது, இந்த மாபெரும் திட்டத்தை சமுதாயம் எதிர்பார்க்கின்ற படி செயல்படுத்த வேண்டுமேயானால் ஆளுமைகளின் குழு அமைக்கப்பட வேண்டும்; அதற்கு எம். அப்துல் ரஹ்மான் அவர்கள் தலைமை ஏற்று நடத்தினால்தான் இதை செயல்படுத்த முடியும் எனக்கூறி எம். அப்துல் ரஹ்மான் அவர்களை தலைவராக அறிவித்தார்கள், அந்த தலைவருக்கு நன்றி என கூறி எம். அப்துல் ரஹ்மான் அவர்களை தலைமை உரையாற்ற அழைத்தார்."







**ஸாலிஹீன் பயணத்தில் சமுதாயம் கைகோர்த்து வரவேண்டும்**

ஸாலிஹீன் அறக்கட்டளைத்தலைவர் எம். அப்துல் ரஹ்மான்(Ex.MP) அவர்கள் உணர்ச்சிப் பெருக்கோடு தலைமை உரை நிகழ்த்தினார்.

"நீண்ட நெடுங்காலமாக சமுதாயத்தின் ஒவ்வொருவரும் ஆர்வத்தோடு எதிர்பார்த்த இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த யார் முன்னெடுத்துச் செல்வது என ஏக்கப்பெருமூச்சோடு இருந்த நேரத்தில், ஒத்த கருத்தும் நன்னோக்கு பார்வையும் கொண்ட குழுமம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளை அமைக்கப்பட்டது.

இதன் சார்பில் பன்னோக்கு மருத்துவமனை மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என முடிவு செய்து, அதில் மருத்துவ கல்லூரிக்கு முன்னுரிமை அளித்து அதற்கு முதற் கட்டமாக மருத்துவமனை கட்டி அதன் திறப்பு விழா காணுகின்ற நன்னாள் இது.

இந்த பணிகளை ஆரம்பிப்பதற்கு முன் சமுதாயப்பிரமுகர்களை, பல்வேறு துறைகளின் முக்கிய பிரபலங்களை நான் அணுகி, சமுதாயத்தின் சார்பில் உருவாக்கக்கூடிய இந்த திட்டங்கள் பற்றி ஆலோசித்த போது அத்தனை பேரும் ஒரு முகமாக, ஒரே கோணத்தில் நின்று உற்சாகத்துடன் ஆதரித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

முஸ்லிம் சமுதாயம் மட்டுமின்றி பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் விளிம்பு நிலை மக்கள் எல்லா துறைகளிலும் மேம்பட்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் நாம் முன்னேடுத்துச் செல்லும் இத்திட்டத்தை வெற்றிகரமாக்க அரிய ஆலோசனைகள் வழங்க வேண்டும் என எண்ணி, ஆழ்ந்த அனுபவமும் அறிவு முதிர்ச்சியும் கொண்டிருக்கக்கூடிய மிகப்பெரும் ஆளுமைகளை கண்டறிந்து அவர்களில் எழுவர் அடங்கிய உயர்நிலை ஆலோசனைக்குழு அமைத்தோம்.

அந்த குழுவில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி நீதிஅரசர் இபுராஹிம் கலீபுல்லா, உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் நீதிஅரசர் கே.என்.பாஷா, நீதி அரசர் ஜி.எம். அக்பர் அலி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத்தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் சாதிக், தமிழ்நாடு அரசு முன்னாள் முதன்மை செயலாளர் கே. அலாவுதீன் IAS, ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா முன்னாள் மண்டல இயக்குநர் சதக்கத்துல்லாஹ் ஆகியோர் இடம்பெற்று அரிய ஆலோசனைகள் வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளையின் 100 ஏக்கர் விடுதியுடன் கூடிய உலகத்தரத்திலான பள்ளிக்கூடம், அறிவியல் மற்றும் கலைக்கல்லூரி, பொறியியல் கல்லூரி மருத்துவக்கல்லூரி, சட்டக்கல்லூரி, நர்ஸிங் மற்றும் பார்மஸி கல்லூரி என பல கல்வி நிறுவனங்களை உருவாக்குவது என முடிவெடுத்த போது, அறங்காவலர்கள் குழு பொதுக்குழுவில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அது தான் இதுவரை முஸ்லிம் சமுதாயம் தமிழகத்தில் நடத்தாத மருத்துவக் கல்லூரியை முதலில் உருவாக்க வேண்டும் என்பது.

அதன்படி மருத்துவக்கல்லூரிக்கு முன்னோட்டமாக இந்த நடுத்தர மருத்துவ மனையை கட்டி முடித்து திறந்துவைக்கின்ற இதே நாளில் 300 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு சிறப்பு உயர்சிகிச்சை மருத்துவமனைக்கும் மருத்துவக் கல்லூரி கட்டடங்களுக்கும் அடிக்கல் நாட்டப்படுகிறது. எங்கள் பயணத்தில் சமுதாயம் கை கோர்த்து வரவேண்டும். அனைத்து காரியங் களுக்கும் உங்கள் ஆதரவையும், வல்ல இறைவனின் பெருங்கருணையும் வேண்டுகிறேன்." என குறிப்பிட்டார் திரண்டிருந்த பெருங்கூட்டம் உற்சாக மிகுதியில் ஆர்ப்பரித்தது.



அடுத்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாடு மாநில பொதுச்செயலாளர் கே.ஏ.எம். முகம்மது அபூபக்கர்(Ex.MLA) அவர்கள் உரையாற்றும் போது, "சமுதாய முன்னேற்றம், கல்விக்காக சுதந்திர இந்தியாவில் வழிகாட்டிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் வழி வந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் இந்த பணிகளை முன்னெடுத்திருப்பது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்" என்றார்.

அதற்கடுத்து வாழ்த்துரை வழங்கிய எஸ்டிபிஐ கட்சியின் மாநிலத்தலைவர் நெல்லை முபாரக், "எல்லோரும் கனவு காணலாம்; ஆனால் அந்தக்கனவை நனவாக்க வேண்டும். அதனை ஸாலிஹீன் அறக்கட்டளை சாதித்திருக்கிறது. ஒட்டு மொத்த முஸ்லிம் சமுதாயமும் இப்பணிக்கு பின்னால் நிற்கிறது; நாங்களும் வெறும் பார்வையாளர்காளக அல்லாமல் பங்காளர்களாக இருப்போம் என உறுதி கூறுகிறேன்" என்றார்.

**கல்லால் அடித்தாலும் கனிதரும் மரம் போல் ஆகுங்கள்**

சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் கே.எம். பாஷா வாழ்த்துரை வழங்க அழைக்கப்பட்டார்.

கம்பீர குரலில், "சிறப்பிற்குரிய, மகிழ்ச்சிக்குரிய இப்பொன்னாளில் இந்த சாதனை நிகழ்த்துவதற்கு தலைமை தாங்கிய விழா நாயகர் அப்துல் ரஹ்மான் அவரைப்பார்க்கும் போது பெருமையாக இருக்கிறது. ஏனென்றால் நினைத்ததை முடிக்கக்கூடிய ஆற்றலும் அறிவுமிக்கவர்.

இந்த சாதனை சாதரணமானதல்ல! முஸ்லிம் சமுதாயக் கல்வியில் இது ஒரு மைல்கல். இதன் அறங்காவலர்கள் தொண்டு செய்வது எமது பிறப்புரிமை என சபதமேற்றுள்ளார்கள். ஆற்றல் மிக்க அப்துல் ரஹ்மான் அவர்கள் தலைமையில் மிகத்துணிவுடன், மிகுந்த நம்பிக்கையுடன் இப்பணியை முன்னெடுத்துள்ளனர். அவர்களை பாராட்டி போற்றும் வகையில் அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்புவோம்" என்றார். விண்முட்ட கரவொலி எழுந்தது.

இஸ்லாமிய மார்க்க ரீதியாக முஸ்லிம்களை வழிநடத்தும் அறிஞர் அமைப்பு தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை. சங்கைக்குரிய உலமா பெருமக்கள் பதினைந்தாயிரம் பேர் உள்ளனர். இதன் தலைவர் மௌலவி பி.ஏ.காஜா முயீனுத்தீன் ஃபாஜில் பாகவி:

முகமலர்ச்சியோடு வாழ்த்துரை வழங்கிய ஹள்ரத், "இந்த விழாவிற்கு வந்திருக்கும் ஒவ்வொருவரையும் பார்க்கிறேன். பல்வேறு நலக்காரியங்களை முன்னெடுக்கக் கூடியவர்கள், அறங்காவலர்கள், நன்கொடை வாரி வழங்கக் கூடியவர்கள், பல பொறுப்புக்களில் இருக்கக் கூடியவர்கள் இந்த கிராமத்தை நோக்கி வந்திருக்கிறார்கள் என்றால் எவ்வளவு பெரிய ஆர்வத்தை உள்ளத்தில் அடக்கி வைத்து அதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் இந்தக் காரியத்தை முழுமையாக்கி வெற்றியளிப்பானாக என துஆ செய்வோம்.

எண்ணற்றோர் போற்றும் அதே நேரம் சிலர் தூற்றுகிறார்களே என தனது தலைமை உரையின் கடைசியில் அப்துல் ரஹ்மான் அவர்கள் குறிப்பிட்டார். அவர் உள்ளத்து வேதனையின் வெளிப்பாடு அது என நான் உணர்தேன்.

பேரறிஞர் ஷிப்லி நுஃமானி அவர்கள் நடந்து செல்லும் போது பலபேர் அவர்களுக்கு கொடுக்கும் தொந்தரவைப் பார்த்து அவர் களிடத்தில் ஒரு மரம் பேசியது, ஷிப்லி



அவர்களே! நீங்கள் என்னைப்போல் ஆக வேண்டும். பலர் என்னை கல்லைக் கொண்டு எறிகிறார்கள்; நான் அவர்களுக்கு பழங்களை கொடுக்கிறேன்.

அப்துல் ரஹ்மான் அவர்களே! நீங்களும் அது போல் ஆக வேண்டும். அவர்களுடைய மனவருத்தத்திற்கு மருந்தாக இது அமையும். எல்லோரும் அவர்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும்; அவர்களுக்காக துஆ செய்கிறேன்.

நபிகளாரை திட்டினார்கள். அந்த திட்டு எனக்கல்ல என நபிகளார் திருப்பிவிட்டார்கள். அந்த அணுகுமுறையை நாம் பின்பற்ற வேண்டும். குறை சொல்பவர்கள் குறை உள்ளவர்கள் சொல்கிறார்கள். நாம் அதைச் சார்ந்தவர்கள் அல்லர் என்ற எண்ணம் வரவேண்டும்" எனக் குறிப்பிட்ட போது பலரது கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது.

**பின் தங்கிய பகுதியின் 100 கிராமமக்களுக்கு பயன்தரும்**

அதனைத்தொடர்ந்து தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஆர். ராதா கிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கிய போது, "ஒரு மாபெரும் கல்விக் குழுமத்தை கடலூர் மாவட்டத்தில் அதுவும் நமது தொகுதியில் அதுவும் மிகவும் பின் தங்கிய விளிம்பு நிலைமக்கள் அதிகம் வாழும் வேப்பூர் பகுதியில் தொடங்கியிருப்பது பெரும் வளர்ச்சிக்கு முன்னேற்பாடாக அமையும். அதற்காக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

தொடர்ந்து தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு சி.வெ.கணேசன் வாழ்த்துரை வழங்கினார்.

அப்போது அவர், "நல்லோர்கள் இணைந்து உருவாக்கியுள்ள இந்த ஸாலிஹீன் மருத்துவமனை 100 கி.மீட்டர் சுற்றளவில் 100 கிராம மக்கள் பயனடையும் வகையில் அமையும். இதன் திறப்பு விழாவிற்காக தமிழகம் முழுவதிலுமிருந்து வந்துள்ள நல்ல மனம் படைத்த முஸ்லிம் பெரு மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முதல் அமைச்சர் மாண்புமிகு தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'இந்த மருத்துவமனை மூலம் எளிய மக்கள் பெருமளவு பயனடைவார்கள், அந்த வகையில் ஸாலிஹீன் அறக்கட்டளை மேலும் பல சேவைகளைப்புரிந்து தமது பயணத்தில் பீடுநடை போட வேண்டும்' என வாழ்த்தியுள்ளார்கள். அந்த வாழ்த்துக்களோடு எனது வாழ்த்துக்களையும் இணைத்துக் கொள்கிறேன்" என்றார்.

வாழ்த்துரையின் நிறைவாக சமுதாயத்தலைவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்கள் உரையாற்றினார்.

ஐவதுகுடி என்ற இந்த சிற்றூரில் 300 ஏக்கர் பரப்பில் அதில் 100 ஏக்கரை தனிமைப்படுத்தி அதில் மருத்துவமனையும், மருத்துவகல்லூரியும் அதனோடு இணைந்த நிறுவனங்களையும் துவக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளை உருவாக்கி அதன் சார்பில் இந்த சிறப்பான விழா நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கக்கூடிய ஒவ்வொருவரும் சமுதாயத்திற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய பெருமக்களாவார்கள். அவர்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் பெயர் குறிப்பிட்டு அவர்கள் சாதனைகளை பட்டியலிட்டால் அதுவே விழாவின் பெரும் பகுதியாக அமைந்துவிடும்.

தமிழ்நாடு முஸ்லிம் சமுதாயத்தில் நீண்ட காலமாக மருத்துவக்கல்லூரி துவக்கப்பட வேண்டும் என்ற ஆசை ஒரு கனவு போல் இருந்தது. கேரளாவில் 7 மருத்துவக்கல்லூரிகளை முஸ்லிம்கள் நடத்துகிறார்கள். அதன் திறப்பு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எமக்கு ஏற்படும் போது இப்படி ஒரு வாய்ப்பு தமிழ் நாட்டில் அமையவில்லையே என சிந்தித்தது உண்டு. சில சமயம் வேதனைப்பட்டதுண்டு. அந்த சிந்தனைக்கும் வேதனைக்கும் முடிவு கட்டுவது போல் இந்த விழா நடைபெறுகிறது.

சமுதாயத்தின் பேராதரவோடு ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளை மருத்துவ கல்லூரி மற்றும்





மருத்துவமனை மட்டுமின்றி என்னென்ன பணிகளுக்கு திட்டமிடுகிறார்களோ அவை அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேற வல்ல இறைவனிடம் பிரார்த்திப்போம்.

ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளை வரலாறு பற்றி இங்கு வெளியிடப்பட்ட மணிச்சுடர் நாளேட்டின் சிறப்புமலரில் தம்பி காயல் மகபூப் எழுதியுள்ளார். இதன் அறங்காவலர்கள் 111 பேர் இணைந்து இதனை உருவாக்கியுள்ளார்கள்.

தமிழ்நாடு மாண்புமிகு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நல்லுள்ளம் கொண்ட 111 பேர் சேர்ந்து உருவாக்கியுள்ள நல்லோர் என பொருள்படும் ஸாலிஹீன் அறக்கட்டளை சேவை பல புரியும் என வாழ்த்தியுள்ளதைப்போல் ஸாலிஹீன் என்ற சொல் அடைந்துள்ளது.

ஸாலிஹீன் என்ற வார்த்தை திருக்குர்ஆனில் 24 இடங்களிலும் அது தொடர்பான வார்த்தை மேலும் 4 இடங்களிலும் வருகிறது. தினமும் நாம் ஐவேளை தொழுகிறோம். அத்தஹிய்யாத்தில் ஸாலிஹீன் என்ற வார்த்தையை பயன்படுத்தி வருகிறோம்.

ஆக ஸாலிஹீன்கள் வாழுகிற காலமெல்லாம் தாங்கள் மட்டுமல்ல தாங்கள் சார்ந்துள்ள சமுதாயத்தை, வாழும் நாட்டை நாட்டு மக்களை நல்லவர்களாக்க வேண்டும் என்ற உணர்வோடு செயல்படவேண்டும் என உணர்த்தியே இந்த வார்த்தையை எல்லாம் வல்ல இறைவன் நமக்கு கற்றுத்தந்துள்ளான்" என குறிப்பிட்டார்கள்.


இந்த வளாகத்தில் எழிலார்ந்த மஸ்ஜித் உருவாக்கப்படவேண்டும் என்ற தலைவர் பேராசிரியர் கோரிக்கையை மேடையிலேயே ஏற்றார், ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளை நிர்வாகக்குழு உறுப்பினர் ஆடிட்டர் ரஸாக்!

**தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து**

தமிழ்நாடு முதல் அமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியை ஸாலிஹீன் கல்வி அறக் கட்டளை திட்ட மேலாளரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் மாநில பேச்சாளருமான புளியங் குடி முகம்மது அல்அமீன் கம்பீரமாக வாசித்து அவருக்கு நன்றி கூறினார்.

இந்த மாபெரும் பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளைச் செயலாளரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலச் செயலாளருமான மில்லத் எஸ்.பி. முஹம்மது இஸ்மாயில் நன்றி கூறினார்.

நான் ஒருவருக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளேன். அவர் புளியங்குடி முகம்மது அல்அமீன். ஏழாண்டு காலம் இந்த பணிகளுக்கு



மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

27.10.2023

வாழ்த்துச் செய்தி

சிறுபான்மையினத்தைச் சேர்ந்த 111 பேர் சேர்ந்து உருவாக்கியுள்ள "ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளை" அடித்தட்டு மக்களின் மேம்பாட்டுக்காகப் பல்வேறு சேவைகளைப் புரிந்து வருவதை அறிந்து பெருமிதமும், பேருவகையும் அடைகிறேன்.

நல்லுள்ளம் கொண்டாரால் உருவாக்கப்பட்டுள்ளதன் அடையாளமாக, "நல்லோர்" எனப் பொருள்படும் "ஸாலிஹீன்" என்ற பெயரால் அறக்கட்டளை அமைந்திருப்பது மேலும் பொருத்தமாகும்.

இந்த அறக்கட்டளையால், வேப்பூரில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை 04.11.2023 அன்று திறந்து வைக்கப்படுவதை அறிந்து பெரும் மகிழ்வுற்றேன். இந்த மருத்துவமனை மூலம் எளிய மக்கள் பெருமளவு பயனடைவார்கள் என்று நம்புகிறேன். நலவாழ்வில் நிறைவடைந்த சமூகமே, வலுவான செயலூக்கம் மிக்க சமூகமாகவும் திகழும். அத்தகைய நலவாழ்வை நமது சமூகம் பெறுவதற்கு இத்தகைய சேவை அமைப்புகள் தங்களது பங்களிப்பை வழங்க முன்வருவது பெரிதும் வரவேற்கத் தக்கது.

"ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளை" மேலும் பல சேவைகளைப் புரிந்து, தமது தொண்டறப் பயணத்தில் தொடர்ந்து பீடுநடை போட உளமாரப் பாராட்டி, வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

(மு.க.ஸ்டாலின்)




என்னோடு இணைந்து பாடுபட்டார். இன்னொரு வருக்கு நன்றி கூற ஆசைப்படுகிறேன், அவர் பெரம்பலூர் எஸ்.சுல்தான் இபுராஹிம். இந்த அறக்கட்டளையில் அவர் கடைசியாக சேர்ந்தாலும் இந்த விழா ஏற்பாடு முழுவதும் எந்த எதிர்பார்ப்புமின்றி பணி செய்தார். J.M.H. இம்ரான் ஹாரூன், பாம்புக்கோவில் செய்யது பட்டாணி உள்ளிட்டோருக்கும் நன்றி. கட்டிடப் பணிகளை உருவாக்கிய ராஜேஸ்வரி அஸோஸியேட் லோகநாதன் மற்றும் அவர் துணைவியாருக்கும் நன்றி என்ற அவர், எங்கள் மீது முழு நம்பிக்கை வைத்து ஏழாண்டு காலம் எதிர் பார்ப்பின்றி சமுதாய நன்மையை மட்டுமே கருதி முதலீடு செய்த 111 மாணிக்கங்களுக்கும் நன்றி என சொல்ல தவறவில்லை.

இந்த விழாவில் பலருக்கும் பொன்னாடை களும் நினைவுப்பரிசுகளும் அளித்து கௌரவிக்கப் பட்ட போது, இந்த இடத்தை கண்டறிந்து ஸாலிஹீன் அறக்கட்டளை அதனை பெறுவதற்கு காரணமாக இருந்த மயிலாடுதுறை மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் ஆயப்பாடி அமீர் என்.ஏ.எம். நூருல்லாஹ், முஸ்லிம் யூத் லீக் மாநில அமைப்புக்குழு உறுப்பினர் அபூபாரிஸ் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

நிறைவாக ஸாலிஹீன் அறக்கட்டளைத் தலைவர் எம்.அப்துல் ரஹ்மான் அவர்கள், இந்த திறப்புவிழாவுக்கு முந்தைய நாளில் மஃரிப் தொழுகையுடன் திருக்குர்ஆன் முழுவதையும் 30 பேருடன் ஓதி அற்புதமாக பிரார்த்தனை செய்த அதாயி கல்வி குழுமத்தின் விக்ரவாண்டி கிளை பொறுப்பாளர்கள் மௌலவி சீ.அப்துல் பாஸி ஃபாஸில் பிலாலி, மௌலவி பைஸூல் பாரி ஆலிம் பிலாலி ஆகியோர் தலைமையிலான அந்த அரபிக்கல்லூரியின் மாணவர்களே இன்று தமிழ்த்தாய் வாழ்த்து பாடினர். அவர்களே தேசிய கீதமும் பாட உள்ளனர் அவர்களுக்கு நன்றி என கூறிவிட்டு முத்தாய்ப்பாக, இந்த மருத்துவக்கல்லூரி பன்னோக்கு உயர்சிகிச்சை மருத்துவமனை 300 படுக்கை வசதிகளோடு கட்டப்படுகிறது. இது சம்பந்தப்பட்ட எல்லா விதமான நிர்வாகப் பொறுப்புக்களையும் சமுதாயத்தில் எல்லோரும் கலந்து கொள்ளக்கூடிய வகையில் ஷேர் ஹோல்டர்ஸ் என்ற அந்த ஸ்கீமை அடிப்படையாக வைத்து பங்குதாரர்களாக எல்லோரும் சேர்ந்து எல்லோருமாக இணைந்து செய்யலாம் என முடிவு செய்துள்ளோம். அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நாளை தேர்வு செய்து கூட்டங்களை நடத்த உள்ளோம். அதில் பங்கேற்க விருப்பமுடையவர்கள் அதற்கான படிவத்தை பூர்த்தி செய்து அளிக்கலாம் என வெள்ளை மனதோடு வெளிப்படைத் தன்மையாக அறிவித்தார்.

ஆக ஒரு பெருங்கனவு நனவாகும் மகிழ்ச்சியில் தமிழக முஸ்லிம் சமுதாயம் வாழ்த்தி பிரார்த்திக்கிறது.

ஒட்டு மொத்த சமூகத்தின் இந்த பிரார்த்தனையில் செல்லாக்காசுகளான சருகு களின் அவதூறு பரப்புரை அழிந்து போய்விடும்!

அருட்கொடையாளனின் அடிமை என்ற ஆளுமை எம்.அப்துல் ரஹ்மான் எக்ஸ் எம்பி அவர்களே! உங்களுக்கு தமிழக முஸ்லிம் சமுதாயத்தின் "ராயல் சல்யூட்"

**- காயல் மகபூப்**

தகவல்: IUML மில்லத் இஸ்மாயில்



ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அடுத்தக்கட்ட போருக்கு தயாராகும் இஸ்ரேல்

October 25, 2023, 3:43 pm



இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் ராக்கெட் தாக்குதல் கேரள பெண் நர்ஸ் பரிதாப பலி: கணவருடன் வீடியோ காலில் பேசிக் கொண்டிருந்தபோது சோகம்

May 13, 2021, 12:14 am



ஐ.எஸ். தீவிரவாதிகளை விட மோசமான எதிரி ஹமாஸ்..போரை தீவிரப்படுத்த அவசர கால அமைச்சரவையை உருவாக்கிய இஸ்ரேல் பிரதமர்!!

October 12, 2023, 12:00 pm

# தினகரன்

# நாளிதழுக்கு ஒரு கடிதம்...!

பெறுதல் : ஆசிரியர்,

தினகரன் நாளிதழ்,

திருச்சி

620009

அன்புள்ள ஆசிரியருக்கு,

வந்தனம். நான் தினகரனின் தொடர் வாசகர்.2018 இல் இருந்து ஏஜென்ட் மூலமாக நாள் விடாமல் வாசித்து வருகிறேன்.

இஸ்ரேல்- ஹமாஸ் சண்டையைப் பற்றிய செய்திகளில், தாய் மண்ணை மீட்க போராடும் பாலஸ்தீன் போராளிகளை "ஹமாஸ் தீவிரவாதிகள் அல்லது பயங்கரவாதிகள் என்று வர்ணிப்பதை முஸ்லிம் சமுதாயமும், நடுநிலைவாதிகளும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். 1948இல் இருந்து இஸ்ரேல் உருவாகிய வரலாற்றை கவனித்து வருபவர்களுக்கு ஹமாஸ் தீவிரவாத இயக்கமல்ல என்பதை உணர்வார்கள்.

1948 ல் வெளியான வரைபடத்தின் படி பாலஸ்தீனுக்கு சொந்தமாக்கப்பட்ட பகுதிகள் எவ்விதம் இஸ்ரேலால் கொஞ்சம் கொஞ்சமாக கபலிகரம் செய்யப்பட்டது என்பதை அறிவீர்கள். ஞாயிறன்று வெளியாகும் HOT TOPIC கட்டுரை ஒன்றில் தினகரன் தெளிவாக ஆரம்ப நிலையில் இருந்து இன்றைய பரிதாப நிலை வரை வரிசையாக வரைபடங்கள் பதிந்திருந்ததை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

யூதர்கள் அனைவருமே இஸ்ரேல் தரப்பை ஆதரிக்கவில்லை. அமெரிக்கா உட்பட பல நாடுகளிலும் யூதர்கள் முஸ்லிம்களுக்கு ஆதரவாக போராடி வருகின்றார்கள். மற்றொரு பிரிவினர் சியோனிச யூதர்கள். சியோனிசம் என்பது தியோடர் கெசில் என்பவரது தலைமையில்

உருவாக்கப்பட்ட ஒரு இயக்கம். ஹிட்லரின் நாசிசம் மற்றும் இத்தாலி முசோலினியின் பாசிசம் போன்றது தான் சியோனிசம். நாடோடிகளாகத் திரிந்த யூதர்களில் பெரும்பாலானோர் பிரிட்டிஷாரிடம் கேட்ட தனிநாடு கோரிக்கைக்கு எகிப்து, மத்திய ஆசியா, உகாண்டாவில் குடியேற்றம் கேட்டனர். ஆனால் சியோனிச யூதர்கள் மட்டுமே அரபு மண்ணான பாலஸ்தீனில் தான் இடம் வேண்டுமென்று அடம் பிடித்தனர்.

இரண்டாம் உலகப் போர் நடந்து முடிந்ததும் பிரிட்டிஷார் பாலஸ்தீனத்தை கைப்பற்றி உங்களிடம் கொடுத்து விடுகின்றேன் என்று அரபிகள், யூதர்கள் ஆகிய இருவரிடமே கூறினார்கள். இந்த நிலையில் இப்பிரச்சனை ஐநா மன்றத்துக்கு சென்றது. ஐநா வில் 15.05.1948 இல் இரண்டு சமூக மக்களுக்குமே தனி நாடு வழங்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருவருக்குமான பகுதிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் சியோனிஸ்டுகள் அதை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல, தமக்கு வழங்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் பாலஸ்தீனர்களின் சொந்தமான பகுதிகளில் தமது நாட்டை விரிவு படுத்திக் கொண்டே சென்றனர்.

அரபு இஸ்ரேல் பிரச்சனையில் மகாத்மா காந்திஜி கூட ஆங்கிலேயர்களுக்கு எப்படி இங்கிலாந்து சொந்தமோ, பிரெஞ்சுக்காரர்களுக்கு எப்படி பிரான்ஸ் சொந்தமோ அதேபோலவே பாலஸ்தீனம் அரபுகளுக்கு சொந்தமானது என்றும், அங்கு யூதர்களை குடியேற்றுவது மனிதாபிமானமற்ற செயல் என்று தனது ஹரிஜன் பத்திரிக்கையில் எழுதியுள்ளார்.

1967-ல் நடந்த ஆறு நாள் போரில் அனைத்து அரபி நாடுகளையும் அமெரிக்க உதவியுடன் தோற்கடித்து இஸ்ரேல் தங்களது எல்லைகளை பெருக்கிக் கொண்டது. ஜோர்டானில் மேற்கு கரை(West Bank),எகிப்தின் சில பகுதிகள், கிழக்கு ஜெருசலம், சிரியாவின் கோலன் குன்றுகள் உள்ளிட்ட பல பகுதிகளை கையகப்படுத்தியது. அந்த விரிவுபடுத்துதலை தடை செய்து ஐநா மன்றம் தீர்மானம் 242 இன் மூலம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தின்படி இஸ்ரேல் தொடக்கத்தில் ஒதுக்கப்பட்ட தனது எல்லைக்குட்பட்ட பகுதிக்கு சென்று விட வேண்டுமென சொல்லிவிட்டது. இஸ்ரேல் தீர்மானத்துக்கு அடிபணியவில்லை.

1973 இல் நடந்த போரில் (யோம் கிப்பூர் யுத்தம்) யூதர்களின் புனித நாளன்று பாலஸ்தீனம் எகிப்துடன் இணைந்து இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்தன. அப்போரில் தொடக்கத்தில் இஸ்ரேல் தோற்கடிக்கப்பட்டு பின் அமெரிக்காவின் உதவியால் வெற்றி பெற்றது. அவ்வமயம் ஐநா மன்றம் தீர்மானம் 338ஐ நிறைவேற்றியது. இதில் ஏற்கனவே 242ஆம் தீர்மானத்தில் சொல்லப்பட்டதையே மீண்டும் வலியுறுத்தியது.

இஸ்ரேல் உருவான நாள் முதலே பாலஸ்தீனர்களிடமிருந்து பறிக்கப்பட்டு வந்த நில உரிமைகளுடன் தற்போது அவர்களின் கல்வி உரிமை, வெளிநாடுகளில் சென்று படிப்பதற்கான உரிமை. ஜீவதாரி உரிமைகள் போன்றவற்றை கொஞ்சம் கொஞ்சமாக பறிக்க ஆரம்பித்தது. பிறகு ஜோர்டான் நதியையே இஸ்ரேல் பக்கம் திருப்பி விட்டார்கள். இவ்வாறு பாலஸ்தீனம் என்ற நாடே அழிக்கப்பட்டு முழுமையாக இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. அங்கு இஸ்ரேலின் அனுமதியின்றி ஒரு சிறிய துரும்பும் அசைய முடியாது. இவ்வாறு மிகப்பெரும் கொடுமைகளுக்கும் துன்பங்களுக்கும் பாலஸ்தீனர்கள் ஆளானார்கள்.

1987ல் "இன்திஃபாதா என்னும் பெயரில் ஒரு பேரெழுச்சி" ஏற்பட்டது. அப்போதுதான் ஹமாஸ் என்கிற அமைப்பு உருவானது.1993 இல் நார்வேயில் ஓஸ்லோ ஒப்பந்தம் எனும் சமாதான ஒப்பந்தம் போடப்பட்டது. இஸ்ரேலியர்கள் தங்களது பழைய பகுதிக்கு சென்று விட வேண்டும் என்று ஒப்பந்தம் கூறியது. அந்த கையெழுத்திட்ட காரணத்திற்காகவே அன்றைய இஸ்ரேலிய பிரதமர் இட்சாக் ஈரபின் இஸ்ரேலிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். இதிலிருந்து சியோனிசவாதிகளுக்கு ஆக்கிரமிப்பு பகுதியை காலி செய்து திரும்பச் செல்ல மனதே இல்லை என்பது வெட்ட வெளிச்சமாகியது. "இஸ்ரேல் எங்கள் நாடு, முஸ்லிம்கள் அங்கு வந்து குடியிருந்து கொள்ளட்டும்" என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது. அப்போது அவர்கள் ஆக்கிரமித்த பகுதியில் வாழ்ந்து வந்த ஏழு லட்சம் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டனர். இப்படிப்பட்ட கொடுமைகளைச் சகிக்க முடியுமா?

1987ல் ஹமாஸ் என்னும் அமைப்பு ஓர் அரசியல் இயக்கமாக மாறியது. பாலஸ்தீன மக்களுக்கு

எந்தவித சலுகையும் வழங்காதது, அவர்கள் மீது இஸ்ரவேல் அளவு கடந்த தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டது ஆகிய காரணங்களால் ஹமாஸ் அமைப்பு ராணுவ குழுவாக மாறியது.

இஸ்ரேலின் அநீதி ஆக்கிரமிப்பு போக்குகளே, தாங்க முடியாத கொடூரங்களே ஹமாசை ஆயுதம் ஏந்த வைத்து விட்டது.

இன்று ஹமாஸ் நடத்தும் இத்தகைய போராட்டத்தின் விளைவாக தான் பாலஸ்தீன் என்று ஒரு நாடு இருக்கிறது. அங்குள்ள மக்கள் தங்கள், வாழ்ந்த பூமியை இழந்து தவிக்கிறார்கள் என்பன போன்ற செய்திகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இன்னும் சொல்லப்போனால் ஹமாஸ் என்னும் போராளிகள் குழு உருவாகாமல் இருந்திருந்தால் தற்போது பாலஸ்தீன் எனும் ஒரு நாடு இருந்ததற்கான அடையாளமே இருந்திருக்காது என்பது திண்ணம்.

தற்போது நடக்கும் போரில் கூட போர் அறநெறிகளை எல்லாம் மீறி, ஹமாஸ் தாக்கியதை விட பல மடங்கு பாலஸ்தீன் பொதுமக்களை, வெளிநாட்டினர் உட்பட கொன்றிருக்கிறார்கள். அங்குள்ள மருத்துவமனைகள், கல்விக்கூடங்கள் அகதிகள் முகாம்கள் உட்பட பல முக்கியமான விதிவிலக்கான இடங்கள் உட்பட தகர்த்துள்ளனர். பாலஸ்தீனத்தில் பெரிய மசூதியான, யாஸீன் மசூதியை தரைமட்டமாக்கியுள்ளனர். காசாவின் அல் அஹ்லி கிறிஸ்தவர்களால் நடத்தப்படும் மருத்துவமனை மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதலில் பெண்ணும் குழந்தைகளுமான ஐந்து பேர் மாண்டு போயினர். இவ்வளவு பெரிய அநியாயமும் கொடூரமும் வேறு எந்த நாட்டிலும் வேறு எந்த போரிலும் நடந்திருக்காது என்பதை கவனத்தில் வைக்க வேண்டும்.

2008க்கு பின்னர் மட்டும் நாள் ஒரு பொழுதாக இஸ்ரேல் நடத்திய அராஜகத் தாக்குதல்களால், ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதில் 33,000 குழந்தைகளின் பலியும் அடங்கும்.இது குறித்து சர்வதேச ஊடகங்களோ இன்று பரபரப்பாக இஸ்ரேலுக்கு ஆதரவாக அறிக்கை விடும் மேல் நாடுகளின் தலைவர்களோ ஏதாவது பேசியிருக்கிறார்களா?

ஹமாஸ் போராளிகளை, பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என இந்திய ஊடகங்கள் (ஒரு சிலவற்றைத் தவிர) பேசுகின்றன. தினகரன் பத்திரிகையும் அவ்வாறு கூறுவது வருந்தத்தக்க விஷயமாகும். பாலஸ்தீன மக்கள் ஆக்கிரமிப்பாளர்கள் அல்ல. தங்களது பிறந்த மண்ணை மீட்கின்ற பெரும் போராட்டத்தில் அவர்கள் 80 ஆண்டுகளுக்கும் மேலாக ஈடுபட்டுள்ளனர்.

ஹமாஸ் தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல. காசா பகுதியில் ஆட்சியில் தேர்தலில் ஜெயித்து ஹமாஸ் அமர்ந்துள்ளது. அந்த இயக்கத்தை பல நாடுகள் அங்கீகரித்துள்ளன. இந்தியாவிலும் ஹமாஸ் தடை செய்யப்படவில்லை. தாயகத்தை மீட்கும் உரிமைப் போரில் ஈடுபட்டுள்ள ஹமாசை, பயங்கரவாதிகள் தீவிரவாதிகள் என வர்ணிப்பது எந்த வகையில் நியாயமாகும்?

இலங்கையில் தனி ஈழம் கேட்டு போராடிய போராளிகள் விடுதலைப் புலிகள் என்று எழுதிய தமிழக ஊடகங்கள், ஹமாஸ் போராளிகளை அந்த அமைப்பினரை மட்டும் பயங்கரவாதிகள் என்று எழுதுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? ஆகவே ஹமாஸ் வீரர்களை ஹமாஸ் போராளிகள் அல்லது ஹமாஸ் அமைப்பினர் என்று குறிப்பிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆசிரியர் மற்றும் தினகரன் எழுத்தாளர்கள் இக்கடிதக் கட்டுரையை வாசித்த பிறகு மீண்டும் அவ்விதம் எழுதுவீர்கள் ஆனால் முஸ்லிம் துவேஷம் கொண்ட வலதுசாரி சிந்தனையுள்ள, பத்திரிகை என்று தான் தமிழ் முஸ்லிம் சமுதாயம் தினகரனை கணிக்க வேண்டி வரும் என்பதை வலியுறுத்துகிறேன்.

**ஆசிரியர்**

**வைகறை வெளிச்சம் மாத இதழ்**

**மண்ணடி, சென்னை.**


**ப.சையத் அஹமது**

**எண் 11, பரக்கத் தெரு, துளசேந்திரபுரம்**

**கொள்ளிடம், சீர்காழி வட்டம், அஞ்சல் - 609102**

# கர்கரேயை கொலை செய்தது யார்?

விரிவாக்கப்பட்ட 5ஆம் பதிப்பு




- அரசின் தீவிரவாதம் - இந்தியாவின் வரலாறு என்றாகிவிட்டது. இந்தியாவில் முஸ்லிம்களை எதிரிகளாகக்காட்டி தீவிரவாதத்தைச் செய்தவர்கள் எல்லா அதிகாரத்தையும் அபகரித்து விட்டார்கள். அவர்கள் குண்டுகளை வைத்து மனிதர்களை பிணங்களாக குவித்துவிட்டு, அப்பாவி முஸ்லிம்கள் மீது பழியைப் போடும்போதெல்லாம் அவற்றை பரபரப்புகளாக ஆக்கி, பட்டித் தொட்டிகளெல்லாம் பரவிடச் செய்தது, நம்மை அப்பிப் பிடித்திருக்கும் பொது ஊடகங்கள்,

- நாட்டின் உண்மையான தீவரவாதிகள் முஸ்லிம்களல்ல, இந்துத்துவ பரிவாரங்கள்தாம் என்பதை முதன்முதலில் அதிகாரப்பூர்வமாக கண்டுபிடித்து நிரூபித்தவர் ஹேமந்த் கர்கரே! இவர் மராட்டிய மாநிலத்தின், தீவரவாதத் தடுப்புப் படையின் தலைவர் முழு உண்மையையும் கண்டுபிடித்ததால் அவரை அதே காவிகளின் பரிவாரம் கொலை செய்தது. அதையே 26/11 என அடையாளப்படுத்துகின்றார்கள்.

- அவரது கொலைக்கு நீதிதேடி புறப்பட்டார் எஸ்.எம்.முஷ்ரிஃப். இவர் முன்னாள் மராட்டிய மாநிலத்தின் காவல்துறை அதிகாரி, இன்ஸ்பெக்டர் ஜெனரல். அதன் சுருக்கமே இந்த நூல். இந்தப் பதிப்பில் இன்னும் பல அரிய, அதிர்ச்சியான உண்மைகளைக் கண்டெடுத்துத் தந்திருக்கின்றார். அதனால் இது விரிவாக்கப்பட்ட பதிப்பு.


- தமிழில் மு. குலாம் முஹம்மத், M.A., in JMC. ஆசிரியர் - வைகறை வெளிச்சம்

வேர்கள் வெளியீட்டகம்

விலை – ரூ.450/- போன் : 7401213394 / 7358278146 / 8148129887

# 26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்?

விலை 220/-




- நாட்டில் கொந்தளிப்பு! மக்ளின் மனங்களில் குமுறல்! நமது மத்திய உளவுத்துறையின் வட்டாரங்களில் வாட்டம்! வலதுசாரி கும்பல்களின் கூடாரங்களில் குமுறல்! காரணம் 26/11 (எ) மும்பைத் தாக்குதல் குறித்து இவர்கள் விட்ட பொய்களையும் புனைந்துரைகளையும், மராட்டிய காவல்துறை அதிகாரி ஐஜி. அவர்களின் நூல் தவிடுபொடியாக்கி விட்டது அந்த நூல்: "கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம்"

- இந்த நூலில் அவர், மத்திய உளவுத்துறையின், மராட்டியக் காவல்துறையின். கதையை உடைத்ததுடன் உண்மையையும் கண்டெடுத்துப் பிரகடனப்படுத்தினார். உங்கள் கைகளிலிருக்கும் இந்த நூலில், மத்திய உளவுத்துறைத் தங்கள் பொய்யை உண்மையென நிலைநாட்டிட, வழக்கின் போக்கு, விசாரணை இவற்றை திரித்தது – என்பதையும் நீதியின் ஓட்டத்தையும், தேட்டத்தையும் ஒவ்வொரு கட்டத்திலும் வழிமறித்து, பொய்யைத் திணித்தது என்பதையும் விளக்கியுள்ளார். இதில் எப்படி சில பல ஊடகங்கள் பயன்படுத்தப் பட்டன என்பதையும் தெளிவுப்படுத்துகின்றார்.

- அரசியல் நிர்ணயச்சட்டத்தால் ஆக்கப்படாத உளவுத்துறை எந்த சட்டத்தின் அங்கீகாரமில்லாத மத்திய உளவுத்துறை நாட்டில் அனைத்தையும், அனைத்து நிர்வாக அமைப்புகளையும், கட்டுக்குள் வைத்து ஆட்டிப்படைக்கின்றது. நூலாசிரியர் இந்த நிலை மாற்றப்பட நீதி நிலைக்க வேண்டும் என்கின்றார். இதற்கு நீதித்துறையே நம்புகின்றார். நாடுகின்றார்.

**எஸ்.எம்.முஷ்ரிஃப்**

மஹாராஸ்டிராவின் முன்னாள் ஐ.ஜி.

வேர்கள் இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887



# UAPA வழக்கை எதிர்த்து போராடும் ஷாஹினா "குளோபல் பிரஸ் விருதை" வென்றார்

2008 பெங்களூ குண்டுவெடிப்பு குறித்து செய்தி வெளியிட்டதற்காக பத்திரிகையாளர் ஷாஹினா கே.கேவை கர்நாடக காவல்துறை, இந்தியாவின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமான UAPA-கீழ் கைது செய்திருந்தது. அன்றிலிருந்து சரியாக 13 ஆண்டுகள் கழித்து அவர் "சர்வதேச பத்திரிகை சுதந்திர விருதைப்" பெற்றுள்ளார். அமெரிக்காவில் உள்ள Committee to Protect Journalists - பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழுவிலிருந்து இது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் மீதான UAPA வழக்கு இன்னும் தொடர்கிறது.

அவரது சக பத்திரிகையாளர் தோழியான சோஹினி அவர்கள், ஷாஹினாவிடம் ஒரு பேட்டி எடுத்திருந்தார்கள். அந்த பேட்டி.....

2011ஆம் ஆண்டு, நாங்கள் OPEN பத்திரிக்கையில் சக ஊழியர்களாக இருந்தபோது, "ஜாமீனில் வெளிவர முடியாத குற்றச்சாட்டின் பேரில் எந்த நேரத்திலும் கைது செய்யப்படுவாள்" என்ற நிழலில் ஒரு வருடத்தை கழித்த ஷாஹினா இந்தக் கதையை என்னிடம் கூறினார்.

ஷாஹினா, தெஹல்கா இதழில், அரசு தரப்பு சாட்சிகளின் நேர்காணல்களின் அடிப்படையில், மதானியின் கைது குறித்து கேள்வி எழுப்பி ஒரு கட்டுரை எழுதினார். இதன் விளைவாக, பயங்கரவாதத்தை முதன்மையாகக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் (UAPA) சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட இந்தியாவின் முதல் பத்திரிகையாளராக ஷாஹினா ஆனார்.

**உங்களுக்கு எதிரான எஃப்ஐஆர் பற்றி நீங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள்? அதில் என்ன குற்றச்சாட்டுகள் இருந்தன?**

ஆம், அதை நானே கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. IPC, 1860இன் கீழ் பிரிவு 506 (சாட்சியை குற்றமிழைத்தல்), 149 (ஒரு குற்றத்தின் பொருளுடன் சட்டவிரோதமாக ஒன்றுகூடுதல்), மற்றும் 34 (ஒரு பொதுவான நோக்கத்திற்காகப் பல நபர்களால் செய்யப்பட்ட குற்றச் செயல்) ஆகியவற்றின் கீழ் என் மீதான குற்றச்சாட்டுகள் இருந்தன. கர்நாடகாவில், சாட்சிகளை மிரட்டல் என்பது ஜாமீனில் வெளிவர முடியாத குற்றமாகும் (கேரளாவில் அது இல்லை). போலீஸ் என்னை எந்த நேரத்திலும் கைது செய்யலாம் என்ற நிலையில் நான் இருந்தேன்.

UAPA குற்றச்சாட்டு ஆரம்பத்தில் இல்லை. நான் 13 டிசம்பர் 2010 அன்று முன்ஜாமீன் கோரி மடிகேரி செஷன்ஸ் நீதிமன்றத்தை அணுகினேன். டிசம்பர் 18 அன்று, UAPA பிரிவு 22ன் கீழ் அரசுத் தரப்பு என்மீது குற்றம் சாட்டி, எனக்கு ஜாமீன் மறுக்கப்பட்டது. என் வாழ்வின் மிகக் கொடுமையான ஏழு மாதங்கள் அது.

**UAPA இன் கீழ் குற்றம் சாட்டப்பட்ட முதல் பத்திரிகை யாளர்களில் ஒருவராக நீங்கள் கருதப்படுகிறீர்களே?**

வடகிழக்கைச் சேர்ந்த பழங்குடியின அடையாள (sic) பத்திரிகையாளர் ஒருவர் இருப்பதாக நான் கருதுகின்றேன். அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. பொடா (பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 2002) மற்றும் MCOCA (மஹாராஷ்டிரா ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் சட்டம், 1999) போன்ற பிற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் கீழும் பத்திரிகையாளர்கள் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

நான் நிறைய கூகுள் செய்தேன். ஆனால் உறுதியான பதில்களை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், பத்திரிகையாளர்கள் மீது UAPA-ன் கீழ் குற்றம் சாட்டுவது வழக்க மான ஒன்று அல்ல.

**காங்கிரஸ் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட UAPA சட்டத்தில் 2010இல் பா.ஜ.க. ஆளும் கர்நாடகாவில் நீங்கள் கைது செய்யப்பட்டுள்ளீர்கள்? 2014க்கு பிறகு பத்திரிகையாளர்கள் இதுபோன்ற சட்டங்களில் கைது செய்யப்பட்டிருப்பது அதிகரித்துள்ளதா?**

ஆம். ஆனால், 2014ஆம் ஆண்டுக்கு முன்பும் பத்திரிகையாளர்கள் மீது எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊடக வியலாளர்கள் தேசத்துரோக குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளனர். (பிரிவு 124A, இதில் ஆயுள் அல்லது மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை). ஒவ்வொரு எஃப்.ஐ.ஆருக்கும் ஒரு விளைவு உண்டு. 2014ஆம் ஆண்டுக்கு பிறகு இந்தப் போக்கில் ஒரு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

**உங்கள் முன்ஜாமீனின் கடினமான நிபந்தனை(கள்) என்ன?**

பெங்களூரில் ஏழு-எட்டு நாட்கள் நீடித்த போலீஸ் விசாரணைக்கு நான் ஆஜராக வேண்டியிருந்தது. இது காலையில் தொடங்கி இரவு வரை தொடர்ந்தது. அவர்கள் என்னை வறுத்தெடுத்தனர். சில கேள்விகள் எனக்கு எரிச்சலை உண்டாக்கும் அளவுக்கு முட்டாள் தனமாகத் தோன்றியது. ஆனால் அவர்கள் விரும்பியது அதுதான். உளவியல் சித்திரவதை போல இருந்தது.

எனது முன்ஜாமீனின் மற்றொரு நிபந்தனை என்னவென்றால், பெங்களூரில் உள்ள விசாரணை அதிகாரியிடம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஆஜராக வேண்டும். ஒவ்வொரு 10 நாட்களுக்கும், நான் கொச்சியி லிருந்து என்னைப் பிடுங்கிக்கொண்டு பெங்களூர் செல்ல வேண்டியிருந்தது. ஏனென்றால் ஒவ்வொரு பயணமும் மூன்று முதல் நான்கு நாட்கள் ஆகும். நான் ரயிலில் பெங்களூர் சென்று, காவல் நிலையத்தில் ஆஜராகி, ரயிலில் திரும்புவேன். இது 7 மாதங்கள் தொடர்ந்தது. அவர்கள் மாதத்திற்கு ஒருமுறை ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்தும் வரை. இப்படி வாழ்வது எளிதல்ல.

**ஒரு முக்கியமான கேள்வி, இதுபோன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொள்பவர்களுக்கு இது உதவியாக இருக்கும். உங்கள் சட்டச் செலவுகளுக்கு நிதி உதவி பெற்றீர்களா?**

எனது செலவுகளின் பெரும்பகுதி - 90%க்கு நானே நிதியளிக்க வேண்டும். செஷன்ஸ் நீதிமன்றம், கர்நாடகா உயர்நீதிமன்றம் மற்றும்




உச்ச நீதிமன்றங்களில் விண்ணப்பித்துள்ளேன். வழக்கறிஞர்கள் எனக்கு தள்ளுபடி அளித்தாலும் அல்லது எனக்காக சேவை மனப்பான்மையில் வாதாடினாலும் நீதிமன்றத் தாக்கல் செலவுகள் இன்னும் உள்ளன.

சட்டச் செலவுகள் என்று நீங்கள் கூறும்போது, நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான செலவும் உள்ளது. விசாரணை தொடங்கியவுடன், நான் மாதத்திற்கு ஒரு முறை மடிகேரி அமர்வு நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. அங்கு பொது போக்குவரத்து இல்லாததால் ஒவ்வொரு பயணமும் ஒரு வழிக்கு ரூ.12,000 செலவாகும். பெங்களூர் போல என்னால் அங்கு ரயிலில் செல்ல முடியாது. நான் ஒவ்வொரு முறையும் ஒரு வண்டியை முன்பதிவு செய்ய வேண்டும். இரவு விடுதியில் தங்க வேண்டியதிருந்தது.

**உங்கள் விசாரணை எப்போது தொடங்கியது?**

போலீசார் 2013ல் மடிகேரி மற்றும் சோமவார்பேட்டை நீதிமன்றங்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர். ஜனவரி 2015ல் மடிக்கேரி நீதிமன்றம் இந்த வழக்கை மடிக்கேரி அமர்வு நீதிமன்றத்தில் ஒப்படைத்தது. எவ்வாறாயினும், சிறப்பு என்ஐஏ (தேசிய புலனாய்வு முகமை) நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்று நான் ஒரு மனுவை முன்வைத்திருந்தேன். அது இப்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே இங்கு மீண்டும் விசாரணை தொடங்கும். ஆனால், பெங்களூரில் என்ஐஏ கோர்ட் இருப்பதால் நான் இங்கு ரயிலில் செல்லலாம். இப்போது எனக்கு செலவு சிறிது குறைவாக இருக்கும்.

**நீங்கள் பணியாற்றிய பத்திரிகைகள் உங்களுக்கு உதவியதா?**

நான் குற்றம் சாட்டப்பட்டபோது தெஹல்காவில் இருந்தேன். போலீஸ் குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கதை, *'Why is This Man Still in Prison'* என்று நவம்பர் 2010ல் தெஹல்காவில் ஒரு கட்டுரை வெளியானது. எனது முன்ஜாமீன் மனுவை தாக்கல் செய்ய கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களின் கட்டணத்தை அவர்கள் செலுத்தினர்.

நிர்வாக ஆசிரியர் ஷோமா சவுத்ரி தனது கட்டுரையில் பத்திரிகையாளர்களை மிரட்டுவது ஒரு ட்ரெண்டாக மாறுவது பற்றி



மூன்று நான்கு பத்திகளை எழுதியிருந்தார்.

தெஹல்காவிற்குப் பிறகு, நான் OPEN என்ற பத்திரிகையில் வேலை செய்தேன். ஆசிரியர் மனு ஜோசப் எனக்கு ஆதரவாக ஒரு செய்தி யாளர் கூட்டத்தில் தோன்றினார்.

ஆனால் நான் உங்களிடம் சொன்னது போல், 90%க்கும் அதிகமான செலவுகளை நான் ஏற்றுக்கொண்டேன். உளவியல் மற்றும் வேதனைகள் 100% என்னுடையது மட்டுமே.

**சமீபத்திய ஆண்டுகளில் UAPA அரசு எதிர்ப்பாளர் களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியிருக்கிறது. இந்த கொடூரமான சட்டத்தின் கீழ் பதினாறு இந்திய ஊடகவியலாளர்கள் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ளனர். இந்தச் சட்டத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளதைப் பற்றி நீங்கள் என்ன கவனித்தீர்கள்?**

திட்டவட்டமான அதிகரிப்பு உள்ளது என்று நான் கூறுவேன். ஆனால் இந்தியாவில் நீண்டகாலமாகவே பத்திரிகையாளர்கள் மீது கிரிமினல் குற்றங்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. பொதுவாக, அவர்கள் மீது தேசத் துரோக குற்றங்களும் சாட்டப்பட்டுள்ளது.

**ஒரு முஸ்லீம் பெண் பத்திரிகையாளரான நீங்கள் புதிய இந்தியாவில் என்ன வகையான துன்புறுத்தலை எதிர்கொள்கிறீர்கள்?**


முன்பு UAPA-வின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களை நீங்கள் பார்த்தால் பெரும்பான்மையானவர்கள் முஸ்லிம்கள் என்பதை நீங்கள் காணலாம். ஆனால் இப்போது விஷயங்கள் மாறி வருகின்றன. இப்போது உயர்சாதி இந்துக்கள் மீதும், பிராமணர்கள் மீதும் வழக்குகள் உள்ளன. பீமா கோரேகான் வழக்கைப் பாருங்கள், சித்தார்த் வரதராஜனுக்கு என்ன நடந்தது என்று பாருங்கள். இப்போது உங்கள் பெயர் முக்கிய மில்லை. உங்கள் பணி முக்கியமானதாக இருந்தால், நீங்கள் அச்சுறுத்தலை எதிர் கொள்வீர்கள்.

ஆதாரம் : Article14.com

2008 பெங்களூர் குண்டு வெடிப்பில், குற்றம் சாட்டப்பட்ட அப்துல் நாசர் மதனி நிரபராதியாக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். ஆனால் அப்போது நான் எழுதிய அந்த கட்டுரை, பெங்களூர் குண்டுவெடிப்பில் காவல்துறையின் சதி கோட்பாட்டை பற்றியதுதான். என்கிறார் ஷாஹினா.

இந்தியாவின் பத்திரிகை துறையில் நல்ல அனுபவம் வாய்ந்த ஷாஹினா, சர்வதேச விருதுகளை பெற்றாலும், இன்னும் UAPA-இன் கீழ் தனது வழக்கை எதிர்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**- Jasmine Fathima** B.Sc, B.Ed, LLB.,


நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G. Noorani P.157-158)*

- நூலிலிருந்து

# இந்தியாவில் முஸ்லிம்கள்

மூலம்: அபுல் ஹஸன் அலீ நத்வீ(ரஹ்)

# "ஹான்காக்கள்" எனும் நிழல் அரசுகள்

ஆங்கிலேய அரசின் மூத்த அதிகாரி, ஷைகு பஸ்லுர் ரஹ்மான் கன்ஜ் முராதாபாதி(ரஹ்) (1313ஹி) அவர்களை சந்தித்தார்கள். அவரது சந்திப்பிற்கு பிறகு அந்த மூத்த அதிகாரி கூறினார்கள், "வரது நல்லுபதேசம் என் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது". இதன் விளைவாக அந்த அதிகாரி ஷைகு அவர்களிடம் கூறினார்:

"நீங்கள் ஒப்புக் கொண்டால் உங்களுக்காக ஒரு அரசு பணியை ஏற்பாடு செய்து தருகிறேன்".

அதற்கு ஷைகு அவர்கள் கூறினார்கள்,

"உங்கள் பணத்தை வைத்து நான் என்ன செய்வது! இறைவனின் பேரருளால் உறங்கு வதற்கு ஒரு மெத்தை, இரண்டு மண் பாத்திரங்கள், தண்ணீர் குடிப்பதற்காக இரண்டு குவளைகள், எங்களது தோழர்களில் சிலர் சோளம் கொண்டு வருகிறார்கள், அதில் நாங்கள் ரொட்டி செய்து கொள்வோம். எனது மனைவி சில காய்கறிகளை வைத்து சமைக்கிறாள் அதனை வைத்து ரொட்டிகளை சாப்பிட்டுக் கொள்வோம் இதுவே எங்களுக்கு போதுமானது."



தொடர் – 19

உஸ்தாத் முஹிப்புல்லா(ரஹ்) அவர்கள் பின்வரும் நிகழ்வை கூறுகிறார்கள்:

ராம்பூர் மாகாணத்தின் ஆளுநர், கல்பு அலி கான் ஷைகு அவர்களை தான் சந்திக்க விரும்புவதாக கூறினார். அப்போது உஸ்தாத் முஹிப்புல்லா அவர்கள், "அவர் தங்களை வந்து சந்தித்தால் அவருக்கு என்ன வழங்குவீர்?" என்று கேட்டார்.

அதற்கு ஆளுநர், "அவர் என்னை வந்து சந்தித்தால் அவருக்கு பரிசாக ஒரு லட்சம் ரூபாய் வழங்குவேன்" என்று பதிலளித்தார்.

உடனே உஸ்தாத் அவர்கள் முராதாபாத் சென்று ஷைகு அவர்களை சந்தித்து "ஆளுநர் தங்களை சந்திக்க விரும்புகிறார், அவ்வாறு நீங்கள் அவரை சந்தித்தால் உங்களுக்கு அன்பளிப்பாக ஒரு இலட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்குவார்," என்று கூறினார்.

ஆனால் ஷைகு அவர்கள் வந்த நபர் கூறிய முக்கியமான விஷயத்தை கேட்காததை போல கூறினார், "அந்த ஒரு இலட்சத்தில் மீது மண்ணை வாரி இறையுங்கள்" என்று கூறினார்.

**சன்மார்க்க கல்வியை பரப்பியதில் சூஃபி ஞானிகளின் பங்களிப்பு**

சூஃபி ஞானிகளது சிந்தினை முழுக்க நிறைந்திருந்தது கல்வி மட்டுமே. கல்வியை மிகவும் விரும்பினார்கள். கல்விக்காக பல சேவைகளையும் செய்தார்கள். சூஃபி ஞானிகளில் பெரும்பாலானவர்கள் கல்வியில் உயர்ந்தவர்கள். அவர்களது கொள்கையே அறிவில்லாமல் இறைவனை அறிய முடியாது. கல்வி அறிவு இல்லாத சூஃபி ஷைத்தானின் பகடைக்காய்என்பது தான்.

இதனால் இவர்களில் யாரானாலும் சரியான முறையில் கல்வியை கற்று தேர்ச்சி பெற்ற பிறகே படைப்புகளை இறைவனை நோக்கி அழைக்கும் மகத்தான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

உண்மையில் கல்வி சார்ந்து ஒரு மிகப்பெரிய எழுச்சியை, விழிப்புணர்வை ஏற்படுத்தியதன் பெருமை சூஃபி ஞானிகளையே சாரும். இந்த பங்களிப்பை நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொண்டார்கள் காஜி அப்துல் முக்ததிர் அல்கிந்தி(ரஹ்) மற்றும் ஷைகு அஹமத்

**“ அவர்களில் செல்வர்களிடம் பெற்று, ஏழைகளுக்கு வழங்குவதற்காக அவர்களின் செல்வத்தில் இறைவன் ஸகாத்தைக் கடமையாக்கியிருக்கிறான்.**

**என்ற இந்த ஹதீஸை இந்திய வரலாற்றில் எந்தப் பகுதியிலும், இந்திய நகரங்களில் எந்த ஒரு நகரங்களிலும் சூஃபியாக்களும், ஷைகு மார்களும் நடைமுறைபடுத்தாமல் இல்லை! ”**

தான்சேரி(ரஹ்). இந்திய முஸ்லிம்களிடையே சன்மார்க்க கல்வியை பரப்பியதன் இறுதி இவர்களையே சென்றடையும். இவர்களிருவருமே அஷ்ஷைகு நஸீருத்தீன்(ரஹ்) மற்றும் மாபெரும் அறிஞர் அஷ்ஷைகு லுத்ஃபுல்லாஹ்(ரஹ்) ஆகியோரின் மாணவர்களாவர்.

அஷ்ஷைகு லுத்ஃபுல்லாஹ்(ரஹ்) அவர்கள் பதினோராம் நூற்றாண்டை சார்ந்த மிகப் பெரும் அறிஞர். சன்மார்க்க கல்வியை பரப்பியதில் மிகவும் பிரபல்யமானவர். இவரை பின் தொடர்ந்து இவரின் மாணவர்களும் சன்மார்க்க கல்வியை பரப்பியதால் இவரது புகழ் பதிமூன்றாம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. இவர் ஷிஸ்திய்யா தரீகாவின் ஷைகாகவும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும் மதரசாக்களும் ஹான்காக்களும் அருகருகே இருப்பதை நம்மால் காண இயலும். ஜோன்பூரில் உள்ள ரஷீதிய்யா ஹான்கா, லக்னோவில் உள்ள மத்ரஸது ஷைகு பீர் முஹம்மத்,டில்லியில் உள்ள மத்ரஸது ஷைகு வலியுல்லாஹ் அப்துர் ரஹீம், கங்கோவில் உள்ள ரஷீத் அஹ்மத் ஹான்கா,

இவையனைத்துமே கல்வி சாலைகளும், ஆன்மீக மையங்களும் ஒன்றோடொன்று பின்னி பிணைந்தவையாகவே இருந்ததன, என்பதற்கான மிகச்சிறந்த உதாரணங்கள்.

**ஆதரவற்றவர்களுக்கான ஆதரவு**

இந்த சூஃபி ஷைகுமார்கள் மற்றும் அவர்களது ஹான்காவின் மகத்தான மற்றொரு பணிகளில் ஒன்று அவர்களது ஹான்காக்கள் ஆயிரக்கணக்கில் மக்கள் ஒதுங்கும் இடமாக திகழ்ந்தது அங்கே அவர்களுக்கான உணவு, குடிபானம், இன்னும் அவர்களுக்கு தேவையான அனைத்துமே அங்கு கிடைத்தது. ஹான்காக்களில் உள்ள இந்த உணவு மேஜைகள் பேரரசர்களின் உணவு மேஜைகள் போலிருந்தன.

இந்த உணவு மேஜைகள் அனைவருக்கும் பொதுவானது நண்பன், பகைவன், அறிந்தவர், அறியாதவர் பணக்காரர், ஏழை இவ்வாறு யார் வேண்டுமானாலும் இந்த உணவு மேஜையில் அமர்ந்து உண்ண இயலும். அஷ்ஷைகு நிஜாமுத்தீன்(ரஹ்) அவர்களது உணவு மேஜை தயாளத்தன்மைக்கு உதாரணம் கூறுமளவிற்கு மிகவும் பிரபல்யமானது. வகைவகையான பல் சுவை நிறைந்த உணவுகள் மேஜையை அலங்கரிக்கும்.

அஷ்ஷைகு ஸைஃபுத்தீன் சிர்ஹிந்தி(ரஹ்) அவர்களது ஹான்காவில் உள்ள உணவு மேஜையில் காலை மற்றும் மாலையில் 1400 நபர்கள் உணவருந்த வருகை புரிவது வழக்கமாக இருந்தது. இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவரவருக்கு விரும்பிய உணவுகளே அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அஷ்ஷைகு ஸைய்யத் முஹம்மத் ஸயீத்(ரஹ்) அவர்கள் பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகப்பெரிய சூஃபி ஞானி. இவர்களை குறித்து ஒரு நிகழ்வை பின்வருமாறு பதிவுசெய்கிறார்கள்;

இவரது ஹான்காவில் ஐந்தாயிரம் பைஅதிகள் நிரந்தரமாகவே தங்கியிருந்தார்கள். இதுவல்லாமல் வெளியிலிருந்து ஹான்காவிற்கு வருகை தந்து உணவு அருந்தியவர்களது எண்ணிக்கையும் 5 ஆயிரமாக இருந்தது. இவர்களுக்கு உணவு பரிமாறுவதற்கே ஆயிரம் நபர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள்.

**“சமூகத்தால், குடும்பத்தால் ஒதுக்கப் பட்டவர்களுக்கு, ஆதரவோ, மகிழ்ச்சியோ தடுக்கப்பட்டவர்களுக்கு ஷைகுமார்களின் ஹான்காவின் அன்பு கதவுகள் என்றுமே திறந்திருந்தது. பிள்ளைகளால் விரட்டப்பட்ட ஒதுக்கப்பட்ட பெற்றோர்கள். இவர்கள் உடனே விரையும் இடமாக ஹான்காக்களே விளங்கியது.”**

சுல்தான் ஃபரக் சியார் அவர்களது அரசு அதிகாரிகளில் ஒருவரான ரோஷனுத் தவ்லா ஷைகு அவர்களை சந்தித்து 60 ஆயிரம் ரூபாய்களை ஒரு ஹான்காவை கட்டுவதற்காக வழங்கினார்கள். ஷைகு அவர்கள் இந்த பணத்தை இங்கே வைத்து விட்டு சிறிது ஓய்வெடுத்து வரலாமே என்று கூறினார். அவர் சென்றதும் இந்த மிகப்பெரிய தொகை முழுவதையும் அம்பாலா, தானேஸ்ர், சிர்ஹிந்த், பானிபட் ஆகிய ஊர்களில் வசிக்கும் ஏழைகள், விதவைகள், அனாதைகள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள்.

சிறிது நேரம் கழித்து திரும்பிய அதிகாரி ரோஷனுத் தவ்லா அவர்களிடம் ஷைகு கூறினார்கள்: “ஏழைகள், விதவைகள், அனாதைகளுக்கு உதவி செய்து கிடைக்கும் மிகப் பெரிய கூலியை ஒரு ஹான்காவை கட்டி அடைந்து விட முடியாது”.

ஒருமுறை சுல்தான் முஹம்மத் ஃபரக் சியார், அதிகாரி ரோஷனுத் தவ்லா, அமீர் அப்துல்லாஹ் கான் மூவரும் சேர்ந்து 3 இலட்சம் ரூபாய்களை ஷைகு அவர்களுக்கு அனுப்பியிருந்தார்கள். இந்த ஒட்டுமொத்த தொகையையும் ஷைகு அவர்கள் அருகிலிருந்த கிராம மக்களுக்கும், பாரம்பரியமிக்க குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் உடனே பங்கிட்டு கொடுத்தார்கள்.

**உஸ்தாத் முனாளிர் அஹ்ஸன் கீலானி(ரஹ்) இவ்வாறு கூறினார்**

நிச்சயமாக இந்தக் ஹான்காக்கள் ஏழைகளையும் பணக்காரர்களையும் இணைக்கும் பாலமாக இருந்து. சூஃபியாக்களது இந்த ஹான்காக்கள் அரண்மனைகள் போல திகழ்ந்தது. மன்னர்களே நன்கொடை என்னும் வரியை இந்த ஆன்மீக அரண்மனைகளுக்கு செலுத்திக் கொண்டிருந்தனர்.

அஷ்ஷைகு நிஜாமுதீன்(ரஹ்) அவர்களை அவரது காலத்தின் சுல்தானாக இருந்த ஹில்ர் கான் சந்தித்து ஆன்மீக பயனை அடைவது வழக்கமாக இருந்தது.

அதேபோல அலாவுதீன் கில்ஜி(ரஹ்) அவர்களுக்கு இந்திய நாடே வரி செலுத்தும். ஆனால் இந்த ஆன்மீக கோட்டைகளுக்கு நன்கொடை என்னும் வரியை இந்த மாமன்னர் செலுத்துவார்.

(இவ்வாறு ஏழைகளையும் செல்வந்தர்களையும் ஒன்றிணைக்கும் கேந்திரமாக ஹான்காக்கள் விளங்கியது.) செல்வந்தர்களும் ஏழைகளும் இருவரும் ஹான்காவிற்கு வருகை புரிந்து தங்களது ஆன்மீக தேவைகளை சமமாக தீர்த்துக் கொண்டனர். அதிலும் குறிப்பாக ஏழைகளது அனைத்து தேவைகளும் அங்கே நிறைவேற்றபட்டது.

“அவர்களில் செல்வர்களிடம் பெற்று, ஏழைகளுக்கு வழங்குவதற்காக அவர்களின் செல்வத்தில் இறைவன் ஸகாத்தைக் கடமையாக்கியிருக்கிறான்.”

என்ற இந்த ஹதீஸை இந்திய வரலாற்றில் எந்தப் பகுதியிலும், இந்திய நகரங்களில் எந்த ஒரு நகரங்களிலும் சூஃபியாக்களும், ஷைகுமார்களும் நடைமுறைபடுத்தாமல் இல்லை என்று அறுதியிட்டு கூறம் அளவிற்கு இந்த மாபெரும் பணி நடைபெற்றது.

**மனிதநேயத்தின் உறைவிடம்**

மனிதர்கள் அனைவரையும் மதம், கலாச்சாரம், பண்பாடு ஆகிய வேறுபாடுகளை தாண்டி நேசிக்க வேண்டும். அனைவருக்கும் தேவையான உதவிகளை புரிய வேண்டும். அவர்களது சுக, துக்கங்களில் பங்கெடுக்க வேண்டும் என்ற சிந்தனையை நிச்சயமாக இந்த சூஃபியாக்களும் அவர்களது ஆன்மீக சபைகளும் மக்களிடையே ஆழமாக விதைத்தது.

“படைப்புகள் யாவும் அல்லாஹ்வின் குடும்பமாகும் படைப்பினங்களில் அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமானவர்கள், யார் அவனுடைய குடும்பத்தாரிடம் உபகாரமாக நடந்து கொள்கிறாரோ அவரே ஆவார்.” என்று நபி(ஸல்) அவர்கள் கூறிய இந்த நபிமொழியையே இந்த சூஃபியாக்கள் தங்களது அடையாளமாக கொண்டிருந்தனர்.

இதனால் அவர்களது உள்ளங்கள் முழுக்க இரக்கம், பரிவு, மனிதநேயம் ஆகியவற்றால் நிரம்பியது.

ஷைகு நிஜாமுதீன்(ரஹ்) அவர்கள் ஒருமுறை கூறினார்:

“ஒருமுறை ஒரு மனிதர் வந்து என்னிடம் அவருடைய சங்கடத்தை பகிர்ந்தார். அவர் கூறியதை கேட்டதும் எனது உள்ளத்தில் மிகுந்த கவலை உருவானது. அவருக்கு ஏற்பட்ட மனவேதனையை விட அதனை கேட்டு எனக்கு ஏற்பட்ட மனவேதனை கடுமையாக இருந்தது.”

மற்றொரு முறை இவ்வாறு கூறினார்கள்:

“பிறரிடம் காட்டும் கருணை, உடைந்த உள்ளத்தை ஆறுதல் படுத்துவது, பிறரை மகிழ்விப்பது ஆகியவற்றை விட மறுமை நாளில் மிகச் சிறந்தது வேறெதுவும் இல்லை.”

இதன் விளைவாக உடைந்த உள்ளங்கள், வேதனையில் தவிக்கும் இதயங்கள் தங்களது சங்கடங்களுக்கான, துயரங்களுக்கான நிவாரணத்தை இந்த ஹான்காக்களிலேயே பெற்று கொண்டார்கள்.

சமூகத்தால், குடும்பத்தால் ஒதுக்கப்பட்டவர்களுக்கு, ஆதரவோ, மகிழ்ச்சியோ தடுக்கப்பட்டவர்களுக்கு ஷைகுமார்களின் ஹான்காவின் அன்பு கதவுகள் என்றுமே திறந்திருந்தது. பிள்ளைகளால் விரட்டப்பட்ட ஒதுக்கப்பட்ட பெற்றோர்கள். இவர்கள் உடனே விரையும் இடமாக ஹான்காக்களே விளங்கியது.

இவர்கள் ஹான்காக்களில் சூஃபி

ஷைகுமார்களது ஆதரவில் வாழ்ந்தார்கள். தங்களது இல்லத்தில் தாங்கள் பெற்றுக் கொள்ளாத நிம்மதி, பாசமிகுந்த உறவுகள் என அனைத்தையும் இங்கு பெற்று கொண்டார்கள்.

இந்த ஹான்காக்கள் அனைத்து மதங்களைச் சேர்ந்த நபர்களும் வந்து செல்லும் இடமாக விளங்கியது. தங்களுக்கான ஆதரவை, ஆறுதலை தங்களது பிரச்சினைகளுக்கான நிவாரணத்தையும் பெற்று கொண்டார்கள்.

ஷைகு நிஜாமுதீன் அவர்களது ஆன்மீக குருநாதர் ஷைகு அவர்களை டில்லிக்கு அனுப்பும் போது இவ்வாறு கூறினார்:

“நீங்கள் ஒரு பெரிய நிழல் தரும் மரம் போல உருவாகுவீர். அதன் நிழலிலே இறைவனது படைப்புகள் இளைப்பாறும்.”

சுமார் 70 ஆண்டுகள் எத்துனை ஆயிரம் மக்கள் டில்லியிலிருந்தும் பல தொலை தூரங்களிலிருந்தும் இந்த ஆன்மீக மரத்தின் நிழலில் இளைபாறியிருப்பார்கள் என்று வரலாறு சாட்சியமளிக்கும்.


இந்த சூஃபி ஞானிகளது முயற்சியால் நிழல் தரக் கூடிய பல்வேறு ஆன்மீக மரங்கள் இந்திய நாடு முழுக்க படர்ந்து அனைத்து மக்களுக்குமே நிழல் கொடுத்தது. அதன் நிழல் களில் இளைப்பாறியவர்கள் இளைப்பாறிய பிறகு ஒரு புது வாழ்க்கையை துவக்கினார்கள்.

**தொடரும்.....**

**தமிழில்:**

**மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**


# புரோகித் – இன் லேப்டாப்.....!




வேர்கள் வெளியீட்டகம்

- கலோனல் பிராஷாந்த் புரோகித், நமது இராணுவத்தில் பணி புரியும் ஓர் அதிகாரி. அதிலும், இராணுவத்தின் உளவுப் பிரிவில் வேலை பார்த்தவர். அதே நேரத்தில் அபிநவ் பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்பிலும் செயல்வீரராக இருந்தவர். இராணுவ செலவிலேயே இஸ்ரேல் சென்று இந்து ராஷ்டிராவுக்கான அடிப்படை வேலைகளைச் செய்தவர். இஸ்ரேலின் தலைநகரான டெல் அவீவ்-இல், இந்து ராஷ்டிராவுக்கான தலைமையகத்தை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்தவர். இந்தத் தலைமையகம் இன்றும், இஸ்ரேலில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- இவற்றையெல்லாம் மராட்டிய தீவிரவாத படையின் ATS : Anti Terrorism Squad, தலைவர் ஹேமந்த் கர்கரே கண்டுபிடித்தார். அம்பலப்படுத்தினார். இதற்கான ஆதாரங்கள் புரோகித் இன் லேப்டாப்பை (மடி கணிணியைச்) சோதனை செய்தபோது கிடைத்தன. நீதிமன்ற சாட்சியங்களுள் இந்த லேப் டாப்பில் இருந்தவை முக்கியமானவை. அவற்றை நீதிமன்ற ஆவணங்களிலிருந்தே தொகுத்து தந்திருக்கின்றோம். இப்போது இவர் சிறையிலிருக்கின்றார் பலப் பல குற்றங்களை புரிந்ததால். ஆனாலும் அவருக்கு அரசு, ஊதியம் வழங்கிக் கொண்டே இருக்கின்றது....?

படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் - பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்

தமிழில் : மு.குலாம் முஹம்மது, M.A., in JMC.,

விலை ரூ.20/-

போன் : 7401213394 / 7358278146 / 8148129887



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002